ஸ்ரீ ராம ஜெயம்

# பெரிய எழுத்து

# ஸ்ரீ கருடபுராண வசனம்

(படங்களுடன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

புராணம் என்பது பழமை வாய்ந்தது என்பது பொருள். பதினெண் புராணங்களை வடமொழியில் இயற்றியவர் வியாச முனிவர். சிவபுராணம் 10, விஷ்ணுபுராணம் 4, பிரமபுராணம் 2, அக்கினி புராணம் 1, சூரிய புராணம் 1.

சிவனுக்கு வாகனம் இடபம். விஷ்ணுவுக்கு வாகனம் கருடன். பத்துப் புராணங்களையுடைய சிவனுக்கு வாகனமாகிய நந்தியெம் பெருமானுக்கு ஒரு புராணமும் ஏற்படவில்லை. ஆனால், நான்கு புராணங்களை மாத்திரம் உடைய விஷ்ணுவின் வாகனமாகிய கருடன் பெயரால் ஒரு புராணம் ஏற்பட்டுள்ளமை கருடபுராணத்துக்குரிய சிறப்புக்களில் ஒன்றாகும்.

கருடன் கேட்கச், சூதமுனிவரால் சொல்லப்பட்டமையால் இப் புராணம் கருடபுராணம் எனப் பெயர் பெற்றது. மனிதன் இறந்தபின் ஆன்மாவின் நிலை என்ன என்பதற்குரிய விடை இதில் காணப்படுகின்றது. பாவமானது புண்ணியமாவது என்று சொல்லுவோருக்கு பாவ, புண்ணியத் தன்மையை விளக்குவது இந்நூல். ஒவ்வொரு இந்துவின் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய இந்நூலை அன்பர் கோடீஸ்வரன் அவர்கள் தமது தந்தையாருடைய ஞாபகார்த்தமாக அச்சிட்டு வெளியிட்டுள்ளமை தந்தையாருடைய ஆத்மசாந்திக்கான வேண்டுதலாகும்.

" எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் - அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு" (திருக்குறள்)

- ஆத்மஜோதி- நா.முத்தையா

காலஞ்சென்ற வி.ஆறுமுகம் அவர்களின்
புத்திரர்கள்
(ஆறுமுகம் அன் சன்ஸ்)
ஓமந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

இன்றைய கலியுக காலத்தில் நாம் அமைதிபெற வேண்டுமானால் நாமபஜனை, இறைவன் புகழைப் படித்தல், பரவுதல் முக்கியமானதாகும். இந்த வெளியீடான கருடபுராணத்திற்கும், இன்று நடைபெறும் சம்பவங்களுக்கும் நிறையத் தொடர்புகள் உண்டு என்பதை ஆழ்ந்து சிந்தித்தால் புலப்படும்.

இப்புராணத்தைக் கலியுக காலத்தில் வெளியிடுவது மிகவும் பொருத்தமானதாகும். இந்தப் புராணத்தில் என்ன என்ன பாவம் செய்தவர்கள் என்ன என்ன பயன்களையும் தண்டனையையும் அனுபவிப்பார்கள் எனக் காட்டப்பட்டுள்ளது.. இவை மறுபிறவியில் நடப்பதாக அலட்சியப்படுத்த முடியாது என்பதற்கு எங்கள் முன்னிலையிலேயே நடைபெறுவதைப் பார்க்கும் போது தெரிகின்றது.

புராணங்கள் என்பன வெறும் கட்டுக்கதைகள் என்பதும் பொய்யாகின்றது. இந்தப் புராணத்தைக் காலஞ் சென்ற வி. ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தமாக, எமது மன்றத்தின் மூலம் வெளியிடுவதில் பெருமையடைகின்றோம்.

இதற்குத்தூண்டுதலாக இருந்தவர் திரு. ஆ. சண்முகரத்தின சர்மா என்பதையும் மறக்க முடியாது. இதற்கு அணிந்துரை வழங்கிய 'ஆத்மஜோதி' திரு. நா. முத்தையா அவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வணக்கம்.

இந்துமாமன்றம்.
ஓமந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை

பூர்வபுண்ணிய வசத்தால் ஏற்பட்ட மானிடப் பிறவியெனவே இந்தப்பிறவியின் பயனை எவராலும் எப்படியும் அறிய முடியாது. ஆகையால் மரணம் என்று ஒன்று இருப்பதை நாம் எல்லோரும் அறிந்து கொள்ளல் வேண்டும். ஆனால் மனித உருவில் மறைந்திருக்கும் நாம் ஆணவத்தினால், மரணகாலம் நெருங்கும் வரை பாவ புண்ணியங்கள் இருப்பதை மறந்து விடுகின்றோம்.

எங்கள் வருணாச்சிரம தகுதிநிலைக்கு ஏற்றவாறு அபர கிரியைகள் முதலியவற்றை நாம் செய்ய முன்வரும் வேளைகள், தமிழ் மொழி மூலம் ஓர் அரிய பொக்கிஷம் உண்டு என்பதை அறிய முடியும். அது தான் கருடபுராணம் ஆகும். இந்தக் கருடபுராணத்தை ஸ்ரீமத் நாராயண மூர்த்தி அவர்கள் மூலம் கேட்டமையால் "கருடபுராணம்" எனப் பெயர் பெற்றது.

இத்தகையதொரு மகிமை வாய்ந்த புராணத்தை நாம் எல்லோரும் வாசிப்பது மட்டுமல்ல, அதிலுள்ள கிரியை முறைகள், தானமுறைகள் பற்றிய விளக்கங்களையும் அறிந்து கொள்ளல் வேண்டும்.

இப்புராணத்தைத் தம் பெற்றோர்கள் மரண காலம் தொடக்கம் அந்தியெட்டிக் காலம் வரை நாள் ஒன்றுக்கு ஓர் அத்தியாயம் வீதம் வாசித்து வந்தால் இறந்தவர்களின் ஆன்மா நிச்சயம் இறைவன் திருப்பதம் சேர்ந்து இணையில்லாப் பேரின்ப முக்தி அடையும் இது முக்காலம் உண்மை.

ஓம் சாந்தி - சாந்தி

ஆ. சண்முகரத்தின சர்மா
ஓமந்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ ராம ஜெயம்

பெரிய எழுத்து

# ஸ்ரீ கருடபுராண வசனம்

(படங்களுடன்)



இதன் விலை ரூபா 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்



# ஸ்ரீ கருடபுராண வசனம்

## நூன்முகம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

### திருவடிகள்

கைம்மழுழுவிலேயெஃகங்கதிர்நிலாச்செஞ்சடைக்கார்க்களன்கரந்து
மைம்மலிகார்க்குழலியஞ்சனாதேவிமணிவயிறுவந்தோன்றல்
தெம்மலிமுப்புரமெரித்தசெயலெற்றென்றும்பருமேசெப்பிவாழ்த்த
விம்முறநீலிலங்கையிற்பல்புரமெரித்தவிறலோனருள்விரும்பிவாழ்வாம்

### பெரியதிருவடிகள்

வரியதிருவடிபுரையும்விழியுடையவிந்தையணிவயிறுவந்து
கரியதிருவடிவுடையமறைமுதலிபிவரும்வாகனம்தாயோன்
உரியதிருவடியவன்றன்கணவன்கீர்த்தியெனவுரைத்தேனெஞ்சே
பெரியதிருவடியையினிப்பேணுதியேற்புறவாதபேறுற்றாயே.

### ஸ்ரீமத் வேதாந்தாசாரியர்

திருமான்மெய்ப்பரனேனோர்திறனிலாவுயிர்களெனச்செய்யவேதம்
ஒருவாமனுரைசெயவுமஃதுணராதிழுதையர்செய்குருவாதந்துப்
பெருவாதமுன்படுமாறியற்றிவயம்பெறுநங்கள்பிரகனைப்பில்லாக்
காருமாதவன்சமயங்கழுமவருதாப்புலம்மாற்றகருதிவாழ்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமத் பாஷியகாரர்

முதுமறைநீணறியோடுமுரணியிகன்மொய்ச்சமயமுரணீத்தே
மதுவிரிபைந்துழாயலங்கன்மணிவண்ணன்சமயமெறுமலிந்திட்டோங்க
எதுபொருளுமுணராருஞ்செம்பொருளையினிதுணர்ந்துய்யயாணர்ப்
புதுவெயில்சூழ்மணிமாடப்பூதபுரிபுங்கவன்றாழ்போற்றிசெய்வாம்.

## ஸ்ரீமத் பராங்குசர்

விண்ணவர்க்குஞ்செவியூறநாவூரவிரிதமிழ்மாமறைவிரித்து
மண்ணவர்க்குவகுத்தவம்மான்மலிபொருநற்றிருக்குருகூர்வந்தவள்ளல்
எண்ணவர்க்குந்தந்துபிறப்பெண்ணனைத்துமிழுக்குறவாகிமையோர்க்குந்தீக்
கண்ணவர்க்குமெட்டாதகதிபெறயாமவன்கழல்கள்கருதிவாழ்வாம்.

## ஸ்ரீமத் தெய்வநாயகியார்

நய்யாதநான்மறைகணவிற்றுமொருசெழுமுதனன்னிறத்துவைகி
மெய்யாதவம்புரிந்தோர்விதுவணிவோன்விரிமலரோன்விண்ணோராகப்
பெய்யாதுபுரிந்தவரைப்புரந்தளுக்குங்கடைக்கனருள்பொழிந்துபுன்கண்
செய்யாளையயிந்திபுரத்திலமர்செய்யாளைசிந்தித்துய்வாம்.

## ஸ்ரீமத் தெய்வநாயகப்பெருமான்


நயந்தரிக்கும்படைக்குமளிக்குந்தொழிற்பூணற்குணக்குக்கடலாய்நல்கு
வியந்தரிக்குமுக்கணென்கணுயிரங்கணுடையார்க்கும்விபுதர்க்குந்தன்
சயந்தரிக்குந்திகிரிசிரம்பொறுக்கிமயிந்திரபுரத்துத்தலத்தின்மேய
யைந்தரிக்குந்தெய்வநாயகப்பெருமான்மானடியைவழுத்தல்செய்வோம்.

## பெரியார் அருளிச்செயல்

வாணிலாமுறுவற்சிறுநுதற்பெருந்தோண்மாதரார்வனமுலைப்பயனே
பேணினேனதனைபிழையெனக்கருதிபேதையேன்பிறவிநோயறுப்பான்
ஏணிலேனிருந்தேனெண்ணினேனெண்ணியிலையவர்கலவியின்றிறத்தை
நாணினேன்வந்துன்றிருவடியடைந்தேனையிசாரணியத்துளெந்தாய்.

ஏதம்வந்தணுகாவண்ணநாமெண்ணியெழுமினோதொழுதுமின்றிமையோ
நாதன்வந்திறைஞ்சுமையிசாரணியத்தெந்தையைச்சிந்தையுள்ளவைத்துக்
காதலேமிகுந்தகலியன்வாயொலிசெய்மாலைதான்கற்றுவல்லார்கள்
ஓதநீர்வையமாண்டுவெண்குடைக்கீழும்பருமாகுவர்தாமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாவிஷ்ணு, கருடபகவான், சூதமாமுனிவர், சௌனகாதிரிஷிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் அத்தியாயம்

திருவரையும் திருமார்பணுகிய திருமாலினது உந்தியில் தோன்றிய நான்முகக்கடவுள் படைத்த இடம் அகன்ற இப்புவியின்கண்ணே தவம்புரிவதற்குத்தகுந்த தானமாய், புராணங்களென்னும் பைங்கூள் விளையும் நல்லசெந்நிலனாய், அடவிகளுக்கெல்லாம் அரசெனற்பாலதாய விளங்கா நின்ற* நைமிசாரணியத்தில் வசிக்கின்றவர்களும், வேத வேதாந்தங்களை ஐயந்திரிபற உணர்ந்தவர்களும், பிரம ருத்திரேந்திராதி தேவர்களை நேரானவர்களும், சொரூபத்தியானம் செய்கிறவர்களும் ஸ்ரீ அரிகதா சங்கீர்த்தனசீலர்களும் ஆகிய சௌனகாதி மகரிஷிகளைச் சேவிக்கவிரும்பிப் புராணம் புகல்வோரில் தலைமை பெற்றவராகிய சூதமாமுனிவர் அந் நைமிசவனம் வந்து அச்சௌனகாதி அருந்தவர்களைக் கண்டு தண்டஞ்சமர்ப்பித்து; அம்மாமுனிவர்கள் உவந்து ஈந்த ஆசனத்தில் விநயத்தோடு வீற்றிருந்தனர்.

பின்னர் ஆங்கிருந்த ருஷிகளெல்லாம் சூதபுராணிகரைப்பார்த்து அஞ்சலிசெய்து சூதமாமுனிவரே? தேவரீர் முகமாய் வைணவ சைவபுராணங்களைக்கேட்டு மிகக் களித்தோம். பிரம்மனைக் குறித்தவை இராசத புராணமாகலாலும், சிவனைக்குறித்தவை தாமதபுராணமாகலாலும், முதற்கடவுளைக் குறித்தவை சாத்துவிக புராணமாகலாலும், விவ்விஷ்ணு புராணமே தத்துவம் சொல்லுமாகலாலும், விஷ்ணுபுராணம் ஒன்றனை இன்னும் கேட்க விரும்புகின்றோம தேவரீரோ பகவதமிசராகிய வேதவியாச பகவானுடைய மாணுக்கராயினீர். அல்லது உம் அப்பகவான் யாவற்றையும்ஓதுவித்தருளத் தெளிந்தீராயினீர் நீர் அறியாதது ஒன்றுமிலது தர்மமார்த்த கர்மமோட்சங்களைக் கொடுப்பதாகிய ஒரு சாத்துவிகபுராணத்தை எங்கட்குச் சொல்லும்படி கருணைக்கோரில்லமாய் எழுந்தருளி யிராநின்ற

---

* நைமிசாரணியம்-நூற்றெட்டுத் திருப்பதியில் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவரீரைப்பிரார்த்திக்கின்ரேம். ஓ! சூதமாமுனிவரே? உலகில் ஜீவர்களுக்குச் ஜனனமும் மரணமும் எக்காரணத்தால் உண்டாகின்றன? எந்தச் செய்கையால் நரகமும் சுவர்க்கமும் வருகின்றன? எக்காரணத்தால் திராப்பிணி வரும்? எப்போது பிரேதஜென்மம் வரும்? எதனுல் அந்தச் சன்மம் நீங்கும்? எதனுல் முத்தி கிடைக்கும்? இவற்றையெல்லாம் எங்கட்குத் தெளிவுறச் சாற்றவேண்டும் என்று வேண்டினர்.

உடனே சூதமாமுனிவர் வியாசபகவானுடைய சீர்பாதங்களைத் திருவுளத்தில் தியானித்துச் சிரமேற் கரங்குவித்துச் சர்வசகத்காரணனுகிய ஸ்ரீமந்நாராயணனைத் தொழுது சௌனகாதி முனிவர்களைநோக்கி அந்தணர்களே! யாவற்றையும் முற்றும் உணர்ந்த நீர் நன்குவினவினீர். உங்களுடைய வினவிற்கு விடையாக ஒரு நல்ல கதை சொல்லுகின்றேன், மனதை ஒரு வழிப்படுத்திக் கேட்பீராக, ஓ ரிஷிகளே; அயனரனுதி தேவர்கட்கு தேவனும், சர்வாந்தர்யாமியாயும், சிருஷ்டி, திதி, சங்காரங்களை லீலையாகச் செய்கின்றவனும், புருஷோத்தமனும், பரமபத வாசியாயுமாகிய ஸ்ரீமந்நாராயணனை முன்னெருகாலத்தில் ஸ்ரீகருடபகவான் பணிந்து நீர் இப்போது வினவியதுபோலவே உலக நன்மையின் பொருட்டு வினவி விடைபெற்றனன். அவற்றைச் சொல்லுகின்றேன், கேண்மின், அக்கருடபகவான் பரமனை நோக்கி ஏ ஜகந்நாதா! பரந்தாமா! எள்ளினுள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்தவனே! அயனரனுதியரும் இன்னதன்மையனென்றுமறியாத ஸ்ரீஹரியே! ஜீவர் உலகில் யாதுகாரணத்தால் பிறந்து இறந்து சுவர்க்கங்களை நரகங்களை அடைகின்றனர்? எந்தப் பாபத்தால் * பிரேதஜன்மம் அடைகின்றனர்? எந்தப் புண்ணியத்தால் அதை நீக்குகின்றனர்? எக்கருமத்தால் நிரதிசய இன்பவீடாகிய நினது உலகை எய்துவர்? முன் செய்த பாவங்களை மரணகாலத்தில் எதனுல் நீக்கி நல்லுலகுபெறுவர்; பாபங்களெல்லாம் எக்கருமத்தால் நிவர்த்தியாகும்? ஓ பரந்தாமனே! மரிக்குங் காலத்தில்

* பிரேதஜன்மம்-பூதப்பிரேதபசாசாதி சன்மங்களிலொன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவரை நினைத்தால் நற்கதி கிடைக்கும்? இவற்றையெல்லாம் அடியேனுக்குச் சாற்றியருள வேண்டுமென்று பிரார்த்திக்க, பிரபுவும் நாரத்தில் அயனம் செய்கின்றவனும், சாரசமுகம் கொள்கின்றவனும், எல்லாருடைய மனத்திலுலும் உறைந்து யாவற்றையும் பார்க்கின்றவனும், சகலசெயல்களுக்கும் காரணமாகியவனும் ஆகிய அந்த அரிபகவான் கருணைபுரிந்து கருடனைப் பார்த்து, மகாபராக்கிரமசாலியாகிய கருடா! நன்குகேட்டனை. நீ கேட்டவையெல்லாம் உலகில் இரகசியமாயுள்ளன. அவற்றைக் கூறுகின்றோம் கேண்மின். பலநாள் வாழ்ந்தாலும் ஒருநாளில் இறப்பது சத்தியம் என்பதை ஒருசேதனனாயினும் நினைக்கின்றான் இலன், பிறத்தலுற்றபின்பு இறத்தல் உண்மையென்று நினைக்கின்றவன்கோடியில் ஒருவன் உளனோ? இலனோ? உயிர்கவரும் கூற்றுவன் ஒருவனுளன் என்றும், இறுதிக்காலத்தில் அவன்கையில் அகப்படவேண்டும்என்றும், அடுத்தடுத்து நினைத்துத் திடுக்கிடுகிறவன்யாவனோ அவனொருவனே நேற்றுபோயிற்று, இன்றுபோயிற்று என்றும், வாணாள் வீணாளாய்க் கழிக்கின்றதே, நமன் வந்து விடுவனேஐயோ என்னசெய்வேன்என்று அஞ்சி நல்லறம் செய்வான், ஒருவன் தனக்கு உரிய கருமங்களைச் செய்வானேல் அக்கருமங்களே அவனைக்காப்பாற்றும் இன்னமரபில் பிறந்தவனுக்கு இன்ன கர்மங்கள் தாம் உளவென்று வேதசாஸ்திரங்கள் கூறுகின்றன. கலுழனே! அவற்றையுணர்ந்து நான்பிறந்த குலத்திற்கு ஏற்பனவாகிய கர்மங்களைத்தவிர்த்து, மேலினும்கீழிலும் செல்லாமல் உரிய கர்மங்களையே யாவன் புரிகின்றானோ அவனே எவ்விடத்திலும் மேன்மை பெறுவன்.

பிர்ம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர் என்று நான்கு வருணத்தார் உளர், அவர்களில் பிராமணருக்குத் தானங்கொடுத்தலும், வாங்கலும், யாகம் செய்தலும் செய்ய உரியவர்கட்குச்செய்வித்தலும், வேதமோதலும் ஓத உரியவர்களுக்கு ஓதுவித்தலும். ஆகிய ஆறுகர்மங்கள் உளவாம். க்ஷத்திரியருக்கும் வைசியருக்கும் தானம் கொடுத்தலும், யாகம்செய்தலும்,வேதமஓதலும் ஆகிய,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று கருமங்கள் உரியவாய், சூத்திரருக்கு முதல் வருணத்தோர் ஏவும் தொழில்களைப்பணிந்து செய்தலே உரியதாகும். ஓ! கருடா? அவரவர் மரபிற்குரிய ஒழுக்கத்தில் நிற்றலே அவரவருக்குப் பெரிய தவமாகும். அத்தவத்தில் வழாது ஒழுகுவர் யாவரோ? அவரே போகமும் யோகமும் ஒருங்கேய்தி நெடுநாள் வாழ்ந்து இறுதியில் நல்லுலகு அடைவர். ஆகையால் யாவரும் தத்தமக்கு உரிய ஒழுக்கத்தில் நிற்பதுவே சிறப்பாகும். யாவராயினும் எப்பொருளையும் விழையலாகாது எத்தன்மைத்தாய மாதவத்தையும் அந்த இச்சைகொடுத்து விடும் அவாவையொழித்தவரே பேரறிஞராகுவர் என்றருளிப் பின்னும் அருளிச்செய்கின்றனர்.

முதலாம் அத்தியாயம் முற்றிற்று.

---

# இரண்டாம் அத்தியாயம்

சூதமா முனிவர் நைமிசாரணிய வாசிகளே! பின்னர் வாசுதேவன் பறவைக்கரசே? உலகில் எண்பத்து நான்குலட்சம் யோனிப்பேதங்கள் உண்டு, அவை அண்டசம்-உற்பிசம் - சராயுசம் - சுவேதசம் - என்ற நான்கு பிரகாரமாய்உள. அந்த நான்கு வகுப்பில் முட்டையினின்றும் இருபத்தொரு லட்சம்பறவை முதலியவைகளும்,பூமியினின்று இருபத்தொரு லட்சம் மரம் முதலியவைகளும், கருப்பப்பையினின்றும் இருபத்தொரு லட்சம் மனிதர் முதலானவர்களும் வேர்வையினின்றும் இருபத்தொருலட்சம் கொசு முதலியவைகளும் தோன்றுவனவாகும். கலுழனே! ஜன்மங்களில் மானிடஜன்மம் கிடைப்பது அரிதினும் அரிது அச்சன்மமே புண்ணிய சன்மமாகும் ஒருபொருளைப் பார்க்கக்கண்ணும், கேட்கச்செவியும், இனிமையையுணர நாவும், நாற்றமறிய நாசியும் காமவின்பத்துக்குமெய்யும் நன்மைதீமைகளைப்பகுத்துணர உணர்வும் உளவாயினபடியால், மானிடசன்மமே சிறப்புடையதாகும் அம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிட சன்மத்தில் பிராமணர்-க்ஷத்திரியர்-வைசியர்-சூத்திரர் என்று நான்கு சாதியாருளர். ஆடையொலிக்கும் வண்ணாரும் - தோல்தைப்போரும் - நாட்டியமாடுவோரும்-ஓடம்விடுவோரும்-கம்மாளரும்* நுளையரும்-வேடரும்-ஆகிய இவர்கள் சூத்திரசாதியாரினும் தாழ்ந்தசாதியாராவார். உணவும் உறக்கமும்-அச்சமும்-புணர்ப்புமாகிய இவைகள், எல்லாப் பிராணிகளுக்கும் இயற்கையாய் உள்ளனவாகும், ஞானமாத்திரம் எல்லா உயிர்களுக்கும் பொதுவன்று சிலதேசங்களில் மானிடர் ஒரேகாலுடையவராயும் இரண்டுகால்களுடையவராயும் அனேககால்களுடையவராயும் இருக்கின்றனர். கிருஷ்ண சாரமென்ற மான் எந்தப்பூமியிலிருக்கின்றதோ, அப்பூமியே புண்ணியபூமியாகும். அப்பூமியில் தேவர்களையும் - மகரிஷிகளையும் - பிதிரர்களையும், பூசிப்போருக்கு அதிக நன்மை உண்டாகும். அப்புண்ணிய பூமியில் முப்பத்து முக்கோடி தேவர்களும் எப்போதும் சந்நிதி கொண்டிருக்கின்றார்கள்.

கலுழனே? பூதப்பிரேத பைசாசாதியுள் தேகம் பெற்ற சீவர்சிரேஷ்டர் அச்சீவருள் பசுபட்சி சன்மமடைந்து, சிறிது அறிவினால் சீவிப்போர் சிரேஷ்டர் அவருள்மனிதர்சிரேஷ்டர் அம்மானிடருள்பிராமணர் மிகச் சிரேஷ்டர் அப்பிராமணருள் வேதசாஸ்திரம் உணர்ந்தவர் சிரேஷ்டர், அவருள் அப்படியோ இப்படியோ என்று ஐயப்படாது உபசார வழக்கை நீக்கி வேதார்த்தங்களை உள்ளபடி உணர்ந்தவர் சிரேஷ்டர். உணர்ந்த வழியிலேயே நிற்பவர் உணர்ந்தவரினும் சிரேஷ்டர், அவருள் பிரம்மஞான மடைந்தவரே மிகச் சிரேஷ்டராவர்: ஓ! கருடரே? அநேககோடி சன்மங்களாலே பெறப்படுவனவாகிய சுவர்க்க மோட்சங்களை அடைவதற்கு மானுடசன்மமேகாரணமாகியது. அச்சன்மத்தை அடைந்து நல்வினை செய்து நல்லுலகுபெறாமல் நரகம் புகத் தீவினையே புரிந்து அச்சன்மத்தை வியர்த்தம் ஆக்குவோரே உலகில்பலருளர். புண்ணியத்தால் அடைந்த அம்மானிட சன்மத்தால் பேறுபெறு

* நுளையர் - செய்தனிலமாக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோர் தமக்குத்தாமே வஞ்சனைபுரிவோராவர். மண்ணா சை-பெண்ணாசை-பொருளாசை ஆகிய இவற்றிலேயே தலைபட்டுத்தன்மங்களை அறியாது உழல்பவன்யாவனோ? அவன் மிருகங்களோடு ஒப்பானவனேயன்றி நன்மக்க ளோடு சேரான், அவனினும் தீயன் ஒருவனுமிலன். ஆசைப் பெருக்கத்தினாலே பிணிக்கப்பட்ட மனமுடை யான் இவ்வளவு அவ்வளவு என்பது இல்லாமல், யாவும் நிரம் கிடைத்தாலும் இன்னும் வேண்டும் வேண்டுமென . அலைவானே அல்லாமல்கிடைத்த மட்டில் போதும் என்று திருப்தி யடையான், நூறு பொன் பெற்றானேல் அவன் திருப்தியடையான். ஆயி ரம்பொனை இச் க்கின்றான். ஆயிரம்பொன் அடைந் தவன் பொன்னை இச்சிக்கின்றான். லட்சம் பொன் அ தவன் கோடிப்பொன்னை விரும்புகின் றான். கோடிப்பொன் அடைந்தவன் ஒரு தேசத்தை விரும்புகின் ன். தேசமடைந்து அரசனாயினவன் புவி மு சக்கரவர்த்தியா விரும்புகின்றான், சக்கிர வ த்தி தேவனாகவிழைகிறான். தேவர்களோ இந்திர ன் விரும்புகின்றார்கள். அவ்விதம் இச்சை மேலும் மே லும் பெருகுமேயன்றி ஒருவருக்கும் அது ஒழி யாது. அந்த இச்சையை ஒழிக்காதவன் கண்டவரை கெஞ்சி அவர்களால் இகழப் பட்டு நரகத்துக்கே ஆளாவான், கொடுங்கேடு யாவும் நெருங்கெய்துவதற்கு அவாவே காரணம் என்று அதனை வெறுத்த மகான்கள் யாவராலும் போற்றப்பட்டு, அந் திய காலத்தில் சுவர்க்கலோகம் சார்வார்கள் புலன் சென்றவழி மனத்தைவிடாது அடக்கிச் சுதந்தரனாய் யாவன் யிருக்கிறானோ, அவனே எல்லா நலன்களுக்கும் உரியனாவன். சுதந்தரமில்லான், பாலிய பருவத்தில் தந்தை தாயாரது சொற்கேட்பவன், யௌவனபருவத் தில் மோக்ஷஸ்திரீக்கு மூதேவியாகிய யதன் தேவியி னது கட்டளை யிடுதலைப் பணிந்து, தலைமேல் கொள் வான், வார்த்தழுவிய பருவத்தில் புத்திரர் பௌத்திரர் சினந்து கிழப்பிணமே வாய்புதைத்து வெறுமனே இ ப்பாய் என்று அதட்டிச் சொல்லுகிற மொழியைக் கேட்டுப் பொறுமிக்கிடப்பான். ஆதலால் கற்றுணர்ந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமில்லான் பெண்களைப்போலவே யென்றுஞ் சுதந் தரமில்லாதவனேயாவன்.

கலுழனே! கலைமான் புள்ளாங்குழலின் இசையைக் கேட்டு இருப்பிடம் விட்டுப்போகாது இருந்து, வேட ஞற் பிடிக்கப்படுதலால் அக் கலைமான் காதால் கெடுவ தாகும், யானை புணர்ச்சியை விழைந்து பெண்யானை யைத்தொடர்ந்துசென்று, யானைப்பாகர்கள் தோண்டிய குழியில்விழுதலால் அவ்யானை பரிச இன்பத்தால்கெடு வதாகும். விட்டிற் பூச்சி விளக்கைக்கண்டு நல்லகனி யென்று நினைத்துவீழ்ந்து அவ்விளக்கில் சாகின்றமை யால் அப்பூச்சிகண்ணால்கெடுவதாகும், வண்டுஉண்ணக் கருதி இரவில் தேனைச்சேர்த்து அதில் இருக்கும் போதுநறுந்தேன் கொள்பவன் தீயால் கொளுத்துகின் றமையால் அவ்வண்டுநாவால்கெடுவதாகும், மீன் தூண் டிலின் முனையில் கோத்தஇறைச்சியின் நாற்றத்தைவிரு ம்பிஉயிர் நீத்தலால் அம்மீன் நாசியால்கெடுவதாகும் ஓ! கருடனே? அங்ஙனம் ஓர் இந்திரியத்தாலேயே அவை கள் நாசம் அடையுமேல் பஞ்சேந்திரிய வாஞ்சைகளை யும் உடையமனிதன் அருங்கேடுற ஐயமுளதோ? இல் வாழ்க்கையில் சுகதுக்கங்களில் எது மிகுதியாலும், பெண்டுபிள்ளைகளாகியவன் கயிற்றால்கட்டுண்டமனிதன் மடையான். பாலியனாயினும், யுவாவவாயினும், விருத் தனாயினும் நாள்கழிதலை எண்ணும் மிருத்தியு! ஒரு வனை உள என்று உணர்ந்து நடப்பான்இலன், உலகில் பிறந்துபிறந்தே இறக்கின்றான், கேளாதேவந்து பிறப் பதுபோலவே பெண்டுபிள்ளை மனைகளைவிட்டு யாவரும் பார்த்திருக்க சொல்லியது சொல்லாமலே போகின் றான். தாய்-தந்தையர்-பெண்டுபிள்ளைகள் ஒருவரும் துணையின்றித் தானொருவனாகவே எப்படி வந்தானோ? அப்படி அவன் மாத்திரம் ஒருதனியே போகின்றான். ஒருவன் மரித்தவுடனே அவன் தேகத்தைக் காஷ்டம் போலப் புவியில்கிடத்தி உறவினர்எல்லோரும் ஆ! ஆ! வென்று அகற்றுகின்றனர், அவர் அழுகின்றமையால் இறந்தவன் அடையும் பயன் யாதுளது? பொய்ப் பத் திர மெழுதுதல்-பொய்க்கரி கூறுதல்-வழிபறித்தல்-

கொலைபுரிதல் முதலிய தீத்தொழில்களைப் புரிந்து ஒருவன் பொருள் சம்பாதிக்க அப்பொருளை அவனைச் சார்ந்தஎல்லோரும் அனுபவிப்பார், பொய்யோலை எழுதுதல் முதலிய அத் தீயவினைகளைச் செய்தலால் வரும் கொடிய பாபத்தில் அப் பொருளை அனுபவிக்கிறவர்களுக்கும் பங்குண்டோ வெனில், ஒரு சிறிதும் அவர்களுக்கு இல்லை அப்பாபச் செயலை செய்து பிறர் பொருளைக் கவர்ந்தவன் யாவனோ? அவன் ஒருவனே பாவ முழுதுக்கும் பாத்தியனாகி தீவாய் நரகம் எய்துவன், அங்ஙனம் தீத்தொழில் புரிந்து ஈட்டிய பொருள் இறந்தபின் அவனோடுசெல்லுமோவென்றால் ஒரு சிறிதுஞ் செல்லாமல் அவனைவிட்டு மனைக்கண்ணே இருப்பதாகும் உறவினர் முதலியோரே சவத்தோடுமயானம் வரையிலே சென்று உடனே மீளுவர், இறக்கு முன்னமே அவன் செய்த பாவ புண்ணியங்களே அவனுடன் செல்வனவாகும். எந்தப் பொருளாவது எமக்குத் தொண்டனாகிய ஒரு பிராமணன் கையில்கொடுக்கப் படவில்லையோ அப்பொருள் உடையவனது பொருளன்று உலோபனிடத்திலிருப்பதாகிய பெரும்பொருள், ஐயோ! நாம்பிராமணர்கையில் கொடுக்கப்படவில்லையே, திருவணை முதலிய யாத்திரைகளிலும் செலவு செய்யப் படவில்லையே புழு மலக்கூடாகிய தேகம் அநித்தியமாயிற்றே! நம்மையுடையான் அதனை யறியானிலனே! அவனிறந்த பின்பு நம்மை யாவன் கவர்ந்து கொள்வனோ? ஒருங்குகவர்ந்து அவன் எந்தவிலைமகள்கையில் கொடுப்பனோவென்றுகதறுவதாகும். பூர்வ சன்மத்தில் தானதர்மங்கள் செய்தவனே மறுசன்மத்தில் மகாபாக்கியவானாகின்றமையால் அச்சன்மத்திலும் அப்படியே செய்தால் மறு சன்மத்தில் அதிக தனவானாவான். யாவன் அத் தான தருமங்களைப் பத்தி சிரத்தையோடு செய்கின்றானோ அவனே தர்மார்த்த கர்ம மோக்ஷங்களைப்பெறுவன், பக்தி சிரத்தையின்றி அவற்றைச்செய்தவன் செய்யாதவனே யாவன். தர்மதானங்களைச் செய்கின்றமையாலே எண்ணியவற்றையெல்லாம் எண்ணிய படிப்பெறலாகும், அரும்பெறலாகிய மோக்ஷமுங்கிடைக்கும், பத்தியோடு செய்யுந் தருமம் தினையினுஞ் சிறிதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யினும் மலையினும் பெரிதாகும். ஒரு பொருளுமில்லாத ருஷிகளெல்லாம் தம் மனச் செய்கையாலே விதி சிவேந்திராதியருக்கும் அரிய நிரதிசய இன்பவீடாகிய எம்முலகு பெறுகின்றனர். ஆதலால் மனத்தூய்மையும் பக்தியும் இல்லாமல் தானம்-தருமம்-தவம் முதலிய வற்றைச் செய்தால் அவை சிறிதும் பயன்படா முத்தி சாதனங்களாகிய பத்தியேனும் பிரபத்தியேனும் செய்தலும் பத்தியோடு தரும தானங்களைச் செய் தலுமே உத்தமமாம் என்றோதி யருளினர்.

இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

## மூன்றும் அத்தியாயம்

சூதபுராணிகர் மாமுனிவர்களே! பின்னர் பெரிய திருவடி ஸ்ரீமந் நாராயணனைத் தொழுது, ஏ நாதா! மனிதர்களுக்கு மகா கொடிதாகிய பிரேத சன்மம் எதனால் வராமல்ஒழியும்அதனை அருளிச் செய்யவேண்டும் என்றுபிரார்த்தித்தலும்,சர்வாந்த்ரியாமியாகியபகவான் ஓ கருடா! மனிதர் இறந்தவுடனே செய்யவேண்டிய கருமங்களைச் சிறிது நவில்கின்றேம்,கேண்மோ! பிரேத சன்மத்தை நிவர்த்திக்க விரும்பிய யாவரும் இறக்கு முன்னமே தமது கரத்தாலே விருஷோற்சர்க்கம் செய் தல் வேண்டும். ஸ்திரீ சூத்திராரயினும் தவிராது அத னைச் செய்தல் வேண்டும். ஐந்து வயதுக்கு மேற்பட்ட வயதுடையாரில் ஆண் பெண் யார் மரித்தாலும் அவ ருக்குப் பிரேதகன்மம் வராமையின்பொருட்டுக் கருமம் செய்கின்றவன் விருஷோற்சர்க்கம் செய்யவேண்டும். பிரேதசன்மம் அடையாமைக்கு விருஷோற்சர்க்கம்செய் யவேண்டியதன்றி வேறொன்றுமிலது. உயிரோடிருக் குங் காலையாயினு மிறந்தபின்பாயினும் யாவனுக்கும் விருஷோற்சர்க்கம் செய்யப்பட்டதோ, அவனுக்குப் பிரேதசன்மம் வருவதிலது இந்த விருஷோற்சர்க்கம், செய்யாமலே வேறு எவ்வித தானம் கொடுத்தாலும், விரதங்கள் செய்தாலும், யாகம் இயற்றினும், அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேத சன்மம் பிடியாமல் ஒழியாது என்று திருவாய் மலர்ந்தருளினர்.

பெரிய திருவடி சர்வேசனை வணங்கி, ஓ தேவ தேவே! விருஷோற்சர்க்கம்இறக்காதமுன்னர் எக்காலத்தில் செய்யவேண்டியது? யிறந்தபின்னர் எச்சமயத்தில் செய்யவேண்டியது? அதற்கு இன்னும் பலன் யாது? அவற்றைக் கூறியருள வேண்டுமென, அயனாலுதியர்க்கு அரியனும், நம்போலிய அடியாருக்கு எளியனும் ஆகிய கருணையங்கடவுள் 'கலுழனே! இறந்தவனைக் குறித்து விருஷோற்சர்க்கம் செய்யாமல் சிரார்த்தமுதலிய யாவும் செய்தாலும் சிறிது அவனுக்குப் பயனில்லை. மரித்தபதினொன்றும் நாள் எவனுக்கு விருஷோற்சர்க்கம் செய்யப்படவில்லையோ அவனுக்குப் பிரேதசன்மம் உறுதியாகும் விருஷோற்சனம் செய்யப்பட்டால் இறந்தவன் பிரேதசன்மம் அடையாது பெரியோர்கள்சேரும் உலோகம் சேருவன், முத்தி க்ஷேத்திரங்களில் மாய்ந்தவன் எமனால்பீடிக்கப்படாமல் நல்லுலகு சேர்வன், விருஷோற்சனம் யாவனுக்குச் செய்யப்பட்டதோ அவனும் அவ்வுலகு சேர்வன், புத்திரனாயினும், மனைவியாயினும், பெண்வயிற்றுப் பிள்ளையாயினும், பெண்ணாயினும் விருஷோற்சனம் செய்யலாம். புத்திரன் இருப்பானால் வேறுயாரும் செய்யலாகாது என்றருளினர். வேதவுருவனாகிய பறவைக்கரசன் ஓ வாசுதேவா! புத்திரன் முதலிய ஒருவரும் இல்லாதவனும், இல்லாதவளும் இறப்பன் அவர்களுக்கு உத்திரகிரியையாவர் செய்யவேண்டியது? அருளுகவெனலும் எம்பெருமான் ஓ கருடா! பிள்ளையில்லாதவன் நாகமன்றி நல்லுலகு அடையான். ஆதலின் எவ்வித அரிதாகியகருமம் செய்தேனும் ஆண்மகவு பெறுதல்வேண்டும், ஒருவன் தனக்கு நல்வினை ஒன்றும் செய்துகொள்ளாமல் இறந்தாலும் அப்படி மரித்தவனுக்கு அவனுடைய புத்திரர் கிரித்தியம்செய்யாவிட்டாலும், அவன் இராப்பகல் பசிதாகத்தோடு ஐயோ! ஐயோ!! என்று இறைந்து உலகெங்கும் நெடுங்காலமலைந்து பின்பு புழுமுதலிய சன்மமெடுத்துமீண்டு மனிதருள் கடையோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயிற்றில் பிறந்துபிறந்து மரிப்பன், ஆதலால் ரோகத்தால் பீடிக்கப்படுவதற்குமுன்னரும், வயோதிகம் வருவதற்கு முன்னரும், செயல் ஒடுங்குவதற்குமுன்னரும் ஆயுசுகுறைவதற்கு முன்னரும் தெரிந்தவன்தான் அந்தியகாலத்தில் நல்லுலகடையவேண்டியதற்கு நல்வினைகளைச் செய்யக்கடவன். அப்படிச்செய்யாமல் பின்னிட்டுச்செய்வோமென்று ஆலோசிப்பது தீப்பற்றி இல்லம் எரியுங்காலை அதனை அவிப்பதற்குக் கூபம்தோண்ட எத்தனிப்பதை ஒப்பாகுமென்றருளினர்.

மூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

## நான்காம் அத்தியாயம்

சூதர் அருந்தவர்களே! வேதவுருவனாகிய கருடன் சர்வலோகநாதனைவணங்க, ஏ பரந்தாமா? தானதருமங்களை ஒருவன் மனத்தூய்மையோடுதன்கையாலே செய்யின் பயன் யாது? அவனுக்காக அவன்புத்திரன் முதலியோர் செய்யின் பலன் என்னை? செய்யும் முறைபிறழ்ந்துசெய்யின்பலன்என்னை? இவற்றை மொழிந்தருளுக எனலும், பாம்பனைப்பரமன்கலுழனே! மனத்தூய்மையில்லாமலும், உறுதியில்லாமலும் செய்யப்படும் நூறுகோதானங்கட்கு எவ்வளவு பலனுளதோ, அவ்வளவு பலன் சித்தபரிசுத்தத்தோடுசாஸ்திரத்தில்விதித்தவண்ணம் ஒருகோதானஞ்செய்யின் அதற்குள்ளதாகும் ஒருவன் மரித்தபின்பு அவனைக் குறித்துச் செய்யும் லட்சம் கோதானங்கட்கு எவ்வளவு பலனோ அவ்வளவு பலன் அவன் இறக்குங்காலத்தில் ஆயிரங்கோதானம் செய்யின் உளதாகும். கலுழனே? அங்ஙனமாகலால் மரணகாலத்திலேயே கோதானம் முதலிய யாவற்றும் செய்தல் மிகநன்றென்றுதெளிக, நல்லதானமும், நல்ல பாத்திரமும், நல்லக்ஷேத்திரமும், கொடுப்போனுடைய தூயமனமும் ஒருங்குறின் ஒன்றுகோடியதாகும். கற்றுணர்ந்த பெரியோர்களிடத்தில் கொடுக்கப்படும் தானம் நாள்தோறும் விருத்தியடையும், வாங்குவோர் உத்தம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஞல் கொடுப்போனுக்கதிக புண்ணியமுளது. விஷத்தைப் போக்கும் மந்திரமும் குளிரைப்போக்கும் அக்கினியும் தம் சத்தியினின்று குறைவுபடாதவாறு போலத் தானம் வாங்கும் அவ்வுத்தமரும் அவருடைய நற்கருமத்தால் குற்றமிலராவர். உத்தமபலனையடையவேண்டுமென்று விரும்புவோன் கோதான முதலியவற்றைவேத சாஸ்திரங்களை யுணர்ந்த உத்தம பிராமணனுக்கொடுத்தல் வேண்டும், அவ்வேத சாஸ்திரங்களை ஓதாமலும், ஒழுக்கத்தில் நில்லாமலும் பிராமணன் என்ற பெயரை மாத்திரம் உடையவனுக்குக் கொடுத்தால் அக் கோதானமே கொடுத்தவனுக்கு நரகம்கொடுக்கும், அன்றியும் தகுதியில்லான் வாங்குவானேல் அவன் இருபத்தொரு தலைமுறை யுள்ளவர்களோடு நிரயம்புகுவன். ஒரு கோவை ஒருவனுக்கே கொடுத்தல்வேண்டும். எக்காலத்திலும் ஓராவினைப் பலருக்குக் கொடுக்கலாகாது. அப்படிக் கொடுத்துத் தானம் வாங்கிஞேர் விற்றுத் தொகையைப் பங்கு செய்துக்கொண்டாலும் ஒருவர் ஒருமாதம், மற்றொருவர் ஒருமாதம் அநுபவித்துக் கொள்ளுகிறதென்றுவிதித்துக்கொண்டாலும், தானங்கொடுத்தவன் அவனுடைய ஏழுதலைமுறையோடு நெடுங்காலம் நரகவாசஞ்செய்வன். சாதுக்கள் கரத்தில் பொருள் முதலியவற்றை பத்திசிரத்தையோடுகொடுப்போன், அச்சன்மத்திலேயோ, மறுசன்மத்திலேயோ பயனை ஐயமின்றி அடைதலால் அவை பெட்டியில் வைத்துப் பூட்டிய பொருளேயென்று நினைக்கத்தக்கது. அதிகதனமுடையோன் இறந்தபின்னர் அவனுடையமக்கள் அப்பனுக்கென்று பத்திசிரத்தையோடு செய்யும்கிருத்தியங்களால் அவன் அடையும் நல்லுலகினும் மேலாகிய உலகைப் புத்திரனில்லாதவனும் தரித்திரனும் சொற்ப தருமத்தை ஆர்த்தியோடு தமது கரத்தால் செய்வாராகில் ஐயமின்றி யடைவர்.

கருடா! அயலூருக்குப் போவோன் கட்டமுதுகையிற்கொண்டு செய்வானேல் வழியில் வருத்தமின்றி இனிதாய்ச் செல்வானல்லனே? அங்ஙனம உயிரோடிருக்குங்கால் அன்னதான முதலியவற்றைத் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையால்செய்தவன் இறந்துசெல்லும்போது பசிதாகத்தால் வருந்தாது நல்லுலகடைவன். கையில்கட்டமுது இன்றி வழிச்செல்வோன் பசிதாகத்தால் வருந்துவது போலத் தான தருமங்களைத் தானே செய்யாதவன் இறந்துசெல்லும்போது அதிகமும் துன்பப்படுவான். புண்ணிய க்ஷேத்திரத்தில் புண்ணியகாலத்தில் செய்த நல்வினை நெய்யினால் அங்கி ஓதுதல்போல வளர்வதாகும். புண்ணியக்ஷேத்திரமில்லாத எவ்விடத்திலேனும் புண்ணிய காலமில்லாத எக்காலத்திலேனும் விருஷோற்சனம் செய்து நற்சீலனல்லாப் பார்ப்பானுக்குத் தானம் கொடுப்பினும் அவ்விருஷோற்சனத்தின் மகிமையால் உத்தமக்ஷேத்திரத்தில் உத்தமகாலத்தில் உத்தமபிராமணனுக்குக் கொடுப்பின் எப்பலனோ, அப்பலன் தவிராது கைகூடும், மானிடன் நற்கதியடைவதற்கு முதற்காரணம் விருஷோற்சனமே யென்றுணர்க. கருடனே! தேகம் அநித்தியமாதலால் நல்வினைகள் நாளைச் செய்வோமென்று நினையாமல் நாளும்ஒல்லும் வகையாலே செய்தல் வேண்டும். புத்திரனுடையோன் தன்கையால் ஒரு தருமமுஞ் செய்யாமல் இறப்பானேல் நற்கதியடையான். புத்திரனில்லாதவன் நல்வினைகளைச் செய்து மறித்தானேல் நற்கதியை அடைவன். மகம் இயற்றுதலினும், கோதானமுதலிய மகாதானம் செய்தலினும் விருஷோற்சனம் செய்தல் மிக உத்தமம். கார்த்திகை மாதத்தின் பௌர்ணமியிலாயினும், உத்தராயணத்தில் சுக்கில பட்சத்திலாயினும், கிருஷ்ண பட்சத்திலாயினும், துவாதசியிலாயினும், மற்றெந்தப் புண்ணிய தினத்திலாயினும், தூயமனத்தோடு உத்தம க்ஷேத்திரத்தில் நல்ல நட்சத்திரத்தில் நல்ல இலக்கணம் வேத சாஸ்திரங்களை யுணர்ந்து ஒழுக்கமுடைய தெய்வப்பிராமணர்களை வருந்தி யழைத்து சுபம் ஓமம் முதலியவை செய்து தன்னைப் பரிசுத்தனாக்கிக்கொண்டு நவக்கிரக பூசைசெய்து மாதுர்தேவதைகளை அருச்சித்துப்பூர்ணாகுதி கொடுத்து மகாவிஷ்ணுவைக்குறித்துச் சிரார்த்தம் செய்து மந்திர நீரால் இடபக்கன்றை மஞ்சனமாட்டி வஸ்திரம் சந்தனம் புஷ்பம் ஆபரணம் ஆகிய இவற்றால் அலங்கரித்து நான்கு ஆண்கன்றுகளோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலேக்கன்றை அக்கினியை வலம்வரச்செய்து வடக்கு நோக்கி நின்று அவ்விடபக் கன்றைப் பார்த்து தருமமே இடபமாயினை பிரமனுலே ஆதியிலே படைக்கப்பட்டனை என்று சொல்லி இறந்தவனுக்குச் செயின் அவனைக் குறித்தும், செய்பவன் தனக்கேசெய்து கொள்வானுயின் தன்னைக் குறித்தும், அதன் வாலில் புனல்விடுத்து அந்நீரைக் கரத்தா லேந்திச் சிரசில் புரோஷித்துக்கொண்டு ஆண் கன்றுகளோடு அவ்விடபக் கன்றை விடுதல் வேண்டும்.

கலுழனே! விருஷோற்சனம் இறந்தவனைக் குறித்துச் செய்யப்பட்டதனுல், உடனே ஏகாதிஷ்ட சிரார்த்தம் புரிதல்வேண்டும். இறவாதிருப்போன் தனக்குத் தானே செய்துக்கொள்வானேல் தனக்கு அதுகுணமானவற்றைப் பிராமணர்களுக்கு ஈதல்வேண்டும். விருஷோற்சனஞ் செய்யாவிடின் பிரேத சன்மம் பற்றுதொழியாது ஆதலால் அவ்விருஷோற்சனம் செய்யாமலே மற்ற நல்வினைகளைத் தானே தனக்குச் செய்து கொள்ளினும் மரித்தபின்பு புத்திரர் முதலியோர் பல நல்வினைகளை மாத்திரம் செய்யினும் அவைகளால் பயனிலதென்றுணர்க. மரித்த பதினொன்றும் நாளிலேனும் பன்னிரண்டாம் நாளிலேனும் சோடச சிரார்த்தம் சுபிண்டி கரணத்திற்கு முன்னமே செய்து சற்பிராமணர்களை எழுந்தருளச் செய்து ததியாராதனஞ் செய்து பலதானம் கொடுத்தல் வேண்டும். பருத்தியின் மேல் செம்பின் வட்டிலில் சாளக்கிராமம் வைத்து வஸ்திர முதலியவற்றல் அலங்காரமும் ஆராதனமுஞ் செய்து, சத் பிராமணனுக்குக் கொடுத்தல் வேண்டும். வைதரணி என்னும் நதியை இனிது கடக்கும் பொருட்டுக் கரும்பினுல் ஒடஞ் செய்து பட்டினுல் அதனைச்சுற்றி நெய்வார்த்த வெங்கலப் பாத்திரத்தை அதனுள் வைத்து ஸ்ரீமந் நாராயணனை அர்ச்சித்து அவ்வோடத்தைப்பிராமணனுக்குத் தானம்கொடுத்தல் வேண்டும். கலுழனே! எள்ளும்-இரும்பும்-பொன்னும்-பருத்தியும்-உப்பும்-சப்தத்தானியங்களும்தவிராது பிராமணருக்குக்கொடுத்தல்வேண்டும். செய்வோன்எளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யவனுயின் அவற்றில் ஒன்று கொடுப்பினும் அமைவ தாகும்சத்தியை அநுசரித்துப்பொருள்கொடுத்துத்தில தானமும், சய்யாதானமும் செய்தல் வேண்டும். இவ்விரண்டு தானங்களுக்கும் தட்சணைமிகுதியாய்க்கொடுத்து பிராமணரை உகந்தருளச் செய்தல்வேண்டும். சய்யா தானம் வாங்கும் பிராமணனை அச் சேக்கையி லிருக்கச் செய்து தானம்-செய்தல் மிக விசேடமாம் புத்திரனில்லாமல்மரித்தவனுக்குப்பௌத்திரன்முதலியோர் யாரேனும் இவ்விதம் செய்யின் நற்கதி யுளதாகும் தன் சக்தியை யநுசரித்து நித்தியதானம் செய்கின்றவன் யாவனே அவன் இறுதியில் நற்கதியடைவான், சரீரம் திடமாயிருக்குங் காலத்தில் திருவணை யாத்திரையும் கங்கா யாத்திரையும் செய்தல்வேண்டும். தாய் தந்தையர் இறந்தபின்பு ஆண்டுகள் தோறும் அவர்களுக்குச்சிரார்த்தம் புரிதல்வேண்டும். மாதா பிதா குருக்களுக்குத் தன்னால் இயன்ற புண்ணியஞ் செய்து கொடுத்தல் வேண்டும். கலுழனே! மரித்தவரைக் குறித்துக் கிருத்தியம் செய்யும்போது பிராமணர்களுக்குயாவன் பூரிகொடுக்கிறானே அவன் வேண்டிய நல்லவையாவும் பெறுவன் பிரேத கன்மம் அடையான் சந்நியாசிகள்-யோகிகள்-முதலியோர்கள் எந்தலோகமடைவார்களோ அப்புண்ணியலோகம் அவன் கையதாகும், மரித்தபின்பு செய்ய வேண்டியவற்றை ஒருவாறாய் நினக்கு நவின்றேம் என்றருளினர்.

நான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

## ஐந்தாம் அத்தியாயம்

ஸ்ரீ வியாசர் மாணுக்கர் நைமிசாரணிய வாசிகளை நோக்கி ஒதுணமாண்டோரே! கருடபகவான் திருமகள் கேள்வனைப் பணிந்து சர்வலோக சரணியா! யமலோகம் எவ்வளவு தூரத்திலிராநின்றது? அதன் தன்மை யாது? அவற்றைப்புகன்றருள வேண்டுமெனலும், நங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கருணையங்கடல் கலுழனே! கேட்டி? மனுஷலோகத்திற்கும் யமபுரிக்கும் இடையில் எண்பத்தாறுயிர காதவழியுளது. அப்புவியில் வாழ்கின்ற கூற்றுவன் சீவகாலமுடிந்த சீவனைப்பிடித்து வருமாறுயாவும் அஞ்சத்தக்க உருவமுடையவர்களும் கனலையும்-காயம்-சினமுடையவர்களும், பாசம்முசலம் உடையவர்களும், காரென்க்கருத்த ஆடைதரித்தவர்களும் ஆகியமூன்றுதூதர்களையாண்டும் ஏவுகின்றான். அம்மூவருஞ்சென்று ஆயுசுமுடிந்த சீவனைப்பிடித்து, காற்றுருவமாகிய தேகத்தில் அடைத்துக்கொண்டுபோய் யமபுரிக்கு நாயகனாகியகாலனுக்கு முன்னே நிறுத்தி ஓ தருமராஜரே! நின் கட்டளையின்படி வாணாளற்றவனை நினது சந்நிதி முன்னர்க்கொண்டு வந்தோம். இனி தாங்கள் செய்யவேண்டியது என்னை? கட்டளை யிடுவீராயின் பணிந்து செய்கின்றோமென்பர். மகிடவாகன் அத்தூதரைப்பார்த்து ஓ! கிங்கரரே? நன்று அச்சீவனை மீண்டுங் கொண்டுபோய் அவன்மனையின் மாட்டே விடுத்துப் பன்னிரண்டாம் நாள் கழிந்தபின்னர்க் கிரமமாய் அவனை நமக்கு முன் கொண்டுவருக என்பன். தூதர் அதனைக் கேட்டு நொடிக்கு முன்னரே அச்சீவனைக் கொண்டு எண்பத்தாறுயிர காதவழி கடந்துவந்து சேருவர். இறந்தவுடனே சீவன்யமபுரிசென்று மீண்டுவருகின்றமையால் சரீரத்தை உடனே தகனம் செய்யாமல் சிறிதுபொழுது கழிந்தபின்னரே செய்தல் வேண்டும். யமதூதர்கள் அடைந்த வாயுதேகமுடைய அச்சீவன் சிதைக்குப் பத்துமுழத்துக்குமேலே நின்று தீப்பற்றிக்கொழுந்துவிட் டெரிகின்ற தனது மெய்யைப்பார்த்து ஐயோ! ஐயோ! என்று ஓலமிடுவன. அச்சீவன் புண்ணியஞ்செய்தவனாயின் இவ்வுடல் கழிந்ததே நன்றென்றுவப்பன். கலுழனே! தலைவேகுங்காறும் சீவனுக்கு அச்சரீரத்தில் ஆசையொழியாது சிரசு முதலியதேகமெல்லாம் வெந்துசாம்பலாயினவுடனே சீவனுக்குப்பிண்டத்தால் தேகமுண்டாகும். புத்திரன் முதல்நாளில் போடும்பிண்டத்தால்சிரசும், இரண்டாநாட்பிண்டத்தால் கழுத்துந்தோளும், மூன்றுநாட் பிண்டத்தால் மார்பும், நான்காநாட் பிண்டத்தால் வயிறும், ஐந்தாநாட் பிண்டத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தியும், ஆறுநாட் பிண்டத்தால் புட்டமும், ஏழா நாட்பிண்டத்தால்குய்யமும், எட்டாநாட் பிண்டத்தால் தொடையும், ஒன்பதாநாட் பிண்டத்தால் காலுமுண் டாகி, பத்தாநாட் பிண்டத்தால் சரீரமுழுதும் பூரண மாகும். சீவன் இறக்குமுன்னமே மனைவி மக்களோடு வாழ்ந்தமனைக்கண்வந்து உள்ளேசெல்லாமலே பசிதா கத்தால் ஆ! ஆ! என்றுகதறி, போவார்வருவோர்களை பார்த்துக்கொண்டு அவ்வீட்டின் வாயிலிலே நிற்பன, பின்பு அச்சீவன் பதினொன்றுநாளிலும் பன்னிரண்டா நாளிலும் புத்திரனால் பிராமணமுகமாய்க் கொடுக்கப் படுவன வற்றையுண்டு, பதின்மூன்றுநாள் யமபடர்கள் பாசத்தால் பிணித்திழுக்க வீட்டைத் திரும்பித் திரும் பிப் பார்த்துக்கொண்டு கதறியவண்ணமே யமலோகம் சாரஏகுவன். கருடனே! அக்கிங்கரர்களோடுநாளொன் றுக்கு இருநூற்று நாற்பத்தேழுகாதவழி இரவிலும் பகலிலும் நடப்பன் அவன் செல்லும்வழியில் அசிபத் திரவனமென்னும் ஈர்வாள்போன்ற இலைகளையுடைய ஓர் கானகம் இருக்கின்றது. ஓ! கருடா! மரங்கள் நெருங்கிய வனத்திற் செல்வதே யார்க்கும் அரிதாகு மன்றோ? சூரியிலைகளாகிய வனத்தில் எங்ஙனஞ் செல்வது? அல்லது உம் அக்காட்டினூடு நடக்குங் கால் பசிதாகத்தாலும் மிக வருந்துவன். மார்க்கத் தில் சீவன் படுந்துன்பையாவர் சொல்லவல்லார்? அது நிற்க, வைவசுவதபட்டணம் உயர்ந்த மாளிகைகளால் நெருங்கியதாயும் யாவர்க்கும் அச்சந்தரும் சோரரூப முடைய அநேகபிராணிகளுக்கு இருப்பிடமானதாயும் துக்கத்தையே கொடுப்பதாயுமிருக்கின்றது, பாபஞ் செய்தோர் அநேகர் அவனிருந்து அண்டமுகடுகிழிய எப்போதும் ஆ! ஆ! என்று ஓலமிடுகின்றனர். வெப் பத்தால் உளதாகிய பேயத்தோபுனலுளதுபோல், அங் குக் காட்டும் பருக ஒரு சிறு திவலையுங்கிடைக்காது, மேகங்களெல்லாம் அருந்த அருகமற்ற இரத்தம் முத லியவற்றையே பொய்யா நிற்கும். இறந்த சீவன் பதின் மூன்றுநாள் புறப்பட்டு யமபுரிக்கு செல்கின்றனென்று மேலேபுகன்றோமே குரங்கைக் கயிற்றால் கட்டி ஈர்த்துச் செல்வதுபோலக் கிங்கரர் பத்தாநாட் பிண்டத்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேகம்பெற்ற சீவனைப் பாசத்தாற் பிணித்து இழுத்துக் கொண்டு செல்லுங்கால் அச் சீவன் தனது புத்திரனை நினைத்து ஐயோ அருமைமகனே! கஷ்டப்படுகின்றேனே! என்செய்கோ! என்செய்கோ! சர்வேசன் ஒருவனுடன் நல்வினை தீவினையுள சுவர்க்க நரகமுள அவற்றிற்குச் செல்ல நன்னெறி தீநெறியுள என்று இதஞ்சொன்னவர்களோடு ஸ்ரீயப்பதியென்றும் ஒருவனுளனோமற்றவையுமுளவோபிராந்தியாள் பிதற்றுகின்றீர் என்று வன்கண்மைபேசிச் சாதுக்களையேசி பரிகாசம்புரிந்தேனே அவற்றின்பலனை இப்போது அனுபவிக்கிறேன். மலையொரு மத்திகையால் கிங்கரர் இரக்கமின்றிப் புடைக்கின்றனரே! அந்தோ பெரியோர்களுக்கு ஓர் உதவியுஞ் செய்தேனல்லேன் யாக முதலியதுஞ் செய்தேனல்லேன். செய்வோர்க்கு உதவினேனல்லேன் தீர்த்தயாத்திரை செய்தேனல்லேன் செய்வோரைப் புகழ்ந்தேனல்லேன், மாதவம்புரிந்தேனல்லேன். புரிவோரைப் போற்றினேனல்லேன். நீரில்லா இடந்தனில் தண்ணீர்ப்பந்தல் உண்டாக்கினேனல்லேன். ஒருகுளந்தோண்டினேனல்லேன், ஒரு கிணறு கட்டினேனல்லேன்,கோக்கள்மேய்வதற்குப்பசும்புல் வளரப் பயிரிட்டுப் பூமியை வைத்திருந்தேனல்லேன். மட்டில் நித்தியதானஞ் செய்தேனல்லேன் வேதசாஸ்திரங்களைக் கற்றேனல்லேன், கற்போருக்குக் கல்விச்சாலைஉண்டாக்கினேனல்லேன் ஸ்ரீமத் ராமாயண பாரதபாகவதங்களை கையா லெழுதியேனும், எழுதச்செய்தேனும், விலைக்கு வாங்கியேனும் படிக்க விரும்புவோர்க்குக் கொடுத்தேனல்லேன். அவற்றைப்படனஞ் செய்தேனல்லேன் ஒரு பெரியவர்முகமாய்க்கேட்டேனல்லேன். படிக்கவைத்து சர்வவசனங்களையும்கேட்பித்தேனலலேன். ஸ்ரீ அரிதினமாகிய ஏகாதசியில் உபவாசமிருந்தேனல்லேன் இன்ன நல்வினை ஒன்றினையும்கனவிலும் நினைத்தேனல்லேன், தீவினைகளிலோ ஒன்றும் ஒழியாமல் யாவுஞ்செய்தேன். இப்போது என்செய்வேன் என்றழுது சொல்வேன் என்று பின்னும் அருளுகின்றனர்.

ஐந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறும் அத்தியாயம்

சூதர்செளனகாதிருஷிகளைக் கண்ணுற்றுத் திருமாலடியார்களே! பின்னர்ச் சர்வேசன்பட்சிராஜனே! யமதூதர்களால் கட்டுண்டு உதையுண்டு செல்லும் சேதநன் மனைவி மக்களோடு வாழ்ந்த இன்பை நினைத்து துன்புற்றுப் பசி தாகத்தால் வருந்தி மெலிந்து தீனசுரத்தோடு ஐயோ! நம்முடைய மனைவி மக்கள் எங்கே? உற்றோர் மற்றோர் எங்கே? ஏவலாளர் எங்கே! எல்லோரும் நம்மைத்தனியே விட்டனரே! பொய்யோலை யெழுதல் முதலிய தீத்தொழில் புரிந்து * கவர்ந்தபொருள் இப்போது நமது கையிலிருக்கின்றதோ? அப்பொருள் அநுபவிக்கிற நம்முடைய மனைவிமக்கள் சுற்றத்தாரில் யாரேனும் ஒருவர் தனியேவந்த தம்மோடு வந்தனரா நம்மைத் தனியேவிடுத்து அவர்கள் மனைக்கணிருந்து சுகமனுபவிக்க யாம் எதுக்குப் பிறர்பொருளை வேள்வினேம்? நாம்செய்த வஞ்சனையைச் சிறிதும் அறியாமல் நம்மை நம்பிச் சீவாதாரமாகிய பொருளை இழந்தோருடைய வயிறுபோல நம்வயிறு எரிகின்றதே என் செய்வோமென்று தான் முன்னமே செய்த தீவினைகளை எண்ணிஓலமிடுவன். அப்போது யமபடர் அவனுடைய கன்னத்தில் புடைத்து அடா! மூடா இப்போதுதான் புத்திவந்ததோ மனைவி மக்களே கதியென்று அறம் செய்யாது பாபஞ்செய்து வாழ்ந்தனையே? அவர்கள் நினக்கு இப்போது செய்யும் உதவியாதடா நீ செய்த புண்ணிய பாவமே நினக்கு இன்பையும் துன்பையும் கொடுக்கின்றன. பிறர்பொருளை அபகரித்தல் முதலிய அதருமம் செய்யாது தருமஞ்செய்தவனாயின் நினக்கேன் இக்கேடு வருகின்றது? எங்கள் கையிலகப்பட்டு ஏன்விழிக்கிறாய்? என்று கோடையிடிபோல் † உறற்றி மீண்டும் பாசத்தால் விசித்துப் புடை புடையென்று முசலத்தாற்புடைப்பர். கருடா? தீத்தொழில்புரிந்தோர்

* கவர்தல்-கொள்ளையிடல். திருடல், வாருதல்

† உறற்றல்-பேரொலி செய்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைகின்றகதியைநோக்காய்: பின்னர் அச்சேதனன் சிறிது தூரம் வாயு மார்க்கத்திலும், சிறிது தூரம் புவி வழியிலும் யமதூதர்களோடு சென்று ஓரிடத்திற்றங்கி இறந்த இருபெத்கெட்டா நாளில் புத்திரனால் செய்யப் படும் ஊனமாகிய சிரார்த்தபிண்டத்தைஉண்டு முப்பதா நாள் யாமிய மென்ற நகரம் சேர்வன். அப்பட்டணத் தில் பிரேதக்கூட்டங்கள் மிகுதியாய் இருக்கின்றன புண்ணிய பத்திரை என்ற நதியும், வடவிருட்சமொன் றும் இருக்கின்றன. சிறிது சிரம பரிகாரத்தின் பொரு ட்டு யமகிங்காரர் உத்தரவால் அவ்யாமியமென்ற நக ரத்தில் தங்கி இரண்டா மாசிக பிண்டத்தை அருந்தி இரவிலும் பகலிலும் தூதர்களாலே இழுக்கப்பட்டு யார்க்கும் அச்சம் தருவதாகிய அரண்ணியத்தி னூடு சென்று, வழி நடக்கும் வருத்தததால் ஓவென்று ஓலமிட்டுத் தூ த ர் க ள் செய்யும் கொடுமையால் துன்பமுற்று செல்லும் மார்க்கத்தில் திரைபக்ஷிகமாசிக பிண்டத்தை அயின்று சங்கமனென்றும், கால தூஷக னென்றும் பெயருடைய ஓர் அரசனுக்கும் சௌரி யென்ற நகரம் சார்ந்து அப்பட்டணத்தில் மூன்று மாசிக பிண்டத்தையுண்டு அப்புறம்சென்று, கந்தருவ நகரமென்னும் பட்டினம்சார்ந்து, அப்புரியில் நான்கா மாசிகபிண்டத்தை யுண்டு அப்புறம் நடந்து மார்க்கத் திலே பொறுக்கவொண்ணுக்குளிரினால் அதிகமும் வரு ந்துவன். ஆங்குயமதூதர்கள் அநேகர்கூடி, வருந்தும் அச் சீவன்மேல் மேகம்போலக் கற்களைப் பெய்வர். சீவன் அக்கல்மழையினால் வருத்தமுற்றுக்குரூரமென்ற நாமமுடைய வேந்தன் புரக்கும் குரூரபுரமென்னும் பட்டினம் புகுந்து. அவ்விடத்தில் ஐந்தா மாசிகபிண் டத்தையுண்டு அப்பால் நடந்து கிரௌஞ்சமென்னும் புரிக்கண் சென்று, அந்நகரத்தில் ஆறு மாசிகபிண்ட த்தை அயின்று, அரை முகூர்த்தகாலம் அவணிருந்து சிறிது சிரமபரிகாரமடைந்து, பின்புயெழுந்து யாவரும் அஞ்சும்படியாகிய மார்க்கத்தில் செல்வன்வழியில் செல் லும்போது முன்னே தான் வாழ்ந்ததை நினைத்து வாயாற் புலம்புவன். யமபடர் சினந்து அவ்வாயில் புடைப்பர். அடுத்தடுத்து யமகிங்கரர்களால் சீவன் துன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பப்பட்டு வருந்திச்செல்லும்போது மார்க்கத்தில் ஓடம் விடுவோர்கள் ஆயிரம் பதிஞயிரம் பேர்கள் கூட்டங் கூட்டமாய் அஞ்சத்தக்க ரூபர்களாய் அச்சீவன் முன் ஓடிவந்து தீயெழவிழித்து, ஏ சீவனே! வைதரணி கோதானம் தன்னைக் குறித்துச் செய்யப்பட்டதாயின், அவ்வைதரணி நதியை நீ இனிது கடக்க உதவி செய் வோம், இல்லாவிடின் அந்நதியில் நின்னைத் தள்ளிப் பாதாளம்வரையிலும் அழுத்தித் துன்பப்படுத்துவோம் ஓ சீவனே அவ்வைதரணி என்றநதி நூறுயோசனை அகலமுள்ளதாயிருக்கின்றது. நீரின்றிச் சீழ் ரத்தங்க ளாலே நிறைந்திருக்கின்றது அல்லது உம் தீமைபுரி யும் துஷ்டப் பிராணிகளுக்குத் தானமாயிருக்கின்றது நாற்றமறியும் நாசியில்லாப் பிராணியும் அந்நதியின் துர்க்கந்தத்தைப் பொறுப்பது அரிது ஏ சீவனே! நினது கையாலே நீ கோதானம் செய்தவனுயின் ஒருகோவந்து நின்னை இந்நதிக்கப்புறம் சேர்த்துவிடும் நீ செய்யாதவனுயின் ஆன்வரமாட்டாது நீ இவ்வாற் றிலேவிழுந்து நெடுங்காலம் மூழ்கிக்கிடத்தல்வேண்டும் என்பர் ஓ! வையனதேயனே! வைதரணிநதியை இனி தாய்க்கடக்கும்பொருட்டுயாவரும் தவிராது கோதானம் செய்தல் வேண்டும் சீவன் அவ்வைதரணி கோதானம் செய்தவனுயினும். அவனைக்குறித்துப் புத்திரரால்செய் யப்பட்டதாயினும், அச்சீவன் அந்நதியைக் கடந்து நமனுக்கு இளையவனுகிய விசித்திரனென்போன் பரிபா லனம்செய்யும் விசித்திரமென்ற பட்டினத்தைச்சார்ந்து ஊனஷான் மாசிக பிண்டத்தை உண்டுசென்று, ஏழா மாசிகபிண்டத்தை உண்ணுங்காலை சிலபிசாசுகள்வந்து அச்சீவனைப்பார்த்து, அடாமூடா! நீ புவியில்வாழ்ந்த போது நின்மாட்டு வந்து நின்னை யாசித்தவர்களை ஒன்றும் கொடேனென்று துரத்தினுயே இப்போது பிண்டத்தைக் கொடுவென்று பலவந்தமாய்ப் பிடுங்கிக் கொள்ளும், புள்ளரசே? ஒருபொருளு மில்லாவறிஞ ஞயினும், தன்னை இறந்தவர்க்கு இல்லை என்று சொல் லாது இயன்றமட்டில் ஏதேனும் கொடுத்தலே வேண் டும். கொடுக்காவிடின் புத்திரன் கொடுக்கும் பிண்டம் பிசாசுக்கையதாகும். பின்னர் அச்சீவன்வருந்தி அப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரேதக்கூட்டம். புண்ணில்பத்திரைநதி. வடவிருட்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேய் பிடுங்கியபோது தனதுகையிற் சிதறிய பிண்டசேஷத்தை உண்டு, ஐயோ! கேட்டவர்களுக்குயாசகங்கொடாமல் மறுத்தபாபத்தின் பயனேயிது! வழிநடந்துவந்தேன், வயிறுபசிக்கின்றேன் என்றவருக்கு அரைவயிறு அன்னமேனும் கொடுத்தேனா சாக்காடென்பது ஒன்று நிச்சயமாய் உளது என்று நினைத்தேனா என்று துக்கப்படுபன். அப்போது யமதூதர் சீவனைக் கண்ணுற்று முழுமகனே! மானிடசன்மத்தை சீவனுக்குவேண்டியவற்றையெல்லாம் தருவதாகிய கற்பக விருக்ஷமென்று சொல்லத்தக்கது மானிடசன்மம்பெற்ற சீவனுக்கு அரிது யாதுளது? வேண்டிய நல்வினைகளையெல்லாம் அச்சன்மத்தால்புவியில்கொள்ளையடிக்கலாமே! அதனை அறியாது கேடுற்றனையே மானிடசன்மத்தால் புவியில் செய்த நல்வினை தீவினைகளின் பயனைமற்ற உலகங்களில் அனுபவிக்கலாமேயல்லது அவ்வுலகங்களில் ஒன்றுஞ்செய்யக்கூடாது உத்தமஉலகடைந்து இன்பம் அனுபவித்தலும், அதமஉலகடைந்துதுன்பம் அனுபவித்தலும், மண்ணுலகில் சிவிகை ஊர்தலும், அச்சிவிகை சுமத்தலும் அப்பூவுலகில் செய்த புண்ணியபாபங்களின் பயனாலே என்றுணர்க. அவற்றை இப்போது உணர்ந்துஎன்செய்குவைஎன்பர். கருடனே! உதககும்பதானம் செய்யப்பட்டதாயின் சீவன் அவ் வுலகத்தைப் பருகிச் சிறிது விடாய்தவிர்ந்து ஏழாமாதத்தில் அப்புறம் நடப்பன். ஏ! பட்சிராஜனே! சீவன் பாதிவழி சென்றுணைகையால் அம்மாதத்தில் பிராமணர்களுக்கு அன்னதானம் செய்தல் வேண்டும். பின்பு அச்சீவன் பக்வாபதம் என்னும் பட்டினத்தைச் சார்ந்து எட்டாமாசிக சிரார்த்த பிண்டத்தை உண்டு அதனினின்று நடந்து துக்கதம் என்னும் நகரணைந்து மகா துக்கமடைந்துஒன்பதாமாசிகபிண்டத்தை ஆங்கு அயின்று, அதனை நீங்கி நாதாக்கிரந்தமென்னும் பட்டினம் நண்ணிபத்தாமாசிகபிண்டத்தை உண்பன். விருஷோற்சநம் செய்யாமையால் அநேக சீவர் பிரேதசன்மத்தோடு கூட்டங் கூட்டமாய் அப்பட்டினத்தில் எப்போதும் ஓ வென்று கதறிக்கொண்டிருப்பார். அவர்களைப் பார்த்து அச்சீவனும் கதறி அப்பால் நடந்து சுதப்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமபடர். பிண்டசரீரமுடையவன். ஓடக்காரர். வைதரணி, கோ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்னும் புரியைச்சார்ந்து, பதினொன்ற மாசிகபிண்டத்தை அவ்விடத்தில் அயின்று, சீதாப்ரம் என்னும் நரகணைந்து, ஆங்குச் சீதத்தால் வருந்தி பன்னிரண்டாமாசிகபிண்டத்தையுண்டு, அதனினின்று புறப்பட்டு சென்று துக்கத்தோடு நான்கு திக்கையும் யமதூதர்களையும் பார்த்துக் கிங்கரர்களே! என்மனைவி மக்கள் ஒருவரையுங்காணேன் ஏழையேன் என்செய்வேன் என்பன் காலதூதர் சீவனை நோக்கி மூழுமகனே! மனைவி மக்கள் ஈங்குமூளரோ? அவர்மேலாசை இன்னும்ஒழியவிலையோ? நீ செய்த புண்ணியபாபங்களின் பயனையே ஈங்கு காண்பாயென்று அறைகுவர். சீவன் அதனைக் கேட்டு, ஐயோ? முன்னே நவின்றனம் மாட்டாகையாலன்றோ இந்தத் துன்பத்துக்குள்ளானேனென்றுமனம் புழுங்கி நடந்து, வைவசுவதபட்டினம் சேருமுன்னரே ஊனப்திக பிண்டத்தை அருந்தி அப்பட்டினம் சார்வன், அவ் யமபுரி நூற்று நாற்பத்து நான்கு காதவழி அகலமுள்ளதாய், கந்தருவாப்சரசுகளோடு கூடியதாய் எண்பத்து நான்காயிரம் பிராணிகள் ஒருங்குற்றதாய் விளங்கா நிற்கும். சீவர்கள் செய்யும் பாபபுண்ணியங்களைத் தெரிந்து நமக்கு விண்ணப்பஞ் செய்யச் சிரவணர் என்போர் பன்னிருவர் அந்நகரில் இருக்கின்றனர். சீவரெல்லாம் அப்பன்னிருவரையும் ஆராதித்தல் வேண்டும். அச்சிரவணரை ஆராதித்த சீவன் இறுதிக்காலத்தில் யமபுரி சேரும்போது அவன்செய்த பாபங்களெல்லா வற்றையும் எடுத்துச் சொல்லாமல் புண்ணியங்களையே அச்சிரவணர் வெளிப்படுத்துவர். ஆதலால் சிரவணரை ஆராதித்தல் மிகநன்மையென்று உணர்க என்றருளினர்.

ஆரும் அத்தியாயம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிசாசுகள்.　　பிண்டசரீரம்பெற்ற சீவன்.　　எமகிங்கரர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழாம் அத்தியாயம்

சூதபுராணிதர் சௌனகாதியரைப்பார்த்து, மக ருஷிகளே! கேளீர்; பின்னர் இருக்கு-எசுர் சாமவேதங்கள் அவயவங்களாகிய கருடன், பரமகாருண்யனுகிய எம்பெருமானது திருவடிகளைத்தொழுது, எந்தையே! முன்னமே புகன்றருளிய சிரவணர் பன்னிருவரும்யாருடைய புத்திரர்? வைவசுத பட்டினத்தில் அன்னவர் இருப்பக் காரணம்யாது? மானிடர் செய்யும் பாப புண்ணியங்களை அச்சிரவணர் எப்படி யறிகின்றனர் அவற்றை அடியேனுக்கு நவின்றருளுகவென்று வேண்டலும், ஆதிபகவன், நன்றென்றுமகிழ்ந்து, புள்ளரசே! கேண்மோ? இறுதியுற்றஞான்று தன்னந்தனியனுகிய ஸ்ரீ மகாவிஷ்ணு அயனாதி தேவரோடு யாரும் யாவும்தன்னுள்ளே ஒடுங்கநெடும்புனலில்பள்ளிகொண்டருளினர். அவ்விஷ்ணுவின் உந்தியினின்று நான்முகன் தோற்றி அவ் ஹரியைக் குறித்து நெடுங்காலம் மாதவம்புரிந்து வேதத்தையும் படைப்புத்தொழிலையும் உணர்ந்து, யாவரையும் யாவற்றையும் படைத்தனன். படைத்தவுடனே உருத்திரன் முதலிய தேவரெல்லாம் அவரவர்தொழிலில் தலைப்பட்டனர். யாவரினும் வலியனுகிய தருமராஜனும் சையமினி என்னும்நகரமடைந்து ஆசனத்தில் உட்கார்ந்து ஜீவர்கள் செய்யும் பாப புண்ணியங்களை அறியத் தொடங்கினன். தொடங்கிய அவனுக்குச் சேதனர்கள் செய்யும் பாபபுண்ணியம் தெரியாமையால் அவன்வருந்திய மனத்தோடு சதுர்முகனைக்கண்டு வணங்கி, ஓ மகாதேவனே! அடியேன் சையமினி நகரமடைந்து ஜீவர்களது புண்ணிய பாபங்களை யுணர்ந்து சிக்ஷை ரக்ஷைசெய்ய எத்தனித்தேன். அச்சீவர்கள்செய்யும் பாபபுண்ணியங்கள் இன்னவென எனக்குத்தெரியவில்லை, அவற்றையறிந்தல்லவோ ஜீவரைக்கண்டித்தலும் காத்தலும்செய்தல்வேண்டும். ஆதலால் அவற்றை யான் உணரும்படி அடியேனுக்கு அருள்புரிக என்றனர். பதுமாசனன் அதனைக்கேட்டுத் தருப்பையெடுத்தெறிந்து தேககாந்தி யுடையாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட கண்ணுடையாரும், மனக்கண்ணாலே யாவற்றையும் அறிகின்றாருமாகிய பன்னிரண்டு புத்திரரைப் படைத்து, நமனைப்பார்த்து, ஓ! தருமா! ஜீவரெல்லாம் நினைப்பதையும் பேசுவதையும் நடத்துவதையும் ஒக்க இருக்கின்றவர்போல இப்பன்னிருவரும் உணர்ந்து நன்கு வெளிப்படுத்துவர். அவரால் நீ யுணர்ந்து சிக்ஷை ரக்ஷை செய்திடுமென்று விடுத்தனன், காலன் பிரமனைத்தொழுது, அச்சிரவணரோடு தென்புலன் சார்ந்து சேதனர்களது புண்ணியபாபங்களை அறிந்து தக்கவாறு புரிவானாயினன், பட்சிராஜனே? இறுதியடைந்தவுடனே அங்குஷ்டபரிமிதமான வாயு ரூபமாகிய ஜீவனைத் தூதர் யமபுரிகொண்டு செல்வர். தருமார்த்த காமமோக்ஷங்கள் என்றவற்றில் தருமம்செய்த உத்தமரெல்லாரும் தருமமார்க்கமாக அந்நகரம் செல்வர் பொருள்முதலிய வற்றைப் பெரியோர்களுக்குக் கொடுத்தவர் விமானங்களின்மீதுசெல்வர், பெரியோர்கள் விரும்பியவற்றை அவர்களுக்குக் கொடுத்தவர் கொய்யுளை குதிரைமேலேறிச்செல்வர், மோட்சஇச்சை கொண்டு வேதசாஸ்திரங்களை அறிந்து பத்தி புரிந்தவர் இந் நான்கு விதத்திலும் சம்பந்தப்படாத பாவிகள் காலால் நடந்து செல்வர், அவ்வழியில் மரத்தின் இலைகளெல்லாம் உடைவாளை ஒத்தனவாயிருக்கும் மணல்களெல்லாம் வறுத்துக்கொட்டிய பால்போலக் கிடக்கும். அம் மார்க்கத்தில் நடக்கும்போது அதிக வருத்தமுண்டாகும். ஜீவன் சிரவணரைப் பூசித்தவனாயின் அச்சிரவணர் அச்சீவனுடைய பாபத்தைச்சொல்லாமல் புண்ணியத்தைமாத்திரம் யமனுக்குச் சொல்வர் சிரவணரை ஆராதிக்கும் ஜீவனைப் பாபம் என்றும் அணுகாது. சிரவணபூசை செய்தவுடனே, பன்னிரண்டு கலசங்களில் புனலோடு அன்னம் பெய்து நிறைத்து அக்கலசங்களை அந்தச் சிரவணரை உத்தேசித்துப் பிராமணருக்குக் கொடுத்தல்வேண்டும். அப்படிக்கொத்த ஜீவனுக்குச் சிரவணர் யமலோகத்தில்சகல நன்மையும் செய்வர் கலுழனே? சிரவணர்களுடைய தோற்ற முதலியவற்றைச்சொல்லும், இப்புண்ணிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிதையைப் பத்தியோடு கேட்போன் பாபத்தினின்று நீங்கிப் புனிதனுவன் என்றருளினர்.

ஏழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

## எட்டாம் அத்தியாயம்

சூதபுராணிகர்சௌனகாதிமகருஷிகளே! முதற்கடவுள் கருடபகவானைக் கண்ணுற்று, வைன தேயனே! ஜீவன் செய்யும் பாப புண்ணியங்களைச் சித்திரகுப்தன் சிரவணரால் உணர்ந்து யமனுடைய உத்தரவின்படி தக்கது செய்கின்றனன், சீவன் வாக்கால் செய்த பாப புண்ணியங்களைவாக்காலும் சரீரத்தால் செய்தவற்றைச் சரீரத்தாலும், மனத்தால் செய்தவற்றை மனத்தாலும் அநுபவிப்பன் பெரியோரைப் புகழ்தல், வேதசாஸ்திரங்களைப் படித்தல் முதலியவற்றைச் செய்தவன் யாண்டும் வாக்கால் வெற்றிப் பெறுவன். பெரியோரை இகழ்தல், நீசபாஷையை உச்சரித்தல் முதலிய பாபங்களைச் செய்தவன் வாயால் கீடம் சொரிவன், புண்ணியதீர்த்தமாடல், பாகவதற்குத் தண்டம் சமர்ப்பித்தல், முதலிய நல்வினை புரிந்தோன் நல்லிணக்கமுள்ள சரீரம் பெறுவன். பரஸ்திரீ கமனஞ்செய்தல், பிறவுயிரை வருந்தல் முதலியவற்றைப் புரிந்தவன் குரூரமான தேகமடைவன், ஆதிபகவானுடைய நித்திய திவ்விய மங்கள விக்கிரகத்தைத் தியானித்தல் யாவருக்கும் இகத்தையே நினைத்தல் முதலியவற்றை செய்தவனென்றும் உவப்புடைய மனமுடையோனுவன். எப்போதும் யாவருக்கும் அகிதத்தையே நினைத்தவன் வருந்தும் மனமுடையோனுவன். ஏகருடா! யமபுரியின் தன்மையையும் அப்புரிக்குச் செல்லும் மார்க்கத்திலுள்ள இன்ப துன்பங்களையும் நினக்குச் சொன்னேன். இறந்தவனைக் குறித்து அன்னதான முதலியவைகள் செய்தல்வேண்டும். அத்தானபலனுல் இறந்து செல்லும் ஜீவன் மார்க்கத்தில் வருந்தாதுசெல்வன், தீபதானம்செய்யின் ஜீவன்யிருள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கத்தில்வழிதெரிந்து இனிதாய்ச்செல்வன். கார்த்திகைமாதத்தில் சுக்கிலபட்சத்தில் சதுர்த்தசியில் தீபதானம் செய்யின் அதனாலும், விருஷோற்சர்க்கம் செய்யின் அதனாலுஞ்சீவன் நல்லுலகடைவன் பதினொன்று நாள் செய்யும் பிண்டத்தால் சிரசு உரோம முதலியவற்றோடு நன்கு அமைவதாகும். தண்ணீர்க்குடம் தானஞ் செய்யின் யமதூதர்கள் திருப்தியடைந்து சீவனை வருத்தார். சையாதானஞ்செய்யின் சீவன் விமானத்தின்மேலேறி நல்லுலகு சேர்வன், இறந்தவன்பசிதாகத்தோடு மனைக்குமுன்னே மிகவருந்தி திற்பனுகையால் பதினொன்று நாளிலேனும் பன்னிரண்டா நாளிலேனும் அவனைக் குறித்துத் தான தருமங்கள் செய்தல்வேண்டும் என்றருளினர்.

பெரியதிருவடி பக்தவச்சலனைத்தொழுது, ஏ ஆதிபரமா! பததானஞ் செய்யவேண்டுமென்று புகன்றருளக்கேட்டேன் பததானமாவது என்னை? அதனை எவ்விதங் கொடுத்தல் வேண்டும்? நவின்றருளுக வெனலும், கண்ணன்கலுழனே! குடையும்-மாரடியும்-தண்டமும்-வஸ்திரமும்-மோதிரமும்-உதக்கும்பமும்-ஆசனப்பலகையும்-அன்னமும்-பூசாத்திரவியமும்- பூணூலும்-தாமிரச் செம்பும்-அரிசியுமாகிய இவற்றைச் சத்பிராமணருக்குக்கொடுத்தல்வேண்டும். குடைதானஞ்செய்யின் சீவன் யமபுரிக்குச் செல்லுங்கால் குளிர்ந்த நிழல் மார்க்கத்திலே செல்வன். மாரடிதானஞ் செய்யின் பரிமேல் இவர்ந்து செல்வன். அங்ஙனமே செய்யுந் தானங்களில் யமதூதர்கள் சந்தோஷித்துச் சீவனை வருத்தாமல் ஆதரவோடு அழைத்தும் போவர் என்றருளினர். ஓ நைமிசாரணிய வாசிகளே! பின்னர்ப் பரவைக்கரசன், சர்வலோக சரணியனைச் சரணஞ்செய்து, கருணாநிதியே! நரகங்கள் எத்தனை இருக்கின்றன? அவற்றின் பெற்றிமையாது? அடியேனுக்குக் கூறியருள வேண்டுமெனலும், பாம்பணைப் பரமன் கலுழனே! பாவஞ்செய்வோர் புகும் தீவாய நரகம் ஆயிரம் பதினாயிரமல்ல. எண்பத்துநான்கு லட்சமிருக்கின்றன. அவற்றில் தாமிச்சிறம்-சௌகசம்-கிரௌஞ்சம்-மகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைரவம்-சால்மலி-ரௌரவம்-நட்மளம்-பூதி-மிருதகம் காலசூத்திரகம்-சங்காதம்-லோகதுந்தம்-சம்விஷம்சமா னம்-மகாநரகம்-கோகளம்-சஞ்ஜீவனம்-மகாபதம் ஆவி த்தியம்-அந்ததாமிசிரம்-கும்பீபாகம்-அசிபத்திரவனம் ஆகிய இருபத்தொரு நரகங்களும் மிகக்கொடியனவா கும். மறித்தவனைக்குறித்துத் தினந்தோறும் கொடுக்கப் படும் உதக கும்பத்தைத் தூதர்கள் பெற்றுத் திருப்தி அடைவர். மாசிக முதலியவற்றைச் ஜீவன் அடைந்து திருப்தனுனவன் தூதரும் அவற்ருல் உவப்படைவர் ஓ கருடா? வருஷ முடிவில் ஜீவன் பிண்டத்தாலாகிய சரீரத்தோடுயமபுரியடைவான் என்ருேமே? அச்சீவன் யமபுரி யடையுமுன் அப்பிண்ட சரீரத்தைத் தவிர்த்து அங்குஷ்டபரிமாணமாய் ஒரு வன்னிமரத்தில் சிறிது காலமிருந்து பின்னர் கருமத்தாலாகிய சரீரம் பெற்று யமனிடம் சார்வன் என்றருளினர்.

எட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

## ஒன்பதாம் அத்தியாயம்

சூதபுராணிகர், நைமிசாரணிய வாசிகளே! வாசு தேவன் கருடபகவானைப் பார்த்துப், பறவைவேந்தே? அங்குஷ்ட பரிமாணமாயுள்ள ஜீவன் கருமத்தால் உள தாகிய சரீரம்பெற்று, வன்னிமரத்தைவிட்டு யமதூத ரோடு இருபது காதவழி விஸ்தாரமுள்ள சித்திரகுப்த னதுபட்டினத்தூடுசென்று யமபுரிசார்வன். அந்நமன் பட்டினம் புண்ணியம்செய்தோருடையகண்ணுக்கு மிக வும் ரம்பியமாய்விளங்கும் இரும்பாலாகிய ஊன்றுகோ லும், உப்புப் பருத்தியும் எள்ளோடுபாத்திரமும் ஆகிய இவற்றைத் தானம் செய்தல்வேண்டும். இந்தத் தானங் களால் யமபரிசாரர்கள் அதிக சந்தோஷமடைந்து சீவன் ஆங்குப்போனவுடனே தாமதப்படுத்தாமல் தரும ராஜனுக்குத்தெரிவிப்பர். தருமத்துவசன் என்றுபெயரு டையஒருவன் சர்வகாலமும் யமனுடைய அரண்மனையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பான் கோதுமையும்-கடலையும்-மொச்சையும்-எள்ளுங்-கொள்ளுங்-பயறுங்-துவரையும் ஆகிய இந்த ஏழு தானியங்களைப் பாத்திரங்களில் வைத்துத் தானஞ்செய்யின் அந்தத் தருமத்துவசன் திருப்தனாகி இந்தச்சீவன் நல்லவன், புண்ணியம் செய்தவனென்று யமனுக்கு விண்ணப்பம் செய்வன்! வைனதேயனே! பாவஞ்செய்த சீவனுக்குத் தருமராஜன் யாவரும் அஞ்சத்தக்க ரூபத்தோடு தோற்றுவன். அச்சீவனும் அவனைக்கண்டு அச்சங்கொண்டு நடுக்கமுற்று ஓலமிடுவன். புண்ணியம் செய்த சேதனனுக்கு நல்லரூபத்தோடு தோற்றுவன். அச்சீவன் அஞ்சாது அவனைப்பார்த்து களிகொள்வன் தருமராஜன் ஒருவனே பாபிக்குக் கெட்டரூபத்தோடும் புண்ணியனுக்கு நல்ல ரூபத்தோடும் தோன்றுவன். புண்ணியம் செய்தசீவன் சேர்வானாயின்; இச்சீவன் மகாபுண்ணியம் செய்தமையால் சூரியமண்டல மார்க்கமாய்ப் பிரம்மலோகம் அடையத்தக்கவனென்று யமன் தான் வீற்றிருந்த ஸ்தானத்தினின்று பொருக்கென எழுந்து நிற்பன். யமலோகத்தில் கிங்கரரெல்லாரும் பாசம்உலக்கைமுதலியவற்றைகரத்திற்கொண்டு உலாவி நிற்பர். மரித்த சீவனுக்கு மாசிக சோத கும்ப முதலாகியவும், பததானமும் செய்யப்படாவாயின் அச்சீவன் வருத்தமுற்றுக் கிங்கரர் கயிற்றினால்கட்டி, உலக்கையா லோச்சி ஆடுமாடுபோல இழுக்கக் காலன் சமீபம்சேர்ந்து பூர்வஜன்மத்தில் செய்த புண்ணிய பாபங்களை அனுசரித்துஒருஜன்மம் அடைவன். அதிகபுண்ணியஞ்செய்த சீவனாயின் தூதர்களாலே துன்பப்படாமல் யமன்முன்சென்றுதேவனாவன். பாபம் செய்தவனாயின் துன்பப்பட்டு நடுக்கத்தோடு சென்று நரகத்தில் வீழ்ந்து பின்பு கிருமி முதலிய சன்மமடைவன். பாபபுண்ணியம் மிதமாயிருக்குமாயின் முன்மானிட சன்மம் பெறுவன். தான தருமம்செய்தவன் எக்காரணத்தினாலேனும் எச்சன்மம் பெறினும் அத்தான தருமத்தின் பலனை அச்சன்மத்தில் அடைவன் ஜீவன் நீங்கியவுடனே சரீரத்தைக் குழியிற் புதைப்பின் மண்ணோடு மண்ணாகும், கண்டம்செய்து எறியின் நரிமுதலியவைதின்று பவ்வீ ரூபமாகும். தகனம்செய்யின் சாம்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாகும் மெய்யின் தன்மை அங்ஙனமாயினும் சீவனுக்கு மானிடதேகம் கிடைப்பது அரிது மானிட தேகம் கிடைத்தாலும் பிரமகுலத்தில் சனிப்பது அதனினு மரிது. பிரமகுலத்தில் சனித்தும் ஒழுக்கத்தினின்று பெறவேண்டிய வீடு பெருனேல், தவம் முதலியவை செய்து வருந்தித் தான் கரத்திலடைந்த அமிர்தம் நிறைந்த பொற் கலசத்தைச் சித்திக் கெடுதியால் புவியில் கவிழ்த்தவனை ஒப்பாவன் என்றோதி யருளினர்.

ஒன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

## பத்தாம் அத்தியாயம்

சூதர், சௌனகா திருஷிகளே! கருடபகவான் கேசவனைத் தொழுது, என்றன் சுவாமியே! எவ்வித பாபம் செய்தவன் பிரேதசன்ம மடைகின்றனன்? அப்பிரேத சன்மத்தினின்று எப்படி நீங்குகின்றனன்? பிரேத சன்மத்தோடு உலகில் சஞ்சரிப்பானோ, அல்லது யமனுடைய காவலிற் கிடப்பானோ? அடியேனுக்குப் புகன்றருளவேண்டுமென்று வேண்டலும், நம்மாதியங்கடவுள் புள்ளரசே? பிறனுடைய பொருளையும், மனைவியையும் அபகரிக்கின்றவன் யாவனோ அவனேசரீரமடையாமல் காற்று ரூபமான பிரேத சன்மமடைந்து பசிதாகத்தோடு வருந்தியவனுடைய காவலினின்று நீங்கி யாண்டுத் திரிதருவன் ஒருவன் மரித்துச் சரீரம் வீட்டிற் கிடக்கும்போதே அவன் இறந்தமைக்குறித்துத் துக்கப் படாமல் உற்றவர் மற்றவ ரெல்லோரையும் வஞ்சித்து அவனுடைய பொருள்களை அபகரித்தவன் யாவனோ? அபகரிக்க இச்சித்தவன் யாவனோ? அவனே தீவாய் நரகங்களை யெல்லாம் அநுபவிப்பன், மரித்தவன்பொருளை அவன் வழியினுள்ளோர் அடையாமல் மோசஞ் செய்து அபகரித்தபாவியினுங் கொடும்பாவி ஒருவனும் இலன். இவ்விதபாபஞ்செய்தவனே பிரேதசன்மமடைந்து தன்னுடைய குடும்பத்திலுள்ளவர்களையும், பந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்களையும் துன்பப்படுத்துவன். பிதிர் தினத்தில் வருகின்ற பிதிர்களை வீட்டினுள்ளே விடாமல் வாசலில் நின்று தடுத்து துரத்துவன் பிதிர்களுக்குக் கொடுக்கின்ற அவி முதலியவற்றை அவனே தின்பன். மனையிலிருக்கின்ற பொருள் முதலியவற்றைக் குடும்பஸ்தர்கள் அநுபவிக்காமலும் பிறருக்குக்கொடுக்காமலும் வீணே கிடக்கச்செய்வன் தன்னுடையபுத்திரன் முதலியோருக்குச் சந்ததி யுண்டாகாமல் வமிசநாசமடையும்படி செய்வன் சீதசுரம் தாபசுரம் வைசூரி முதலிய ரோகங்களையும் அப்புத்திரன் முதலியோருக்கு உண்டாக்கி வருத்துவன். புத்திரன் முதலியோர் வாயினின்று உமிழ்ந்த எச்சில் நீரையே உண்பன் என்றருளினர். பறவைவேந்தன், ஆதிமூர்த்தி! பிரேதசன்ம மடைந்தவன் இன்னும் என்செய்வன்? எவ்விதமாகத் தோற்றுவன்? குலத்தில் ஒருவன் பிரேதசன்மமடைந்திருக்கிருனென்பதை எப்படி அறியலாகும்? நவின்றருளுக வெனலும் நம் பகவான், வைனதேய? பிரேதசன்ம மடைந்தவன் தனது குலத்தையே அதிகம் பீடிப்பன். தருமம் செய்பவனுக்கும், அரிநாம சங்கிர்த்தனஞ் செய்பவனுக்கும் பிதிரர்களை உத்தேசித்துச் சிரார்த்தாதிகள்செய்பவனுக்கும், திருவணை முதலிய தீர்த்தயாத்திரை செய்பவனுக்கும் பிரேதசன்மமடைவதனுல் துன்பம்நேராது நற்கருமம் ஒன்றும் செய்யாதவனுக்கும், பாகவதரை நிந்திப்பவனுக்கும், தெய்வபக்திசெய்யாதவனுக்கும், புலாலுண்போனுக்கும், மது வருந்துவோனுக்கும், பொய் சொல்வோனுக்கும் பிரேதசன்ம மடைந்தவனுல் அதிக துன்பம் நேரிடும். பாபங்களையேசெய்தலும், ஆண்மகவைப் பெருமல் பெண்மகவையே பெறுதலும் ஆண்மகவுகளை என்றும் நற்கதிபெற்றுப்பெற்று இழத்தலும், சுற்றத்தாரோடு ஒற்றுமையில்லாமல் வேற்றுமையுறுதலும், பசுக்கள் முதலியவை இல்லாமலிருத்தலும், துண்ணெனத் துன்பங்கள் உண்டாதலும், நண்பனோடு விரோதம் நேர்தலும், வைதிக உபவாச தினமாகிய ஏகாதசியில் உபவாசமில்லாமல் அன்னமுண்ணுதலும், அரிபக்தி செய்யாமல் வாணுள் வீணுளாதலும், ஜபஓமங்கள்செய்யாமலிருத்தலும் தனக்குக் கீழ்ப்பட்ட குலத்தாளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசித்தலும்,சுரரையும் பூசுரரையுந் தாய்தந்தையரையு மிகழ்தலும், அயலானைக்கொல்ல எத்தனித்தலும், பயிர்கள் நல் விருத்தியடைந்தும் பலன் கிடைக்காம லழிதலும் தனக்குத்தாழ்ந்த மரபில் பெண் கொள்ளலும், கொடுத்தலும், இழிந்தவர்செய்யும் கருமத்தையே செய்தலும், எப்போதும் அதர்மங்களையே எண்ணுதலும், என்றும் தைரியமடைதலும், அக்கினியால் அரசனால் பொருள் முதலியவை அழிதலும், வழியில் திருடர்களால் துன்பப் படுதலும், வயிற்றுவலி முதலிய மகா ரோகங்கள் வருதலும், சுருதி, ஸ்மிருதி, இதிகாச புராணங்களைப் பொய்யென்றலும், தெய்வபக்தி, பிராமண பக்தி செய்யாம லிருத்தலும், முகத்தில் நல்ல தோற்றமில்லா திருத்தலும், பிதிர் கர்மங்கள் விக்கினத்தால் குறைவுபடுதலும் புத்திரன் பகைவனைப்போலத் துவேஷித்தலும், ஆமுடையாளைச் சேர்ந்து வாழாமலிருத்தலும், அடுத்தடுத்து அவளை முனிதலும் ஆகிய இவைகளெல்லாம் ஒருவனுக்குத் தனது குலத்திற் பிறந்து இறந்து பிரேத சன்ம மடைந்தவனாலேயே உண்டாகின்றன, ஓ கருடா! எந்தக்குலத்திலே பிரேத சன்மதோஷம் நேரிட்டிருக்கிறதோ அந்தக் குலத்திற்குத் துக்கமேமிகுதியாயிருக்கும். பிரேத சன்மமடைந்தவன் பயங்கரமான முகத்தோடும் வாள்போன்ற எயிற்றோடும் தன் குலத்தோரிடத்தில் சொப்பனத்தில் தோன்றி ஐயோ! என்னைக் காப்பாற்றுகின்றவன் ஒருவனுமிலனோ! பசிதாகத்தோடு வருந்துகின்றேனே! பிரேதசன்மம் நீங்கவில்லையே என்று கதறுவான்.

பத்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினொன்றும் அத்தியாயம்

---

சூதபுராணிகர், நைமிசாரண்ய வாசிகளே! பின்னர் கருடபகவான் முகுந்த பிரானைத்தொழுது, ஜகந்நாதா! பிரேத சன்மமடைந்தவன் அதனின்று எப்படி நீங்குவன்? எவ்வளவுகாலம் ஒருவனைப் பிரேதசன்மம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடியா நிற்கும்? மொழிந்தருள வேண்டும் எனலும், மெய்த்தேவன் ஓ பட்சிராஜனே! பிரேதசன்மமடைந்த வன் தன் குலத்தானுக்குச் சொர்ப்பனத்தில் தோன்றி னும்தோன்றுவன்; தோன்ருமலே குலத்திலுள்ளோரு க்குத் துன்பங்களைமாத்திரம் விளைப்பினும் விளைப்பன். சொர்ப்பனத்தில் தோன்றினனாயினும், துன்பம்புரிந் தனனாயினும், பெரியோர்களுக்குத் தெரிவித்து அவர் கள் விதித்தபடி தருமத்திலே சித்தம் வைத்து தேமா. தெங்கு! சண்பகம் அரசு முதலிய விருக்ஷங்களை வைத் துப் பல புஷ்பாதிகளை உண்டாக்கவேண்டும். பிராமண ருக்குப் பூதானமுதலியவை கொடுத்தல்வேண்டும். பசு வின் கூட்டங்கள் வயிரூர மேயும்பொருட்டுப் பசும்புல் வளரும்படி நிலம்விடல்வேண்டும். தண்ணீருள்ள குள மமைத்தல்வேண்டும். பகவத்கைங்கரியம், பாகவதகைங் கரியம் செய்தல்வேண்டும். கங்கை முதலிய தீர்த்தங் களிலே நீராடித்தானதருமஞ் செய்தல்வேண்டும். துன் பங்கள் எப்போது நேரிடுகின்றனவோ அப்போது அவசியம் இவற்றையெல்லாம் செய்தல்வேண்டும். செய் யாவிடின் துன்பம் விருத்தியாகும். பிரேதசன்மதோஷ த்தால் அத்தருமச் செயல்களில் புத்திநாடாது பத்தி யும் வராது. புத்திநாடாவிடினும் பத்திவாராவிடினும் அவன் முயன்று அவ்வறச் செயல்களைச் செய்கின் ருஞே அவன் இன்பமடைவன், பிரேதசன்மமடைந்த வனும் இன்பமடைந்து பூலோகம்விட்டு யமலோகஞ் சார்ந்து அச்சன்மம் நீங்குவன். தனதுகுலம் விரு த்தியடையும்படி புத்திரனுண்டாகச் செய்வேனென் றருளினர். கருடபகவான். ஓ! ஆராவமுதே! குலத்தில் பிரேதசன்மமடைந்தவன் ஒருவனுளனென்று தெரிய வில்லை அப்பிரேத சன்மமடைந்தவன் சொப்பனத்தில் வந்துசொல்லவுமில்லை அங்ஙனமாகக்குலத்திற்கு துன் பமாத்திரம் உண்டாகின்றது பெரியோரைக் கேட்பின், பிரேதசன்ம தோஷத்தால் துன்பமடைகிறது என்ற னர். அப்போது ஒருவன் செய்யத்தக்கவை எனனே? சொல்லியருளுகவெனலும், ஆதிபகவன் ஓ! புள்ளரசே! பெரியோர் சொல்வதைச் சத்தியமென்றே உறுதிகொள் ளல்வேண்டும். ஸ்நானம்-ஜபம்-ஓமம் தானம் முதலிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைகளால் ஒருவன் தனது பாவநிவர்த்தி செய்துக் கொண்டு நாராயணபலி செய்தல்வேண்டும் பாபநிவர்த்திசெய்துக்கொள்ளாமல் நாராயணபலி செய்தலுக்கு எத்தனித்தால் அது நிறைவேருமையின்பொருட்டுபூத பிரேத பைசாசர் பெரியதடையுண்டாகுவர் ஆகையால் முதல் பாபநிவர்த்தி செய்துக்கொண்டு மற்றது செய்தல்வேண்டும் புண்ணியகாலங்களில் புண்ணியக்ஷேத்திரங்களில் பிதிர்களையுத்தேசித்து யாவன்தானதருமம் செய்கின்ருனே, அவன் பூதப்பிரேத பைசாசர்களால் ஒருசிறிதும் துன்பமடையான் மானிடனுக்குத் தந்தை தாய் குருக்களே முதற்றெய்யமாவர், சரீரத்தை யுண்டாக்கலாலும், நன்னெறியைக் காட்டலாலும், அம் மூவருமே முதன்மையாவர் எக்காலத்திலும் அவர்களைப் பூசித்தல்வேண்டும் அவர்கள்சொற்படி நடக்கவேண்டும் தாய்தந்தையரைப் பூசித்து நடக்கின்ற ஒருவன் தேவதாராதானம், பிராமணபத்தி, தீர்த்தயாத்திரை, திவ்விய தேசயாத்திரைமுதலிய ஒன்றும் செய்யாவிடினுமபெருங் குற்றமன்று தாய்தந்தையரைப் பூசிக்காமல் அவர்கள் சொற்படி நடக்காமல் அத்தருமங்களை யெல்லாம் தவிராது செய்யினும் வியர்த்தமாகுமேயன்றி அவற்ருல் சிறிதும் பயனில்லை, தாய் தந்தையர் மரித்தபின்னர் அவர்களைக் குறித்துந் தான தருமங்கள் யாவன் செய்கின்ருனே அவற்றின் பலனை அவனே யடைகின்றனன். புத் என்கிற நரகத்தினின்று தாய்தந்தையரைக் கரையேற்றுகின்றமையால் மகனுக்குப்புத்திரன் என்று பெயருண்டாயிற்று. யாவன் தாய் தந்தையர் சொற்படி நடவாமல் பெண்டு பிள்ளை சொற்படி நடக்கின்ருனே, அவன் புலையனினும் புலையனவன். ஓ! கருடா! கூபத்திலேனும், நதியிலேனும் விழுந்து மரித்தவனுக்கும் வாளினுல் வெட்டுண்டிறந்தவனுக்கும், தற்கொலைசெய்துக் கொண்டவனுக்கும் ஒரு வருஷம் வரையிலும் கிரியைசெய்யலாகாது. கருமம் செய்வதற்குள் கலியாணமும், தீர்த்தயாத்திரையும், விசேஷதருமங்களும் செய்யலாகாது. வருஷ முடிவில் கருமம் செய்து பின்பு யாவும் செய்யலாம் என்றருளினர்.

பதினொன்ரும் அத்தியாயம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரண்டாம் அத்தியாயம்

வியாசர் மாணாக்கர் ஸ்ரீ வைஷ்ணவாசார மகரிஷி களே! பின்பு கருடபகவான், கருதிநாயகனைத் திருவடி தொழுது ஓ! அநந்தகல்யாணகுண நிலயனே! சீவன் எப்பாவங்களால் பிரேதசன்மம் அடைகின்றனன்! அப் பிரேதசன்மம் அடைந்தவன் யாதை உண்ணுவன்! எங்கே வசிப்பன்? அடியேனுக்குப்புகன்றருளவேண்டு மெனலும், பரமபதநாதன், வைனதேயா! பூர்வசன்மத் தில் மகா பாபம் செய்தவனே பிரேதசன்மம் அடை வன், ஒருவன் கிணறும், நடைவாவியும், குளமும், பூஞ் சோலையும் தண்ணீர்ப்பந்தலும், சத்திரமும், தேவாலய மும் உண்டாகிப் பலருக்கும் உபயோகமாய்த் தருமம் செய்ய, அவனுடையகுலத்திலேதோன்றினவன் பின்பு அவற்றைவிலக்குவிற்பானாயின் அவன் மரித்தவுடனே பிரேதசன்மம் அடைவன், செய்தவன் தானே அவற் றை விற்பானேல் அவனும் பிரேதசன்மம் பெறுவன். பிறர் பூமியை அபகரித்தவனும், கிராமத்தின்எல்லையை யும் வயலின் எல்லையையும், பூங்காவின் எல்லையையும், ஆரணியத்தின்எல்லையையும் புரட்டித் தன் நிலத்தோடு அந்நிலத்தைச் சேர்த்தவனும், குளத்தைத் தூர்த்து நிலம்சேர்த்தவனும் சண்டாளனால் அடிபட்டிறந்தவ னும் கடித்து மரித்தவனும், இடிவிழுந்து மாண்டவ னும், நெருப்பால் துஞ்சினவனும், மாடுமுட்டி மரித்த வனும், கழுத்தில் சுருக்கிட்டு நான்றுமாண்டவனும் பாஷாணந்தின்று உயிர்துறந்தவனும், ஆயுதத்தால் மாய்ந்தவனும், சமஸ்காரம் செய்யத் தன்குலத்தில் ஒரு வனும் இல்லாமல் இறந்தவனும், தேசாந்திரங்களில் ஒருவனுக்கு அறியாமல் துஞ்சினவனும், குஷ்டமுத லியமகாரோகங்களால் இறந்தவனும், திருடனால்மாய்ந் தவனும், விருஷோற்சர்க்கம் செய்யாமல் மாண்டவ னும், தாய்தந்தையருக்குச் சிரார்த்தம்செய்யாமலிருந்து இறந்தவனும் பிரேதசன்மம் அடைவர். ஓ! கருடா! பிராமணன் உயிர்மாய்வனேல், அவன் கிரியையின்பொ ருட்டு யாவும் பிராமணனே செய்தல்வேண்டும். சூத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரன் இறப்பனேல் யாவும் சூத்திரனே செய்தல்வேண்டும். அவ்விதமின்றி இறந்த பிராமணனுடைய சமஸ்காரத்தின் பொருட்டு, நெருப்பு, எருமுட்டை, வைக்கோல் அரிசி முதலியவற்றைச் சுடுகாட்டுக்கு சூத்திரன் கொண்டு செல்வனேல், இறந்த அப்பிராமணனும்கொண்டுபோகும் அச்சூத்திரனும் பிரேதசன்மம்அடைவர் இறந்த சூத்திரனுடைய சமஸ்காரத்தின் பொருட்டு மேற்சொல்லிய நெருப்பு முதலியவற்றைப் பிராமணன் கொண்டு செல்வனேல், இறந்த அச்சூத்திரனும் கொண்டுபோகும் அப்பிராமணனும் பிரேதசன்மம் அடைவர். பருவத்தினின்று விழுந்து மரித்தவனும், சுவரிடிந்து விழுந்து இறந்தவனும், கட்டிலிலேபடுத்திருந்தபடியே துஞ்சினவனும், மேல்வீட்டில் உயிர் நீத்தவனும், இராமகிருஷ்ணதித் திருநாமங்களைஉச்சரியாமல் மாய்ந்தவனும், ரசஸ்வலைப்பெண், சண்டாளன் முதலியோரைத் தீண்டில் ஸ்நானம் செய்யாமல் சூதகத்தில் இறந்தவனும், ரசஸ்வலையாயிருக்கும்போது மரித்தவனும் பிரேதசன்மம் அடைவர். தாய், மனைவி, பெண், மருமகள் முதலானவர்களுடைய சரீரதோஷத்தை கண்ணுற்பாராமலே பிறர்வார்த்தையைக்கேட்டு அவர்களைச் சாதிப்பிரஷ்டம் செய்பவனும், மனுநாலுக்கு விரோதமாய்த் தீர்மானம் செய்பவனும், சிநேகிதனுக்குத் துரோகம் செய்பவனும், பிராமணனையும் கோக்களையும் கொல்பவனும், கட்குடிப்பவனும், குரு பத்தினியைக் கூடுபவனும், வெண்பட்டையும் சொர்னத்தையும் திருடுபவனும், பிரேத ஜன்மம் அடைவர். பிரேதசன்மமடைந்தவரெல்லாரும் பாலைவனத்தில் எப்போதும் சஞ்சரித்து வருந்துவர் என்றருளினர்.

பன்னிரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதின்மூன்ரும் அத்தியாயம்

சூதபுராணிகர், நைமிசாரணிய வாசிகளே! பின்பு கருடபகவான் ஆதிபகவானைத் தொழுது, சர்வேசா? பூவுலகில் பிராம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திரர் என்று நான்குகுலத்தார்உளரல்லவோ? அவரல்லாமல் மிலேச்சரென்று ஒருவகுப்பாரும்உளரல்லவோ? அவர்களில் பாலியனாயினும், விருத்தனாயினும், தனவானாயினும் தரித்திரனாயினும், கருணையுடையோனாயினும், அஃது இல்லானாயினும். வித்துவானாயினும், அவ்வித்துவானாயினும், ஞானியனாயினும், அவந்தவனாயினும், திண்மையனாயினும். அஃது இன்மையனாயினும், உலகாளும் அரசனாயினும், உத்தமபிராமணனாயினும், பின்னும் யாவராயினும், ஒவ்வொருகாலத்தில் இருக்கின்றவரே இறத்தல் அடுத்தக் காரணம் என்னை? நவின்றருளுக வெனலும், நிலங்கடந்த நெடுமுடியண்ணல், ஓ! வைனதேயா! நன்கு வினவினை செப்புகின்ரோம் கேட்க! மரிக்குங்காலத்தில் சீவனைக் கவருவதற்குக் காலன் நியமிக்கப்பட்டிருக்கிறான். சீவராதுபலவிதமான தோஷங்களால் அச்சீவர் ஆயுசுகுறைந்து மாய்கின்றனர். மரித்தவீட்டில்போஜனம்செய்கின்றவனும், பிறன் மனைவியைப் புணர இச்சிக்கின்றவனும், தனக்குத் தகாத இழிதொழிலைப் புரிகின்றவனும், வாளுளிழப்பர், இகபரத்துக்கு உறுதியாய் நல்வினையைச் செய்யாதவனும், பெரியோர்களைப் பூசியாதவனும், தூய்மையில்லாதவனும், தெய்வபக்தியில்லாதவனும், பாபங்களையே செய்கின்றவனும் யமலோகத்தில் எப்போதும் நரகவாசம் செய்வர். பிறன் கேடுசூழ்கின்றவனும், பொய் சொல்லுகின்றவனும், சீவ கருணை யில்லாதவனும், சாஸ்திரப்படி நடவாதவனும், தனக்குரியதருமத்தைத் தவிர்த்துப் பிறனுக்குரிய கருமத்தைப் புரிகின்றவனும் யமலோகத்தில் வாதனைப்படுவர். புண்ணிய தீர்த்தமாடாத நாளும், ஜப ஓமங்கள் செய்யாத திவசமும் தேவதாராதனம் செய்யாத தினமும், புனிதரை வழிபாடியற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருத பகலும், சாஸ்திர முணராதநாளும் வீணாளே யாகும் சூத்திரமரபில் பிறந்தவன் பிராமணரே தெய்வ மென்று நினைத்துப் பத்திமைசெய்து அவரிட்ட தொழில்புரிந்து தாசனாய் ஒழுகுவனேல் அச்சூத்திரன் நற்கதியடைவன். அவன் வேறொரு கருமமும் செய்ய வேண்டுவதுமில்லை. உயர்ந்த சாதியருக்குரிய கருமங் களை அச்சூத்திரன் செய்வனேல் நரகமேபெறுவன். ஓ! கருடா தேகமோ நிச்சயமற்றது நிராதாரமாயுள்ளது. சுக்கில சுரோணிதங்களால் உண்டாகியது. அன்னபா னாதிகளால் விருத்தியடைவது காலையில் உண்ட அன் னம் சாயங்காலம் நசிக்கும் உடனே பசிக்கும் மீண்டும் உண்ணாவிடின் மெய்குலையும் ஆதலால்சரீரம் அநித்திய மென்றும் அது கருமத்தால் வருவதென்றும் எண்ணி ஜன்மமடையாமையின் பொருட்டு நற்கருமம் செய்தல் வேண்டும். ஓவைனதேயா! கருமத்தால் வந்ததேகத்தை யாருடையதெனலாம்? அதனை வீணே சுமந்து மெலி கின்ற சீவனது எனலாமா? அன்னவஸ்திரங் கொடுக் கும் தலைவனது கருப்பமுண்டுபண்ணும் தந்தையினது எனலாமா? பத்துமாதம் சுமந்துபெற்ற தாயினது என லாமா? தாயைப் பெற்றவனாகிய மாதா மகனது என லாமா? பிதாமகனதுஎனலாமா? விலைகொடுத்து அடிமை கொண்டவனது எனலாமா? சாம்பர்செய்யும் அங்கியி னது எனலாமா? அல்லது ஈர்த்து அயிலும்நரியினது எனலாமா? ஜீவன் போயினபின்பு புழுவாகவும் விஷ் டையாகவும் சாம்பராகவும் அழியும்சரீரம் ஒருவாதும் அன்றென்னு முற்றுதியை யாவரும் ஓர்ந்து சரீரத் தில் ஆசைவைக்காமல் பகவத்பாகவதாசாரிய கைங்கர் யங்களைப் புரிதல்வேண்டும். பாபங்கள் மனோவாக்கு காயங்களால் செய்யப்படுகின்றன. அதிக பாபஞ்செய்த சீவன் நாய் நரிமுதலிய இழிந்த சன்மமடைவன். அதி கம் செய்யாதவன் பூர்வஜன்மமே பெறுவன். சீவன் கருப்பவாசஞ் செய்யுங்காலை தாயினுடைய மலமூத்திரா திகளாலே அதிகம்துன்புறுவன் இறத்தலினும் பிறத்த லில் உளதாய துன்பத்தையும் கருமாதியையும் எண்ணி நன்னடையில் ஒழுகுதல்வேண்டும். தாய்வயிற்றினின்று பிறந்தவன் பாலியத்தில் வண்டல் விளையாட் டயர்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லால் தனக்கு உறுதியாயதை அறிகின்றானிலன், யௌவனத்தில் மன்மத சேஷ்டையா லறிகின்றானிலன். மூதுமைப் பருவத்தில் சோர்வாலும், கிலேசத்தாலும் ஒன்றனையும் உணர்கின்றானிலன் இங்ஙனம் உறுதியுணராமல் ஒழிவோரேபலருளர். பூர்வஜன்ம புண்ணியத்தால் உறுதியாயதை யுணர்த்தி செய்கின்றவன் யாவனோ அவனே நிரதிசய யின்பவீடாகிய நம்முலகு சார்வன். கருமத்தாலேயே சீவன் பிறந்து பிறந்திறக்கின்றான். பிறந்து அதிக வயதிராமல் ஐந்து வருடத்திற்குள் மரித்தல் மகா பாபத்தினா லென்றறிக. கொடும் பாபம் செய்தவனே பிறந்து உடனே மரித்து மீண்டும் பிறந்து மரிக்கின்றான். அவன் புறத்தலுக்கு மிறத்தலுக்கும் கணக்கிலது பூர்வஜன்மத்தில் நன்னெறியில் ஒழுகித் தானதருமங்கள் செய்த சேதனன் புவியில் தோன்றினால் நெடுங்காலம் மனைவி மக்களோடு சுகமாய் வாழ்ந்து இறுதியில் நல்லுலகடைவான்.

ஓ கருடா! கருப்பந்தரித்து ஆறுமாதத்திற்குட்பட்டு எந்தமாதத்திலேனும் அந்தக் கருப்பம் கரைந்து விழுந்ததாயின் விழுந்த மாதம் ஒன்றாயின் ஒரு நாளும், இரண்டாயின் இரண்டு நாளும் மூன்றாயின் மூன்று நாளும், நான்காயின் நான்கு நாளும், ஐந்தாயின் ஐந்து நாளும், ஆறாயின் ஆறு நாளும், கருவுற்ற மாதாவுக்கு மாத்திரம் சூதகம் உளதாகும். பிதாவுக்கு சூதகமில்லை. அவன் செய்யவேண்டிய கருமமும் ஒன்றுமில்லை. கருவழியாமல் பிறந்து மூன்று வயதிற்குள் மாண்டால் மாண்ட அக் குழந்தையை உத்தேசித்துப் பாற்சோறும் தயிர்ச்சோறும் குழந்தைகளுக்குக்கொடுத்தல்வேண்டும். மூன்று வயதிற்குமேல் ஐந்துவயதிற்குள் இறந்தால் மேற் சொன்னபடியே பாலர்களுக்கு அன்னங்கொடுத்தல் வேண்டும். இங்ஙனமன்றிப் பிறந்து ஒரு மாதத்திற்குள்ளே மாய்ந்தால் அந்தந்த வருணத்திற்குச் சொல்லியபடி செய்து தீர்த்தமும் பாலும் பாயசாதிகளும் குழந்தைகளுக்குக் கொடுத்தல் வேண்டும். உலகில் பிறந்தவன் யிறப்பதும், இறந்தவன் பிறப்பதும் திண்ணமாதலால் இறந்தபின்பு மீண்டும் பிறக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல் மீளாவுலகெய்த முயலுதல் வேண்டும், அங்ஙனம் முயலாமலும், தானதருமங்கள் செய்யாமலும் வாணாளை வீணாளாக்கி மாய்ந்த சீவன் பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திர குலங்களில் எக்குலத்திற் றோன்றினாலும் ஒரு நாளில் ஒருவேளையேனும் வயிறார உண்ணக் கதியற்ற தரித்திரனுக்குப் புத்திரனாய்த் தோன்றிக் கூழுக்கும் வருந்தி, சீக்கிரத்தில் மறித்து மீண்டும் பிறப்பன், ஓ வைனதேயா! மறுசன்மத்தில் உயர்ந்தகுலத்தில் பிறக்க வேண்டும். உலக முழுமையும் ஆளவேண்டும், சகல சாஸ்திர சம்பன்னனாகவேண்டும எனக்கருதி ஒருவன் அவற்றிற்குரிய கருமங்களை செய்வதினும், சன்மமே வாராமைக்குரிய கருமஞ் செய்வதே மிகநன்றாம். தீர்த்த யாத்திரை செய்பவன் மனத்தூய்மையனாவன். பொய் யுரையாமல் தாழ்மையாய் இன்சொல் பேசுகின்றவன் சகல சாஸ்திர சம்பன்னனாவன் சம்பத்திருந்தும் தான தருமஞ்செய்யாதவன் மறு ஜன்மத்தில் தரித்திர னாய்ச் சனிப்பன். அத்தரித்திரத்தால் மகாபாபஞ் செய் தவன் அப்பாபத்தால் இறுதியில் நரகமெய்துவன். பின்பு இவனிலுந் தரித்திரன் ஒருவனு மிலனென்று சொல்லும்படி மீண்டும் பிறப்பன். ஆதலால் ஒருவன் அவனுக்குள்ள சம்பத்துக்குத் தக்கபடி தானதருமஞ் செய்தல் வேண்டும் என்றருளிப் பின்னும் அருளு கின்றனர்.

பதின்மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினான்காம் அத்தியாயம்

சூதமகாமுனிவர், மகரிஷிகளே! பின்னர் ஸ்ரீயப்பதி யாகிய எம்பெருமான் கருடபகவானை நோக்கி, ஓ காசிப தனயா! மேற் சொன்னவற்றைக் குறித்தே இன்னும் சில கூறுகின்றோம் கேண்மோ? பூர்வ சன்மத்தில் செய்த பாபத்தினாலேயே சீவன்மரிக்கின்றான். கருப்பத் திலேயே கருவழிந்தால் ஒருகிரியையுஞ் செய்ய வேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுவதில்லை. ஐந்து வயதுக்குட்பட்டு இறந்தால் சாஸ்திரத்தில் சொல்லியபடி செய்து குழந்தைகளுக்குப் பால், பாயாசம், போசனமுதலிய கொடுத்தல் வேண்டும். பதினொன்றுநாளும் பன்னிரண்டா நாளும் சாஸ்திரத்தில் சொல்லியபடி சில கருமங்கள் செய்யலாம், விருஷோற்சனமும் விசேஷதானங்களுஞ் செய்யவேண்டியதில்லை, மரித்தவன்பாலனாயினும், யுவாவாயினும், விருத்தனாயினும், உதககும்பதானம் அவசியஞ் செய்தல் வேண்டும். மூன்றும் வயது பிறப்பதற்குள் மரிக்குங் குழந்தைகளைப் புவியில் புதைத்தல் வேண்டும். இருபத்து நான்காமாதம் நிரம்பிய இருபத்தைந்தா மாதம் பிறந்தவுடனே இறந்த குழந்தைகளை அக்கினியில் தகனம் செய்தல் வேண்டும். பிறந்த ஆறு மாதம் வரையில் சிசுவென்றும் மூன்று வயதுவரையில் பாலனென்றும் ஆறுவயது வரையில் குமரனென்றும் சொல்லவேண்டியதென்று சாஸ்திரம்சொல்லுகின்றது ஓ! கருடா! பிறந்த பதினாறுமாதம் வரையில் சிசுவென்றும், இருபத்தேழுமாதம் வரையில் பாலனென்றும், ஐந்துவயதுவரையில் குமரனென்றும், ஒன்பது வயது வரையில் பவுண்டகனென்றும், பதினாறுவயது வரையில் கைசோரனென்றும் சொல்வதும் உண்டு. சூத்திர குலத்தில் பிறந்த எச்சாதியாரும் பூணூல்பூணலாகாது பிரமக்ஷத்திரிய வைசியரே பூணூலணிதல் வேண்டும். ஐந்து வயது நிரம்பிப் பூணூல் பூண்டேனும், பூணாமலேனும் இறப்பனேல் அவனைக் குறித்து அதிக மந்திரஞ் சொல்லாமல் பத்துநாள் பிண்டம் போடவேண்டும். அப்படி இறப்பவனுக்கு உடலோடு கூடிய வாழ்வும், தாய் தந்தையரோடு சிநேகமும், விஷயங்களில் உடன்பாடும், மற்றவையும் சிறியவாகையால் கிரியையும் சிறிதாயிற்று, ஐந்து வயதிற்குமேல் பன்னிரண்டு வயதிற்குள்ளேனும், அப்பன்னிரண்டுவயது நிரம்பியேனும் மரித்தால் விருஷோற்சவம் முதலியவை செய்தல்வேண்டும். ஆனால் சபிண்டீகரணம் செய்யலாகாது பால் வெல்லம் முதலியவற்றைச் சேர்த்துப் பிண்டம் போடல்வேண்டும். கடமும், குடையும், தீபமும் தானம் செய்தல்வேண்டும். செய்யாவிடில் இறந்தவன் ஒருவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தில் மரமாய்த் தோற்றுவன். அம்மரம் நெற்குத்தும் உலக்கைக்கே உரியதாகும் பூணூலை இடது பக்கத்தில் தரித்துக்கொண்டு, சில தருப்பையோடு ஏகோதிஷ்டி முதலிய சிரார்த்தங்கள் செய்யின் மரித்தவன் மறுசன்மத்தில் நல்ல குலத்தில் பிறந்து தீர்காயுசோடு வாழ்வன். நல்ல புத்திரனையும் பெறுவன். தனக்குத் தன்னுடைய ஆத்மாவே புத்திரனாகச்செனித்தல் உண்மையாதலால், புத்திரன் இறப்பனேல் அப்புத்திரனுக்குத் தந்தையும், தந்தை மாய்வனேல் அவனுக்குப் புத்திரனும் கருமம் செய்தல்வேண்டும். ஒருவன் தானே தனக்குப் புத்திரனாகின்றானென்று வேதமே சொல்லுகின்றது. ஒருவனாகிய சூரியனும், சந்திரனும் புனல் நிறைந்த அநேக கடகங்களில் தனித்தனியே தோன்றுமாபோல ஒருவனே தனக்குப் பலபுத்திரர்களாய்ப் பிறக்கின்றான். ஆதலாலே பெரும்பான்மை ஒருவனுடைய புத்திரன் அவனைப்போலவேரூபமும், அறிவும், ஒழுக்கமும் உடையனாவன். ஆயின் குருடனுக்குக் குருட்டுப் பிள்ளையும், ஊமைக்கு ஊமைப்பிள்ளையும், செவிடனுக்குச் செவிட்டுப் பிள்ளையும், பிறத்தலென்பது இல்லை தந்தைக்கு உள்ளவற்றில் ஏதேனும் தனயனுக்குப் பொருந்தியிருக்கும் என்றருளினர்.

பின்னர் கருடபகவான் பரமபதநாதனைத்தொழுது சகந்நாதா! உலகில்தன்புத்திரனென்றும், தன்னுடைய மனைவி வயிற்றில் பிறந்த புத்திரனென்றும், புத்திரர் பத்துப் பிரகாரமா யுளரெனச் சாஸ்திரம் சாற்றுகின்றதே ஒருவன் விலைமகளைப் புணர்ந்து புத்திரனைப்பெற்றானேல் அப்புத்திரன் அவனுக்குக் கருமஞ் செய்யலாமா அப்புத்திரன் கருமஞ் செய்யின் அவனுக்கு நல்லுலகு கிடைக்குமா? ஒருவனுக்குப் பெண்ணிருக்கின்றாள். புத்திரன் இலன். அப்பெண் வயிற்றிற் புத்திரனும் இலன். அவன் மரித்தால் யாவனால் கருமம் செய்யப்பட வேண்டியது? கூறியருளுக வெனலும், பக்தவற்சலன், ஓ புள்ளரசே! ஒருவன் தனக்கே தனது இல்லாள் வயிற்றில் பிறந்த பிள்ளையின் முகத்தைக் கண்ணாலே பார்த்தால் புத் என்னும் நகரத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சன்மத்தில் பாரான். மணம் புரிந்துகொண்ட ஒரு வனுக்கும் ஒருத்திக்குமே புத்திரன் பிறந்தால் அவன் குலத்துப் பிதிர்தேவர் அதிகம் உளமுவப்பர் மற்ற ஒன்பது புத்திரரும் இகலோக சாதகமாவரேயன்றிப் பரலோக சாதகத்துக்கு முற்றும் உரியராகார் தனக்குத்தனது மனைவியிற்றில்பிறந்தபுத்திரனேமரித்தகாலத்தில் செய்கடன் எல்லாம் செய்யக்கடவன், மற்ற புத்திரருளரேல் இறந்த தகப்பனைக் குறித்துச் சிறிது கருமம் சிரார்த்தாதிகளும் செய்யக்கடவர். ஒருவன் தனக்கும் பேரன்பிறந்து அவனை எடுத்துப்பார்த்த பின்னர் மாய்வனேல் இறுதிக்காலத்தில் அவன் நல்லுலகடைவன். கொள் பேரனைப் பார்த்து மாண்டவன் அதனினும் நல்லுலகடைவன். பெண்ணைப் பெற்றவனுக்கு மணமகன் பெண்ணுக்கு விலைகொடாமல் திருத்துழாயோடு அவன் கன்னிகாதானம்செய்ய மணம்புரிந்து கொண்டு அவளோடு வாழ்ந்து புத்திரனைப் பெறுவானேல் அப்புத்திரன் இருபத்தொரு தலைமுறையையும் கரையேற்றுவன். அப்படிப்பிறந்த புத்திரனே தாய்தந்தையருக்குக் கருமம் செய்ய உரியவன். ஒருவன் மரித்தால் அவனுடைய வைப்பாட்டி புத்திரன் சிறிது கருமமாத்திரம் செய்யலாம் சிறிது செய்யாமல் முற்றும் செய்யின் செய்தவனும் மரித்தவனும் நரகம்சேர்வன். ஆனால் வேசி புத்திரன் தன்னைப்பெற்றவனைக்குறித்துமாத்திரம் வருஷந்தோறும் சிரார்த்தம் செய்யலாம். பெற்றவனைக் குறித்தன்றி அவன் தலைமுறையில் உள்ளோரையும் குறித்துஒன்றும்செய்யலாகாது. வேசாபுத்திரராயினும் அவனைப் பெற்றவன் இறப்பனேல் அவனைக்குறித்துத் தானங்களெல்லாம் செய்யலாம். பிராமணருக்குப்போசனம் முதலியவை செய்விக்கலாகாது. போசனத்தின் பொருட்டு அரிசிமுதலியவைகொடுக்காமல் சிலர் வைப்பாட்டிக்கும் பிறந்தபுத்திரனைத் தம்மனைவிக்குப் பிறந்த புத்திரன்போலவே நினைத்துக் கொண்டாடுகின்றனர். சற்புத்திரன் தீர்த்தயாத்திரை செய்தல் தனது பிதிர் தேவரைக் குறித்து அன்னரூபமாயும் ஆமைரூபமாயும், இரணியரூபமாயும் சிரார்த்தம் செய்யலாம். வேசி புத்திரன் தீர்த்தயாத்திரை செய்யின் அன்னரூபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவிர மற்ற இரண்டு ரூபமாய் சிராத்தம் செய்யலாம் சூத்திரமரபில் எச்சாதியேனும் அன்னரூபமாய் சிரார்த்தம்செய்யின் செய்தவனும், சாப்பிட்ட பிராமணனும், பிதிர்தேவரும் நரகமடைதல்போல, வேசிபுத்திரன் அன்னசிரார்த்தம் செய்வானேல், அவனும் சாப்பிட்ட பிராமணனும் பிதிர்தேவரும் மீளாநரகம்எய்துவர். ஏ கருடா! ஒருபார்ப்பிணிக்கும் பார்ப்பாரசாதிக்குத் தாழ்ந்தசாதியான் ஒருத்தனுக்கும் பிறந்த புத்திரனும் பார்ப்பான் மகளுக்கும் சந்நியாசிக்கும் பிறந்த புத்திரனும், பிரமகுலமாதுக்கும் சூத்திரனுக்கும் பிறந்தபுத்திரனும்,சகோத்திரத்தில்மணம் செய்துகொண்டவருக்குப் பிறந்த புத்திரனும் சண்டாளராவர். ஒருவன் தன்னுடையசாதியிலேயே ஒரு பெண்ணை மணம்புரிந்து பெறுகின்றபுத்திரனே சிரேஷ்டனுவன். ஆதலால் யாவரும் சற்புத்திரனைப் பெறுதல்வேண்டுமென்றருளினர்.

பதினான்காம் அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினைந்தாம் அத்தியாயம்

சூதபுராணிகர்,வைதிகாசார நைமிசாரணிய வாசிகளே! கருடபகவான் அச்சுதபிரானைத் தொழுது சர்வ ஜகந்நாதா? மரித்தவனைக்குறித்து எப்போது சபிண்டீகரணம் செய்தல்வேண்டும்! சபிண்டீகரணம் செயின் இறந்தவன் எக்கதியடைவன்? அஃது செய்யாவிடின் எக்கதியடைவன்? மரித்தவனுக்கும், மரித்தவளுக்கும் பிண்டம் ஒன்று சேர்ப்பது எங்ஙனம்? ஒன்று சேர்ந்தால் எக்கதியடைவார்? ஆமுடையான் உயிரோடிருந்து ஆமுடையாள் இறந்தால் அவளுக்குச் சபிண்டீகரணம் செய்வது எங்ஙனம்? இவற்றையெல்லாம் உலகநன்மையின் பொருட்டு அடியேனுக்குச் சாதித்தருளவேண்டும் என்று பிரார்த்தித்தலும், ஆதிமத்தியாந்த ரகிதனாகிய கேசவபிரான் ஓ விந்தை புத்திரா உயிர் மாண்டவனுக்கு வருடம் முடியுங்காலைசாஸ்திரப்படி யாவும் புரிந்து சபிண்டீகரணம் செய்து; அவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலத்தில் மூன்னமே மாய்ந்தோருடைய பிண்டத்தோடு இறந்தவன் பிண்டத்தையும் சேர்த்தல் வேண்டும், அங்ஙனம் செய்தால் மாய்ந்தவன் பிரேதத்துவம் நீங்கி, பிதிர்தேவரோடு சேர்வன், இறந்த பன்னிரண்டா நாளிலும் மூன்றும் பக்ஷத்திலும், ஆறுமாதத்திலும், சபிண்டீகரணம் செய்யலாம். தந்தையிறக்கப் புத்திரன் அவனுக்குக் கருமமெல்லாம் செய்து சபிண்டீகரணம் செய்யாமல் நிறுத்திவைத்திருந்த, காலை கருமஞ்செய்த புத்திரனுக்குக் கலியாணம் நேர்ந்தால் உடனே சபிண்டீகரணம் செய்துபின்பு மணவினைசெய்தல்வேண்டும். சபிண்டீகரணம் செய்யும் வரையிலும் மாய்ந்தவன் பிரேதத்துவத்தோ டிருக்கின்றமையால் கருமம் செய்தவனுக்குச் சிறிது அசுத்தியுளதாகலால் அவன்சுபகாரியங்கள் ஒன்றும்செய்யலாகாது சந்நியாசிகளுக்குப் பிக்ஷையும்சொல்லலாகாது: பிண்டம் சேர்த்தபின்பு இறந்தவன் பிரேதத்துவம் நீங்கிப் பிதிர்துவம் பெற்று மகிழ்தலாலும். தேகம் அநித்தியமாகலாலும், கிருதகிருத்தியம் பலவிதமாகலாலும் பனிரண்டா நாளிலேயே சபிண்டீகரணம் செய்தல் மிகவும் உத்தமமாம். ஔபாசனம் செய்ய விக்கினம் நேரினும் பன்னிரண்டா நாளில் சபிண்டீகரணம் செய்யலாம். சபிண்டீகரணம் செய்த பின்னர் தாய் தந்தையர் குலத்தில் மூன்று தலைமுறையிலுள்ளவருக்கும் சிரார்த்தம்செய்தல் வேண்டும். ஒருவருக்குமாத்திரம் சிரார்த்தம் செய்யக்கூடாது. சோடசம் சபிண்டீகரணம் முதலிய செய்தால் இறந்தவன் பிரேதத்துவம் நீங்கிப் பிதிரர்களோடு சேர்ந்து இன்புறுவன். பெண்ணைப் பெற்றவன்பொருள் சிறிதும் வாங்காமல் அவளைக் கன்னிகாதானம் செய்திருப்பினேல் பின்பு அவளிறந்தால் அவளுக்கு அவளுடைய ஆமுடையான் கோத்திரஞ்சொல்லிசமஸ்தகிரியையுஞ் செய்தல்வேண்டும். மாமிசவிற்கிரயம்செய்தல்போலப் பெற்றவன் விலைபெற்றுப் பெண் கொடுத்திருப்பனேல் அவளிறந்தால் அவளுக்கு அவளுடைய பிதாவின் கோத்திரம்சொல்லிக் கிரியைசெய்தல்வேண்டும். பிதாவுக்குப் புத்திரனே கருமம்செய்தல்வேண்டும் புத்திரனில்லாவிடில் இறந்தவனுடையகனிஷ்டையுயி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் ஜேஷ்டனாயினும் அவர்களில்ஒருவனுடைய புத்திரனாயினும் கருமம் செய்தல்வேண்டும். மாய்ந்தவனுடைய சகோதரர் பங்குபிரித்துக்கொண்டு தனித்துவாழின், அவனுடைய ஆமுடையாள் கருமம் செய்தல்வேண்டும். செத்தவனுக்குப் புத்திரனும, சகோதரரும் அவர்புத்திரனும், மனைவியும் இல்லாவிடின் மரித்தவனுடைய தாயாதி செய்தல்வேண்டும். தாயாதியும் இல்லாவிடின், மாணுக்கனுளனேல், அவன்செய்தல்வேண்டும். மேற்சொன்னவர்களில் ஒருவரு மில்லாவிடின் புரோகிதனே கருமம்செய்யலாம். நாலைந்துபேர் சகோதரர்களிருந்து அவர்களில்ஒருவனுக்கு மாத்திரம் புத்திரனிருந்தால் மற்றவர்களும் புத்திரனுடையாரே யாவர். அங்ஙனமே ஒருவனுக்கு நாலைந்து மனைவியரிருந்து அவர்களில் ஒருத்திக்கு மாத்திரம் புத்திரனிருந்தால் மற்ற மனைவியரும் புத்திரனுடையாரே யாவர். புத்திரன் பூணூலணிதலுக்கு முன்னமே தந்தையர் துஞ்சினால் அப்புத்திரனே கருமம் செய்தல்வேண்டும், புத்திரனைப் பெறுதவளிறந்தால் அவளுக்கு அவளுடைய கணவன் கருமம்செய்தல்வேண்டும். சபிண்டீகரணம் செய்தபின்னர் தெரியாமையாலாயினும் பிதிர்தேவர்எல்லாரையும் குறித்தல்லாமல் இறந்தவனைமாத்திரம் குறித்துச் சிரார்த்தம்செய்யின், இறந்தவனும், சிரார்த்தம்செய்கிறவனும்,செய்விக்கின்ற புரோகிதனும் நிரயம் புகுவர். மாண்டவனுக்குப் புத்திரர் பலருளராயினும் ஓராண்டுவரையிலும் கிரியை யெல்லாம் ஒருவனே செய்தல்வேண்டும். வருஷம் நிறம்புங்காறும் நித்திய சிராத்தத்தோடு பெரிய கடத்தில் புனல் நிறைத்து உதககும்ப தானமும் செய்தல்வேண்டும். கருமங்களைத் தவராது செய்யின் இறந்தவன் விமானத்தின் மேலேறி நல்லுலகு சேர்வன். பாட்டன் உயிரோடிருக்குங்காலை தந்தை மாய்ந்தால் அவனுக்குச் சபிண்டீகரணம் செய்யலாகாது. பாட்டனிறந்த பின்னர் அந்தப்பாட்டனுக்குச் சபிண்டீகரணம் செய்து, பின்பு முன் இறந்த தந்தைக்குச் செய்தல் வேண்டும். பிதாவும் பிதாவைப்பெற்றபாட்டியும் உயிரோடிருக்குங்காலை தாய் மாய்ந்தால் அவளுக்குச் சபிண்டீகரணஞ் செய்யக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது. அவ்விருவரும்மாண்டபின்பு அவர்களுக்குச் சபிண்டீகரணஞ்செய்து, பின்பு தாய்க்குப்புரிதல்வேண்டும், ஓ கருடா! இவ்விதியே உறுதியன்று, இது ஒருவர் பக்ஷமென்றுணர்க. யாவளொருத்தி தனது கொழுநனேதெய்வமென்றெண்ணிப் பத்திமை செய்து அவன் மரித்தபின்பு அவனுடையசரீரத்தோடுசிதையில் உயிர் விடுகின்றளோ அவள் எவரினும் நற்கதியடைவாள். அவள் மகா பாபஞ் செய்தவளாயினுங் கணவனோடு உயிர்மாய்த்தமையால் மகாபுண்ணியவதியாகிக் கணவ வன்பாபியேல் அவனையும் புண்ணியவானாக்கிச்சுவர்க்க லோகத்தில் நெடுங்காலஞ் சுகமாய் அவனோடு வாழ் வள், அப்படி இறந்த தாய்க்கும் தந்தைக்கும் புத்திரன் ஒரே சபிண்டீகரணஞ் செய்தல்வேண்டும். விருஷோற் சர்க்கமுந் தானங்களுந் தனித்தனியே செய்தல் வேண்டும். அவ்விருவருக்குந் தனித்தனியே பிராமணர்களை வரித்துச் சிரார்த்தஞ் செய்தல்வேண்டும். பாகமாத்திர மொன்ருய்ச்செய்யலாம் பிண்டந் தனித்தனியேபோட வேண்டும் ஓராண்டுகாறும் யாவுந் தனித்தனியே செய் யின் அவ்விருவருந் திருப்தியடைவர் புண்ணிய க்ஷேத் திரங்களிலுங் கிரகணம் மாளயம் முதலிய புண்ணிய காலங்களிலும் அவ்விருவருக்குஞ் சிரார்த்தஞ்செய்து வேருய்ப்பிண்டம் போட வேண்டும். மாசுமூடிய பொன்னை அக்கினி அம்மாசைமாத்திரம்போக்கி அப் பொன்னைக் கெடுக்காமைப்போலக் கொழுநனோடு உயிர் விடும் புண்ணியவதியின் மேனியைமாத்திரம் அவ்வக் கினி தகிப்பானேயல்லாமல் அவளைச் சிறிதும் வருத் தான், தாய், தந்தை, மகன், மக்கள், பெயரன், அண் ணன் தம்பிமுதலோரையும், மற்றுமுள்ள சுற்றத்தாரை யும் மனைமுதலிய பொருள்களையும், உயிரையுந்துறந்து கணவனே தெய்வம் அவனைப் பிரிந்துவாழ அடுக்கா தென்று ஆமுடையானோடு துஞ்சும் உத்தமியையொப் பானவர் உலகில்யாருளர்? சக்கமனஞ்செய்த புண்ணிய வதி மூன்றரைக்கோடி தேவவருஷ காலமுஞ் சுவர்க் கத்தில் கணவனோடு இன்பந் துய்ப்பள். பின்பு ஒரு மகாயோகினியின் குலத்தில் கணவனும் மற்றொரு யோகினியின் குலத்தில் தானும்பிறந்து அவனையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் பர்த்தாவை யடைந்து யோகமகிமையால் மேன்மைபெறுவன். நாயகனுடன் இறக்காதமங்கைளச் சன்மத்திலும் துக்கமே யடைவள். பிறனுக்கு உடன் பட்டு அவனுடைய இஷ்டப்படி நடந்து அவன் ஏவலால் புருஷனை இகழ்ந்து பிறந்தகுலத்துக்குத் தோஷமுண்டாக்கும் பெண்பேயென்றும் மீளாநரகமெய்தும் மகிழ்நன் நல்லவனுயினுங்கெட்டவனுயினும், அறிந்தவனுயினும் அறியாதவனுயினுமவன் உயிரோடிருக்கும்போது அவனிறந்த பின்பும் அவனே தெய்வமென்று பத்திமைசெய்து ஒழுக்கத்தில் நிற்பவளே உத்தமியாவள். கொண்டநாயகனை மதியாமல் அலக்ஷியஞ் செய்பவள், சீ சீ இவளுமொரு பெண்ணோ என்று பலராலுமேசப்பட்டு மறுசன்மத்தில் ஒரு பரமதுஷ்டனைக் கணவனுயடைந்து, அவனுலே அடுத்தடுத்துத் தண்டிக்கப்பட்டு அதிகத் துன்பப்படுவள். கணவன் தேவதாராதனம் அதிதியாராதன முதலியவைசெய்வனேல் மனைவியுமவனுக்கு அனுகூலியாகவேயாவுஞ்செய்தல்வேண்டும், பிராமண குலத்தாருக்கு ஏவல்செய்தலே சூத்திர குலத்தாருக்குத்தருமமா யதுபோல நாயகனுக்குப்பணி செய்வதே நாயகிக்குத்தருமமாம் இந்த தருமமெச்சாதி யாருக்கும் பொதுவாகும் ஆமுடையானே தெய்வமென்றெண்ணி நடப்பவள் இறுதியுற்றபின்பு உயர்ந்தகுலத்தில்பிறந்து உத்தமனை பதியாயடைந்து நன்மக்களைப் பெற்றுக் குலவிருத்திசெய்து தந்தைக்குங் கணவனுக்கும் புகழுண்டாக்கிச் சுமங்கிலியாகவேமரித்து உத்தம லோகமடைவள். ஓகாசிபபுத்திரா! மரித்தவன் துன்பப் படாமல் இன்பமடையும் பொருட்டு இன்னும் ஒரு விசேஷஞ் சொல்லுகின்ருேம். பன்னிரண்டாநாள் சாஸ்திரப்படி சபிண்டீகரணஞ்செய்து ஒருவருஷம் வரையிலும் நித்தியசிராார்த்தம் செய்தல் வேண்டும். நித்திய சிரார்த்தம் எவனைக் குறித்துச் செய்யப்படுகின்றதோ அவன் மாத்திரமல்லன் அச்சிரார்த்தம் செய்கின்றவனும் நன்மை பெறுவன் என்றருளினர்.

பதினைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினாறாம் அத்தியாயம்


சூதமாமுனிவர், அந்தணர்களே! பின்னர் வைனதேயன் பரமபதியைத்தொழுது, பரமபுருஷா! பிரேத சன்மத்தைக் குறித்து முன்னே அருளிச்செய்யக் கேட்டேனே! பிரேத சன்மமடைந்தவனைக் குறித்து ஏதேனும் சரித்திரமுளதோ? அதனைக் கூறியருள வேண்டுமெனலும் ஆதிநாயகன், ஏ பக்ஷிநாயகா! நன்கு வினவினை. ஒரு காதையுளது, அதனை பக்தனாகிய நினக்குச் செப்புகின்றோம் கேண்மோ திரேதாயுகத்தில் பப்புருவாகனென்ற ஒரு அரசன் கர்மிஷ்டனாயும், பெரியோர்களால் கொண்டாடத்தக்கவனாயும், மகோதயமென்ற நகரத்திலே வீற்றிருந்து உலகாண்டான். ஒருகாலத்தில் அவன் வேட்டையாட மிகயிச்சித்து ஆரணியத்தினூடுசென்று ஒரு மானைக்கண்டு அதனை அம்பால் அடித்தான், அந்த மான் அடிபட்டு அந்த யிடத்துக்கப்புறம் ஓடிற்று. வேந்தன் அதுகண்டுமீண்டும் அம்மானை எய்வானமுன் எய்தவாளிதைத்த புண்வழி ஒழுகிய இரத்தம் சிதறியவழியூடு நடந்து தான் ஒருவனாகவே மற்றொருவனம் சார்ந்து, கலையைக் காணாமையாலும், வழி நடந்தமையாலும் மிகச் சோர்வடைந்து உண்ணீர் நசையுற்று வனமுழுதுந்தேடி ஒரு தாமரைப் பொய்கை கண்டு அதனுளிறங்கி நீராடி, நளிர்புனல் பருகி, அக்குளக்கரையிலுள்ளதாகிய ஒரு ஆலின்புடையமர்ந்து நம் பரிவாரசனம் வருங்காறும் இங்ஙன் சிறிதுபொழுது நீடித்திருப்போம் என்றிருந்தான். அப்போது அவ்வரசன், எலும்பு நரம்புமன்றித் தசை சிறிதும் இல்லாச் சரீரமுடையதும், க்ஷாமமும் பார்க்க அச்சந்தருவதும், அநேக பிரேதங்களோடு இங்குமங்கும் ஓடுவதும், பசிதாகத்தால் வருந்துவதும் ஆகிய ஒரு பிரேதசன்ம மடைந்த உயிரைக்கண்டு அச்சமும் ஆச்சரியமும் எய்தினான். அப்பிரேதமும் நரபதியைக் கண்டு உவந்து அணிந்துவந்து ஓமகாராஜனே! நின்னையான் தரிசிக்கப் பெற்றமையால் இப்பிரேதசன்மம் நீங்கிஉத்தமகதியடைந்தேன், கன்னியனானேன் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்கிக் கூறிற்று. வேந்தன், அப்பிரேதத்தைப் பார்த்து, நீ யார் யாரும் அஞ்சத்தக்க ரூபமுடைய பிரேதம் போலத்தோற்றுகின்றனே? நினது விருத்தாந்தத்தைச் சவிஸ்தாரமாய்ச் சொல்லுதியெனலும் பிரேதம் ஓ! மகாராஜனே! அடியேன் சரிதையைச் சொல்லுகின்றேன் கருணையோடு கேட்டருளவேண்டும் வைதிசம் என்னும் ஒரு பட்டினம் உளது. அப்பட்டினம் ரதகஜதுரகபதாதிகளே மிகப் பொலிவுடையது, அடியேன் அப்பட்டினத்தில் வைசியகுலத்தில் பிறந்தேன், எனக்குத் தேவனென்று நாமம் வாழ்நாளெல்லாம் தேவதாராதனம் செய்தேன். பிராமணரையும், பெரியோரையும் எப்போதும் வழிபட்டேன், தேவாலயம் பிரமாலயம் புதுக்கினேன், ஏழைகளையும், நாதனில்லாதவர்களையும் ரட்சித்தேன், சகல சீவருக்கும் இதமே செய்தேன். வாணுள் முடிந்து மரித்தேன், எனக்குப் புத்திரனிலன். சுற்றத்தாருமிலர், மாய்ந்த எனக்கு ஒருவரும் கருமம் செய்யாமையால், இப் பிரேதசன்மமடைந்தேன். ராஜசிரேஷ்டனே! இப்பிரேதசன்மம் நானடைந்து நெடுங்காலமாயிற்று. மிகவும் வருந்துகின்றேன். உயிர் மாய்ந்தவனுக்குச் சமஸ்காரம் சஞ்சயனம், விருஷோற்சர்க்கம்சோடசம்,சபிண்டீகரணம், மாசிரம் சிரார்த்தம முதலியவை புத்திரன் முதலியோர் செய்யாவிடின், அவன் பிரேதசன்மமடைவன் நீ உலகைக்காக்கும் அரசனுதலால், சீவர்களுக்குப் பந்துவாயினை, மாண்டபின் செய்யவேண்டிய காரியங்களை அடியேனுக்கு நீயே செய்து இப்பிரேத சன்மத்தை தவிர்த்தல் வேண்டும், என்கையிலுள்ள இது ஒரு மணி சிரேஷ்டம், இதைப் போன்றதொன்றும் எங்கும்கிடைக்காது ஆகலான், இதனைப் பாதகாணிக்கையாக நினக்குக் கொடுக்கின்றேன் என்றுகொடுத்து, அரசன், ஏபிரேதமே! நான் நினக்கு எப்படிக் கருமஞ்செய்வேன்? இந்த அரதனத்தை நின்னிடத்தினின்று நான்வாங்கக்கூடுமோ! கருமம் செய்யாமையால் பிரேதசன்மம் வந்ததுஎன்றனையே? பின்னும் எவற்ருல் அச்சன்மம் வரும்? நவிலுதி என்றனன். பிரேதம், பூபாபலனைநோக்கி பார்ப்பாரது பொருளையும் தெய்வசொத்தையும், ஸ்திரீ, பாலன், குருடன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரேதக்கட்டம். யப்புருவாகராஜன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிடன் ஊமை முதலியோர் பொருளையும், மோசம் செய்து அபகரித்தவன் பிரேதசன்மமடைவன். தவம் புரிகின்ற மங்கையையும் தன்கோத்திரத்தில் பிறந்த பெண்ணையும் பிறனுக்குரியாளையும் புணர விரும்பின வன் பிரேதசன்மமடைவன். தாமரைமலர்களையும், நவ ரத்தினங்களையும் பொன்னையும் *கச்சையும், திருடின வன் பிரேதசன்மமடைவன்போரில் புறங்காட்டியோடி னவனும், செய்நன்றி மறந்தவனும், நன்றி செய்தவ னுக்கே தீங்குசெய்தவனும், பிரேதசன்மமடைவர் என் றுரைதிற்று. எந்தல் அவற்றைக்கேட்டு, ஏ! பிரேதமே! பிரேதசன்ம மடைந்தவன் எங்ஙனம் நிவர்த்தியடை வன்? அவனுக்கு எவ்விதம் கருமம்செய்தல் வேண்டும்? செப்புதி யெனலும், பிரேதம், ஓ! வேந்தனே! சுருக்க மாய்ச் சொல்லுகின்றேன் கேட்பி! நாராயணபலி ரகித னாய் ஸ்ரீமந்நாராயணனைப்போலத் திவ்விய மங்களவிக் கிரகம் ஒன்று செய்து, சங்குசக்கர பீதாம்பரங்களோடு அலங்கரித்துக்கிழக்கில் ஸ்ரீதரனையும், தெற்கில்மகாசூர னையும், மேற்கில் வாமனையும், வடக்கில் கதாதரனை யும்,நடுவில்பிரமருத்திரரேந்திரரோடு ஸ்ரீமகாவிஷ்ணு வையும் ஆராதித்து வலம்வந்து தண்டம் சமர்ப் பித்து அக்கினியிலே ஓமஞ்செய்து, மீண்டும் நீராடி விருஷோற்சனம் செய்து பதின்மூன்று பிராமணர் களுக்குக் குடை,மாரடி, மோதிரம், பலகை, வஸ்திரம், பொன் முதலியவற்றைக்கொடுத்து மிருஷ்டான்னபோ சனம் செய்வித்துச் சய்யாதானம், கடகதான முதலிய வை கொடுத்தால் மரித்தவன் பிரேதசன்மத்தினின்று நீங்குவனென்றது. ஓ நைமிசாரண்ய வாசிகளே! பின் னர்ப் பரமபதி, பெரிய திருவடியை நோக்கி, ஏ காசிப தனயா! அப்பிரேதம் அங்ஙனம் சொல்லலும், அம் மன்னனுடைய சேனைவந்தது. பெருங்கூட்டத்தைக் கண்டவுடனே அப்பிரேதம் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டது,அரசன் ஓ ஓ சேனையைக்கண்டதும் பிரேதம் மறைந்து போயிற்றே, அப்பிரேதம் புகன்ற வாறு தருமஞ்செய்தல் வேண்டும்எண்றெண்ணி, வனத்

* கச்சி - முலைக்கட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினின்றெழுந்து நகாணைந்து அந்தப்பிரேதத்தை யுத் தேசித்துக் கருமஞ்செய்தனன் உடனே அப்பிரேதம் அச்சன்மம் நீங்கித் துறக்கமுற்ற எது என்றருளினர். வேதவுருவாய் எம்மடிகள் சகத்காரணனை நோக்கி, ஏ சர்வலோகசரணியா! பின்னும் எதனால் பிரேதசன் மம் நிவர்த்தியாகும்? அதனையும் நவின்றருளுகவென லும் ஆதிபகவன் ஓ! கருடா! எண்ணெய் நிறைந்த குடத்தைப் பெரியோர்களுக்குத் தானம் கொடுத்தால் சமஸ்த பாபமும் நசித்துப் பிரேதசன்மமும் நீங்கும், மரித்தவனுக்கு இன்பம் உண்டாகும். பொன்னால் குடங்கள் செய்து பாலும் நெய்யும் அவற்றில் நிறைய வார்த்துத் திக்குப்பாலகரோடு அஜசங்கரரையும், ஸ்ரீ ஹரிபகவானையும் ஆராதித்து அக்கடங்களை உத்தம பிராமணர்களுக்குத் தானம் கொடுத்தல் மிக விசேட மாம் என்றருளினர்.

பதினாறும் அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினேழாம் அத்தியாயம்

சூதபுராணிகர், நைமிசவன ஸ்ரீமத்பரம வைதிகர் களே! பின்னர்க்கருடபகவான் ஸ்ரீதரமூர்த்தியைத்தொ ழுது, சர்வேசா! இங்ஙனம் சுருக்கமாய்ச் சாதித்தருளி யது போதாது, கருமங்கள் செய்யும்போது ஸ்தலத் தைக் கோமயத்தால் மெழுக்கிடுவானேன்? பிதிர்கரும முதலியவை செய்யும்போது எள்ளையுந்தருப்பையும் உப யோகப் படுத்துவானேன்? கட்டிலில் படுத்தபடியே துஞ்சினவனும் உப்பரிகையில் மாய்ந்தவனும் நற்கதி யடையாரென்று முன்னர்ச் சாதித்தமையால், இறப் போன் எந்தவிடத்தில் எப்படி இறத்தல்வேண்டும்? தானங்களெல்லாம் எங்ஙனம் செய்தல்வேண்டும்? செய் யப்படுந் தானங்களுக்குப் பயன்யாது? இவற்றையெல் லாஞ் சவிஸ்தாரமாய்க் கூறியருள வேண்டுமென்று பிரார்த்தித்தலும், ஸ்ரீ புருஷோத்தமன், வைனதேயா! நன்குவினவினை, மாய்ந்தவனைக் குறித்துச்செய்யவேண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியவற்றையெல்லாம் விஸ்தாரமாய்ச் சொல்லுகின்றோம் கேண்மோ? புத்திரனைப்பெறுதவனுக்கு எவ்வுலகினும் இன்பமில்லை, இகத்திலும், பரத்திலும் இன்பம்வேண்டியவன் கருமமும், தவமும் செய்து சத்புத்திரனைப் பெறுதல்வேண்டும், தருமமும் தவமும் செய்யானாயின், மனைவி வயிற்றில் கருப்பம் தரியாது. தரிப்பினும் பத்துமாதம் நிரம்புமுன்னரே கரைந்துபோகும் கருக் கரைந்தால் புருஷனுக்கு நற்கதிகிடையாது சற்புத்திரனைப் பெற்றவனே எவ்வுலகினும் நன்மை பெறுவன் ஓ! கருடா! கருமங்கள் செய்யத்தொடங்கு முன்னரே குறிப்பிட்ட ஸ்தலத்தைத் திருவலகால் துடைத்துக் கோமயத்தால் மெழுக்கிட்டுப் பின்பு எக்கருமமும் செய்தல்வேண்டும், அங்ஙனம் சுத்திசெய்யாமல் கிரியை செய்யின் அரக்கரும், பூதப்பிரேதபைசாசரும் அவ்விடம்வந்து கருமம் முற்றுப்பெறுவண்ணம் விரோதம் செய்வர், சுத்திசெய்த ஸ்தலத்தில் கருமம்செய்யின் தேவர்களெல்லாரும் அங்ஙன் வந்து முற்றுவிப்பர் மரித்தவனுக்குத் தூய்மை செய்யாத இடனில் கருமம் செய்யின், அதுசிறிதும்பயன்படாமல் அவன் நரகமே சேர்வன் என எமது வேர்வையினின்று உண்டானமையால் மிகப் பரிசுத்தமாயது அதனைக்கண்டால் அசுரரும் பூதப்பிரேதபைச்சாசர் முதலியோரும், வெருண்டோடுவர், அவ்வெள் கருப்பும், வெளுப்பும் என இருவகைத்து எந்த நிறமுள்ள எள்ளையேனும் தானங்களோடும் சேர்த்துக்கொடுப்பின் அதிகம்பயனுளதாகும் சிரார்த்தத்தில் கருப்பு எள்ளைச்சேர்த்தால் பிதிர்தேவர் அதிக உளமுவப்பர், குசைப்புல் ஆகாயத்திலுண்டாயது, அத்தருப்பையின் இருகடையிலும், பிரமனும், சிவனும், அதனடுவில் ஸ்ரீஹரியும்இருக்கின்றனர். தருப்பை இல்லாமல் சிரார்த்த முதலியகருமங்களொன்றும் செய்யலாகாது, பிராமணருக்கும் மந்திரத்துக்கும், தர்ப்பைக்கும், அக்கினிக்கும் திருத்துழாய்க்கும் நினமாலிய தோஷமில்லை, உபயோகப்படுத்திய தருப்பையையே மீண்டும் உபயோகப்படுத்தலாம் ஏகாதசி விரதமும், திருத்துழாயும் பகவத்கீதையும் பசுவும் பிராமணபக்தியும், ஸ்ரீஹரிசரணமும் ஆகிய இவை சம்சாரசாகரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கடப்போருக்கு நல்ல தெப்பமாகும் மாய்வோன் கோமயத்தால் மெழுக்கிட்ட புனிதஸ்தலத்தில் குசைப் புல் பரப்பி, எள்ளிறைத்து அப்பள்ளியில் சயனம் செய்து, தருப்பையும், திருத்துழாயையும் கரத்தில் கொண்டு, எமது நாமங்களைவாயாரப்புகன்றவாறே துஞ்சுவனேல் அயனரனுதியருக்கும் அரிய நிரதிசய இன்ப வீடாகிய நம்மூலகுசார்வன், மாய்கின்றவன் தருப்பசயனத்தில் குப்புறக்கிடக்கலாகாது, முதுகுகீழுறவே பள்ளிகொள்ளல்வேண்டும், உயிர் நீங்குமுன்னரே திருத்துழாயோடு தானங்களெல்லாம் கொடுத்தல் வேண்டும், உப்புத்தானம் செய்யின் மிக விசேடமாம், அவ்வுப்பு விஷ்ணுலோகத்தில் உண்டானமையால் அதற்கு அதிகம் மகிமையுண்டாயிற்று, மரித்தவன் உப்புத் தானத்தால் சுவர்க்கலோகம் சேர்வன் என்றருளிப் பின்னும் சாற்றுகின்றனர்.

பதினேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

## பதினெட்டாம் அத்தியாயம்

சூதர், ஓ அருந்தவர்களே! பரமாத்துவன் வேத வுருவனைப் பார்த்து ஓ! கருடா! தானங்கள் செய்ய வேண்டியவிதத்தையும், அத்தானங்களால் வரும்பயனை யும் கூறுகின்றேம் கேண்மோ? தானங்களிலெல்லாம் பருத்தித்தானம் மகாதானமாகும், அறமே கூறு நாவினையுடைய நான்கு வேதத்தினையு முற்ற அறிந்த பார்ப்பார் பூணும் பூணூலுக்குப் பருத்தி யேதுவானமையின், அது மிகவிசேடமாயிற்று பருத்தித் தானம் செய்யின் மகருஷிகளும், பிரமருத்திரேந்திராதி தேவர்களும் உளமுவப்பர்கள், பருத்தித்தானம் செய்தவன் வாணுள் முடிந்தகாலை சிவலோகம் சார்ந்து அங்ஙன் வசித்துப் பின்பு சகலகுண சம்பன்னனுய், அழகிய மேனியுடையவனுய் மகாபலிஷ்டனுய், உலகாளும் அரசனுய், தீர்க்காயுளனுய் புவியிற் பிறந்து யாவரும் போற்ற நெடுங்காலம் வாழ்ந்து சுவர்க்கலோகம் சேர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன். திலதானமும், கோதானமும், பூதானமும், சுவர்ன தானமும், தானியதானமும் செய்யின் மகாபாபங்க ளெல்லாம்உடனே நசிக்கும் திலதானமும்கோதானமும் மகா தானங்களாகும் அவ்விரண்டும் மகா பாபங்களை யெல்லாம், சாமானியபிராமணருக்குக் கொடுக்கலாகாது உத்தமபிராமணருக்கே கொடுத்தல் வேண்டும். ஸ்திரீக ளுக்கும், தனக்கு வேண்டியவர்க்கும் அம்மூன்றையும் வெறுமனே உத்தேசமாய்க் கொடுக்கலாமே யல்லது தானமாய் கொடுக்கலாகாது. தானங்கள் செய்வதற்குச் சீவன் மரிக்கும் காலமும், கிரகணகாலமும் உத்தம காலமாகும். ஓ வைனதேயா ! எந்தமனிதனும் தான் இனியனாய் வாழும்போதே தனக்காகத் தானதருமங் களைச் செய்து கொள்ளுதல்வேண்டும். அங்ஙனம் செய்யவிரும்புவோனுக்குப் புத்திரன் இருப்பனேல், அவனுடைய சம்மதமும் பெற்றுக்கொண்டு தானம் செய்தல்வேண்டும், மரிக்குங்காலத்தில் திலமும், இரும் பும் லவணமும், பருத்தியும், தானியமும், பொன்னும், பூமியும், கோவும் தானம்செய்யின் மிகவிசேடமாம். திலமும் இரும்பும் தானஞ்செய்தால் யமன் உவக்கின் ருன். லவணதானம் செய்தால் இறக்கிறவனுக்கு நம னிடத்தில் அச்சமுண்டாகாது. பருத்திதானம் செய் தால் யமதூதர்களிடத்தில் பயமுண்டாகாது. பருத்தி தானத்திற்கு முன்னே சொன்னதுதவிர இந்தப்பலனு முண்டு, தானியதானம்செய்தால் கூற்றுவனும், தூதர் களும், சந்தோஷித்துச் சீவனுக்கு வேண்டியவற்றை யெல்லாம்கொடுப்பார்கள். சுவர்னதானத்துக்கும், பூதா னத்துக்கும், கோதானத்துக்கும் பாபங்களெல்லாம் நசிக்கும் என்று முன்னமே ஓதினோம் மரிப்போன் எம் மையே தியானித்து எமது நாமத்தையே உச்சரிப்ப னேல், அவன் நிரதிசய இன்பவீடாகிய நம்முலகு சார் வன். தந்தை யிறந்தபின்பு அவனுக்குப் புத்திரன் கயா சிரார்த்தம் செய்தலினும் தந்தைமரிக்குங்காலத்தில் புத் திரன் ஒக்கவேயிருந்து தானதருமங்கள் செய்வித்தலே உத்தமமாம். கூடாரமும், முசலம், சுரிகையும் இருப்புத் தண்டமும் காலனுக்கு ஆயுதங்களாகும் பொதுவாய் அவனுக்கு இரும்பு ஆயுதமாகும். அதனாலேதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரிக்குங்காலத்தில் இரும்புத்தானம் செய்யின் யமன் உவப்பனென்று கூறினோம் அல்லதூஉம்யாவன் இறக்கும்போது எந்தக் கிருகத்தில் இரும்புத்தானம் செய்யப்படுகின்றதோ, அந்தமனைக்கண் நமன் அடிவைக்கவும் அஞ்சுவன். இறப்பவன்யாவனாயினும் இரும்புத்தானம் செய்தல்வேண்டும். அத்தானம் செய்தால் சண்டாமிருகன், ஔதும்பரன், சம்பரன், சார்தூலன் முதலிய யமதூதர் திருப்தியடைவர். ஓ! கருடா! சீவருடைய கால்முதல் தலைவரையிலுமுள்ள அங்கங்கள் பிரமருத்திரேந்திராதி தேவரும், ஸ்ரீ கிருஷ்ணபகவானும் இருக்கின்றனர். தாயும், தந்தையும், குருவும், சுற்றமும், சீவருக்கு விஷ்ணுவேயன்றி மற்றொருவரும் இலர். "சர்வம் விஷ்ணுமயம்ஜகத்" என்ற வாக்கியத்தை நீ உணர்ந்திருக்கின்றாயே; பிரிதியும், அப்பும், தேயுவும், வாயுவும், ஆகாயமும், சுவர்னமும், தானியமும், தேனும், நெய்யும், கோவும்,யாகமும்,பிராமணரும்,அஜ சங்கரேந்திராதி தேவர்களும். ஒன்றனைக் கொடுக்கின்றவனும், வாங்குகின்றவனும், பின்னும் யாவும் யாவரும் யாமேயன்றி மற்றொருவரும் இலர். பிரம ருத்திரேந்திராதியோர் புரியும் கருமங்களுக்கும் பலதாகா நாமே. சீவன் பூர்வம்செய்த கருமத்தை அநுசரித்துப்பாப புண்ணியங்களில் புத்தியை நாட்டச் செய்கின்றோம். புண்ணியஞ் செய்தவன் சுவர்க்கம்புகுவன். பாபஞ் செய்தவன் நரகம் புகுவன். என்றருளிப் பின்னும் நவின்றருளுகின்றனர்.

பதினெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

## பத்தொன்பதாம் அத்தியாயம்

சூதமாமுனிவர், மாதவர்களே! பின்னர்ச்சகத்காரணனாகிய பகவான், கருடா! எம்மையாராதித்து எமது க்ஷேத்திரங்களில் தானதருமம் செய்வோன் அதிகபுண்ணியமடைவன். மாய்ந்த சீவனைக்குறித்துப் பூமிதானம் செய்யின், பூமி எத்தனையடியுள்ளதோ அத்தனையாண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் அச்சீவன் சுவர்க்கத்தில் வசிப்பன் மாரடிதானம் செய்யின் குதிரைமீதேறி நல்லுலகு சேர்வானென்பது மாத்திரமன்று, மார்க்கத்தில் முள்முதலியவற்றால் துன் பமு மடைவான். குடைத்தானம் செய்யின் நிழலுள்ள வழியில் செல்வானென்பது மாத்திரமோ மழையாலும் இன்னலுறான். தீபதானம் செய்யின் முன்னமே புகன்ற வாறு இருள்வழியில் பிரகாசத்தோடு செல்வன். ஐப்பசி கார்த்திகை, மாசி ஆகிய மூன்று மாதங்களிலேனும்; சதுர்த்தசியிலேனும் பௌர்ணமியிலேனும், மரித்ததின த்திலேனும் தீபதானம் செய்தல் விசேடமாம் மரித்த தினமுதல் ஓராண்டு வரையிலும் நாள்தோறும் தீபதா னம் செய்யின் மாண்டவன் மேடுபள்ளமில்லா நல்ல நெறியூடு யமபுரிசார்ந்து அவன் குலத்தோர் அப்புரி யில் இருப்பரேல் அவரையும் நல்லுலகு சேர்த்துத் தானும் நற்கதியடைவன் தீபதானத்தின்மகிமை சிறி தன்று. பிரமாலயத்திலும், தேவாலயத்திலும் வடக்கு முகமாயேனும், கிழக்கு முகமாயேனும் தீபம்வைத்தல் வேண்டும் தீபதானம் செய்வோன் தனக்கு எதிர் முக மாய்த்தீபத்தை வைத்துக்கொடுத்தல்வேண்டும். இறத்த லென்பது நிச்சயமாயுளதென்பதைக் கடைப் பிடித்த வன், மேற்சொன்ன தானங்களையெல்லாம் தானே தனக் குச் செய்துகொள்வன், ஆசனப்பலகையும், செப்புத்தா லியம் சுயம்பாகப்பொருளும் தானம்செய்யின் மரித்த வன் மார்க்கத்தில் இனிதாய்ச் செய்வன். அரிசியும் திலமும் பதிமூன்று கடகமும். மோதிரம், குடையும், விசிறியும், பாதரக்ஷையும் அவசியம் தானஞ்செய்தல் வேண்டும். கரியும், பரியும் தானங்கொடுப்பின் விசேட புண்ணிய முளதாகும் எருமையேற்றை அதிகப்பொரு ளோடு தானங்கொடுப்பின் மிகவிசேடமாம். வெற்றிலை யும் பாக்கும், புஷ்பமும் தானஞ்செய்யின் யமதூதர் சந்தோஷித்துச் சீவனைவருத்தார். வஸ்திர தானஞ் செய்யின் காரெனக் கருத்தமேனியும், பிறையென இரு கடையில் பிறக்கும் எயிறும், செம்மயிரும் அச்சந்தரு ரூபமுடைய யமதூதர் சீவனுக்குமுன் நல்லரூபத்தோடு தோற்றுவர் என்றருளினர். கருடபகவான் வைகுந்த நாதனைத் தொழுது, அயனானுக்கரியோனே! அடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார்க்கெளியோனே! சரீரத்தினின்று உயிர் எங்ஙனம் நீங்கும்? திருவாய்மலர்ந்தருளல் வேண்டுமெனலும், சர்வாந்தரியாமியாகிய பகவான், வைனதேயா! கண் வழியாலேனும் காதுவழியாலேனும், நாசிவழியாலேனும், வாய்வழியாலேனும், மயிர்க்கால் வழியாலேனும், உயிர் நீங்கும், ஞானிகளுக்குக்கபாலம்விண்டு உயிர் நீங்கும் பாபிகளுக்கு அபானமார்க்கமாய்ச் செல்லும். உயிர் நீங்கியவுடன் காஷ்டம்போலச் சரீரங்கிடக்கும். தேகம் பஞ்சபூதாத்மகமாகலாம். பிரிதிவி-மண்ணிலும், அப்பு-புனலிலும், தேயு-அக்கினியிலும், வாயு-காற்றிலும், ஆகாசம்-ஆகாயத்திலும் லயமாகும். காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியமாகிய ஆறும், கர்மேந்திரியம் ஐந்தும், ஞானேந்திரியம் ஐந்தும், சரீரத்தில் திருடர்போல உறைகின்றன. உயிர் நீங்குப்போது அவ்விந்திரியங்கள் மனத்தோடு ஒன்று சேரும் சேதநன் கருமத்தாலே மறுசன்ம மடைகின்றனன், பழையவீடுடையோன் பொருள் சம்பாதித்து நல்ல புதுமாடங்கட்டி, அதில் குடிபுகுமாறுபோலப் புண்ணியஞ்செய்த சீவன் வாணாள் முடிந்த பின்பு இந்திரியங்கள் ஐந்தும் அமைந்த ஒரு திவ்விய தேகமடைகின்றான் மலமூத்திரங்களும் கற்பித்தங்களும், ஊனும் விசாலமும், நரப்பும் எலும்பும்மெய்யோடு நசிக்கப்படுகின்றன. ஓ! சீவன் மரிக்கும்விதம் இது மீண்டும் பிறக்கும் விதத்தையும் புகல்கின்றேன்கேண்மோ! பலநரம்புகளோடு ஸ்தம்பாகிருதிபோல இராநின்ற ஒரு பெரிய நரம்புற்றதும் இந்திரியங்கள் பொருந்தியதும் காம, குரோத,லோப, மோக, மத, மாச்சரியமாகிய உட்பகைகள்கூடியதும், காமக்குரோத இச்சைதுவேஷங்களால் வியாபிக்கப்பட்டது மாயையோடு கூடியதுமாகியதேகம் எல்லாப் பிராணிகளுக்கும் உறுதியாய் உளதாகும் சமஸ்தலோகங்களுக்கும் சமஸ்ததேவர்களும் தேகத்தில் இருக்கின்றனர் என்றருளினர்.

பத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

# இருபதாம் அத்தியாயம்

சூதபுராணிகர், நைமிசாரணிய வாசிகளே! கருட பகவான், பரமபத நாதனைத்தொழுது சர்வலோக சரணியா! தோல், நரம்பு, எலும்பு, இரத்தம், மாமிசம், தலை, கை, கால், நா, நாசி, இரகசியப்பிரதேசம், நகம், மயிர் முதலியவைகளால் பாவப்பட்டு இந்திரஜாலம் போலத் தோன்றுகிற சரீரம் எங்ஙனமுண்டாகின்றது? சாதித்தருளவேண்டும் எனலும், உலகம் யாவையும் படைத்தவனைப் படைத்த பரந்தாமன், காசிபதனயா! நன்குகடாவினை! விஸ்தாரமாய்ச் செப்புகின்றோம் பயிஷ்டையான பெண்கள் நான்கு தினவரையிலும் மனைக்குப் புறம்பே இருத்தல்வேண்டும். முன்னொருகாலத்தில் தேவேந்திரன் விருத்திராசுரன் என்றவனைக் கொன்றமையால் அவனைப் பிரமஹத்திதோஷம் பிடித்து அவ்விந்திரன் பிரமனை வணங்கி அடியேன் உறுதுயரை நீக்குதி என்று இரத்தலும் அப்பிரமதேவன் மகபதியைப்பிடித்த பிரமஹத்தி தோஷத்தை நான்கு பாகமாய் பகுப்புசெய்து ஒருபாகத்தை ஸ்திரீகளுக்குக் கொடுத்து ரசஸ்வலை யாகும்போது அப் பெண்கள் மாட்டு அத்தோஷம் அணுகுமாறு நியமித்தனன் ஆதலால் பயிஷ்டையான ஸ்திரீயை நான்கு தினவரையிலும் ஒருவரும் பார்க்கவுமாகாது, பார்த்தால் மகாபாவம் வந்தடையும், பயிஷ்டையானவள் முதல்நாள் சண்டாள ஸ்திரீயைப் போலாவாள், இரண்டாநாள் பிரமஹத்தி செய்தவளை யொப்பாவாள் மூன்றாநாள் ஆடையொலிப்பாளைப் போலாவாள். நான்காநாள் புனலாடிய பின்புசிறிது பரிசுத்தளாவாள். ஐந்தாநாள் கிருககிருத்தியங்களுக்கெல்லாம் உரியவளாய்ச் சுத்தவளாவள், பயிஷ்டையான ஆறுநாள் முதல்பதினெட்டுநாள்வரையிலும்உள்ளஇரட்டைநாள் ஏழில் யிரவில்புணர்ந்தால் புருஷப்பிரஜையுண்டாகும். ஐந்துதினமுதல்பதினெட்டுத் தினம் வரையிலுள்ள ஏழு ஒற்றைநாளில் புணர்ந்தால் ஸ்திரீ பிரஜை யுண்டாகும். ஆதலால் ஆண்மகவுபெற விரும்பினவன் தன்மனைவியை இரட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளிலேயே சேர்தல்வேண்டும். நான்குதினத்துக்கு மேல் பதினெட்டு நாள்வரையிலும், இராக்காலத்தில் இரட்டைநாளில் கருப்பந் தரித்தால் குணவானுகவும், ஐசுவரியவானுகவும், தர்மிஷ்டனுகவும், ஸ்ரீ விஷ்ணு பக்தி யுடையவனுகவும், புத்திரன் பிறப்பான், பயிஷ்டையான நான்கு திவசத்துக்குமேல் எட்டுநாளுக்குள் பெரும்பான்மை கருப்பந்தரிக்கும், ரஜஸ்வலையான ஐந்தாநாள்ஸ்திரீகள் பாயசம்முதலாகிய மதுரபதார்த்தங்களேயே யுண்ணுதல்வேண்டும், காரமான பதார்த்தங்களை அருந்தலாகாது, ஸ்திரீ புருஷர்கள் சந்தனம் புஷ்பம், தாம்பூலமாகிய குளிர்ந்த வஸ்துக்களைத் தாரணஞ் செய்துக்கொண்டு குவிந்த மெய்யினர்களாய், சித்தத்தில் அதிக மோகமுடையவர்களாய்ச் சேர்தல் வேண்டும், அங்ஙனம் இருவருஞ்சேரின், சுக்கிலசுரோணிதங்களால் ஸ்திரீவயிற்றில் கருத்தரித்துச் சுக்கில பக்ஷத்துச்சந்திரன்போல் அக்கருவிருத்தியாகும். மன்மதனும், மனமும் ஒத்தகாலத்தில் இருவராலும் விடப்படும் சுக்கில சோணிதங்களால் சுக்கிலம் அதிகமானுல் ஆண்மகவும், சோணிதம் அதிகமானுல் பெண்மகவும் பிறக்கும் சுக்கிலசோணிதங்களிரண்டு ஏற்றக்குறைவின்றிச் சமமானுல் அலிமகவுபிறக்கும், கருத்தரிக்குமாயின் புணர்ந்த ஐந்து திவசத்தில் கருப்பப்பையுள் ஒரு குமிழி உண்டாகின்றதுபதினுன்குநாளில் அது சிறிது தசையால் பெருக்கின்றது இருபதாநாளில் பின்னும சிறிது தசையுண்டாகின்றது இருபத்தைந்தாநாளில் பின்னுஞ்சிறிதுபுஷ்டியாகின்றது, ஒருமாதத்தில் பஞ்சபூதங்களின் சேர்க்கையுண்டாகின்றது இரண்டாமாதத்தில் தோல்உண்டாகின்றது, மூன்ருமாதத்தில் நரம்பு உண்டாகின்றது, நான்காமாதத்தில் மயிரும், புறவடியும் உண்டாகின்றன, ஐந்தா மாதத்தில் காதும், மூக்கும், மார்பும் உண்டாகின்றன. ஆருமாதத்தில் கழுத்தும், சிரசும், பல்லும். உண்டாகின்றன, ஏழாமாதத்தில் ஆண்மகவாயின் ஆண்குறியும், பெண்மகவாயின் பெண்குறியும் உண்டாகின்றன. எட்டாமாதத்தில் எல்லா அவயவங்களும் உண்டாக்கிச் சீவனும் பிரவேசிக்கின்ருன் ஒன்பதாமாதத்தில் சீவன் சுழிமுனையென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் நாடியின் மூலத்திலிருந்து பூர்வ சன்ம கருமங்களை நினைத்துச் சன்மம் வந்ததைக் குறித்துத் துக்கித்துப் பத்தாமாதத்தில் பிறக்கின்றான்.

கருடா! பஞ்சபூதாத்மாவாகிய தேகம் பஞ்சேந்திரியங்களுற்றும், பத்து நாடிகளால் அலங்கரிக்கப்பட்டும், பிராண, அபான, வியான, உதான, சமான, நாக, கூர்ம, கிருக, தேவதத்த, தனஞ்சய என்னும் பத்து வாய்க்களோடு கூடியும் இரா நின்றது. அல்லது உம் அச்சரீரம் சுக்கிலம், எலும்பு, நீர், மயிர், இரத்தம் என்னும் ஆறுகோசமுடையதாகியும் இரா நின்றது. நரம்புகளினால் கட்டப்பட்டிருக்கும் ஸ்தூல சரீரத்தில் தோலும் எலும்பும், மயிரும், மாம்சமும், உகிரும், பிரிதிவினது குணமாகின்றன. வாயில் உண்டாகின்ற நீரும், மூத்திரமும், சுக்கிலமும், ஊநீரும்; புண்ணீரும், அப்புவினது குணமாகின்றன. பசியும், தாகமும், நித்திரையும், சோம்பலும், காந்தியும் தேயுவினதுகுணமாகின்றன. இச்சையும், கோபமும், வெட்கமும், பயமும், மோகமும், அங்குமிங்குமோடுதலும், சுழலுதலும் கைகால் மடங்குதலும், நீட்டுதலும் ஒருவினையும் செய்யாமலேயிருத்தலும் வாயுவினதுகுணமாகின்றன. சப்தமும்; எண்ணமும், கேள்வியும், கம்பீரமும், சத்திரமும், ஆகாயத்தினது குணமாகின்றன. காதும், கண்ணும், மூக்கும், நாவும் தொக்குமாகிய ஐந்தும் ஞானேந்திரியங்களாகும், இடைபிங்கலை சுழிமுனை என்னும் மூன்று பெரிய நாடிகளும் காந்தாரி, கஜசிம்மை, பூழை, யச்சு அலாபு, குரு, விசாகினி என்னும் ஏழுநாடிகளும் சரீரத்தில் முக்கிய நாடிகளாகின்றன. சீவன் உண்ணும் சாறு முதலியவற்றை மேற்சொன்ன வாயுவே அந்தந்த இடங்களில் சேர்கின்றன. வயிற்றில் அக்கினிக்கு மேல் புனலும், அப்புனலுக்குமேல் அன்னமும் இருக்கின்றன. அவ்வுக்கினியை வாயுஊதி விருத்திசெய்யா நின்றது சரீரமானது மூன்றரைக்கோடி ரோமங்களும் முப்பத்திரண்டு பற்களும், இருபது உகிர்களும், இருபத்தேழுகோடி தலைமயிர்களும், ஆயிரம்பலந்தசையும் நூறுபலம் இரத்தமும், பத்துப்பலம் மேதசும், பத்துப்

பலம் தொக்கும், பன்னிரண்டுபலம் பச்சையும், மூன்று பலம் முக்கிய இரத்தம், கபமும், மலமும், மூத்திரமும் கூடி மூடிநிறைந்து நின்றது, அண்டத்தி லுள்ளவை யெல்லாம் தேகத்திலிருக்கின்றன, உள்ளங்கால் அதலமென்றும், கணைக்கால்-விதலமென்றும், முழங்கால்-சுதலமென்றும், அதற்குமேல் நிதலமென்றும், ஊறு-தலாதலமென்றும், குக்யம்-ரசாதல மென்றும், இடை-பாதாளமென்றும், நாபி-பூலோகமென்றும், வயிறு-புவர்லோக மென்றும், இருதயம்-சுவர்க்கலோகமென்றும், தோள்-மகாலோகமென்றும், முகம்-ஜனோலோகமென்றும், நெற்றி-தபோலோகமென்றும், சிரசு-சத்தியலோகமென்றும், சொல்லப்படும். திரிகோணம்-மேருகிரியென்றும், கீழ்க்கோணம்-மந்தர பருவமென்றும், அக்கோணத்திக்கு வலப்பக்கம்-கைலாய மென்றும், இடப்பக்கம்-இமாசலமென்றும்,மேற்பாகம், நிஷேகபருவதமென்றும் தென்பாகம்-கந்தமாதன மென்றும், இடது உள்ளங்கையிலுள்ளரேகைவருணபருவதமென்றும் சொல்லப்படும், எலும்பு-நாவலம் தீவு என்றும், மேதசு-சாகத்தீவு என்றும், தசை-குசைத்தீவு என்றும், நரம்பு-கிரௌஞ்சத்தீவு என்றும், தொக்குசால் மலித்தீவுஎன்றும், மயிர்த்திரள்-பிலட்சத்தீவுஎன்றும், உகிர புஷ்பகரத்தீவு என்றும் சொல்லப்படும், மூத்திரம்-உப்புவேலையென்றும், நீர்-பாற்கடலென்றும், சுபம்-சுராசிந்துவென்றும் மச்சை-நெய்ச்சமுத்திரமென்றும்வாய் நீர்-கருப்பங்கடலென்றும், இரத்தம்-தயிர் வேலையென்றும், வாயிலுண்டாகும் மதுரப்புனல்-சுத்தோதகசிந்துவென்றும்,சொல்லப்படும், சரீரத்தில் இரண்டுசக்கரங்களுள அவற்றில் நாதசக்கரத்தில் சூரியனும், பிந்துசக்கரத்தில் சந்திரனும், நேத்திரங்களில் அங்காரகனும், இருதயத்தில் புதனும், வாக்கில் சுரகுருவும், சுக்கிலத்தில் சுக்கிரனும், நாபியில் சனியும், முகத்தில் ராகுவும் காலில்கேதுவும் இருக்கின்றனர். ஏ கருடா! மனிதனுடைய சரீரத்தில் பதினான்குலோகங்களும் சப்தகுலாசலங்களும், தீவுகளும், நவக்கிரகங்களும் இராநின்ற வகையைச் சொன்னோம், சீவன் கருப்பவாசம் செய்யும் போது தானே அச்சீவனுக்கு ஆயுசு யிவ்வளவென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றும். இன்னவித்தை இவ்வளவென்றும், கோபமும், யோகமும் இவ்வளவென்றும், இன்னகாலத்தில் இன்னவிதமாய் மரணமுண்டாக்கத்தக்கதென்றும், பூர்வகருமத்தை யனுசரித்து பிரமன் விதிக்கின்றனன், ஆகையால், தீர்க்காயுளும், உயர்ந்தவித்தையும், போகமும், யோகமும், மற்றயாவும் மறுஜன்மத்தில் ஒருங்கெய்தும் பொருட்டுச் சீவன் நற்கருமங்கள் செய்தல் வேண்டுமென்று சாஸ்திரம் சாற்றுகின்றது. சீவன் பூர்வசன்மத்தில் செய்த கருமபலனையே மறுசன்மத்தில் அடைகின்றனன் என்பதில் ஐயப்பாடு சிறிதும் இலது. கருடா! உலகநன்மையின் பொருட்டு நினக்குயாவும் புகன்றேம் இன்னும் வினவுவதுளதேல், அதனையும் செப்புகின்றேம் என்று திருவாய்மலர்ந்தருளினர்.

இருபதாம் அத்தியாயம் முற்றிற்று.

---


## இருபத்தொன்றும் அத்தியாயம்

சூதர், சௌனகாதி மகாருஷிகளை நோக்கி ஸ்ரீஹரிதாசர்களே! பகவான் அங்ஙனம் செப்பலும், வேதவுருவனுகிய கருடபகவான் கண்ணனைத்தொழுது ஏ சர்வசுவாமியே! யமபுரியாண்டையாது! அப்புரிக்குச் செல்லும் மார்க்கத்தின் பெற்றிமையை அடியேனுக்கு மீண்டும் விஸ்தாரமாய்ச் சாதித்தருளல் வேண்டுமென்று பிரார்த்தித்தலும், அயனரனுக்கரிய எம்பிரான் கலுழனைப் பார்த்து வைனதேயா! முன்னமே அதன் பெற்றிமையை நவின்றிருக்கிறேம். நீ வினவினமையால், எஞ்சியவற்றை இப்போது புகலுகின்றேம் கேட்டி, நமன் புரிக்குச் செல்லும் மார்க்கத்தில் சிலபாகம் உருக்கிவிட்ட செம்புபோலக்காந்திக்கொண்டிராநின்றன சிலபாகம் இண்டைமுட்களாலும் தீக்கொள்ளிகளாலும் நிறைந்துள்ளன. சிலபாகத்தில் பொறுக்கவொண்ணுக்குளிர் இராநின்றது பூலோகத்திற்கும் யமலோகத்திற்கும் எண்பத்தாறுயிரங் காதவழியுளதென்று முன்னமே சொன்னேமே அத்தனை காதவழியிலும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாபஞ்செய்த சீவனுக்கு மரத்தினிழலும் பருக நீரும், சிறிதுங்கிடைக்கா பாபிகளுக்கும் யமலோகமும் அதற்குச் செல்லும்மார்க்கமும் மிக்க கொடுமையாகவே இராநின்றன. ஓ கருடா! இனி யமலோகத்தின் தன்மையைச்சொல்லுகின்றோம் தென்திசைக்கும் நிருதிதிசைக்கும் நடுவில் யமபுரி வச்சிரமயமாயும், தேவர் அசுரர் முதலியோரால் சிதைக்கத்தகாததாயும் இரா நின்றது. அப்பட்டினத்து நடுவே சதுரமாய் நூறுயோசனைவிஸ்தாரமுள்ளதாயும் இருபத்தைந்துயோசனை உயரமுள்ளதாயும், அநேகசாரளங்கள் உடையதாயும், துகிற்கொடிகளாலும், முத்துக்கோவைகளாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டதாயும், சுவர்ணமயமாயும் தர்மராஜனுடைய அரண்மனை இருக்கின்றது. அந்த அரண்மனையுள் பத்துயோசனை அகலநீள முள்ளதாயும், அநேக ஆயிரம் வைரத்தூண்கள் உற்றதாயும், சைத்தியசௌரப்பிரயமுள்ள மென்றகாற்றும்இபங்குவதாயும் எப்போதும் ஆடலும்பாடலும் உடையதாயும் ஒரு திவ்விய மண்டபம் இரானின்றது, அம்மண்டபத்தில் தூதர்கள்கரங்குவித்து ஓர்புறம் நிற்கவும்ரோகங்களெல்லாம்கோரரூபத்தோடு அவ்வாறே ஒருபுடை நிற்கவும் கண்டவர் அஞ்சப்படியாகிய ரூபத்தோடும் உவப்போடும் யமன் வீற்றிருக்கின்றனன். அவன் வீற்றிருக்கும் அம்மண்டபத்தின் பக்கத்தில் இருபத்தைந்துயோசனை அகலநீளமுள்ளதாயும், பத்துயோசனை உயரமுள்ளதாயும் பலவித அலங்காரமமையப் பெற்றதாயுமுள்ள சித்திரகுப்தனுடைய அரண்மனையிருக்கின்றது அந்தமனையில் ஒரு திவ்விய மண்டபத்தில் சித்திரகுப்தன் வீற்றிருந்து சமஸ்ததேவர்கள் செய்யும் பாபபுண்ணியங்களைச் சிறிதும் விடாமல் கணக்கெழுதுகின்றான் அவன் எழுதுவதில் சிறிதும்பிசகுஉண்டாகாது. அச்சித்திரகுப்தனுடைய அரண்மனைக்குக் கீழ்ப்புறத்தில் சுரத்துக்கும், தென்பக்கத்தில் சூலையோடு வைசூரிக்கும் மேற்பக்கத்தில்காலபாசத்தோடு அசீர்ணத்துக்கும் அருசிக்கும், வடபக்கத்தில் வயிற்றுவலிக்கும் வடகிழக்கில் தலைவலிக்கும், தென்கிழக்கில் மயக்கத்துக்கும், தென்மேற்கில் அதிசாரத்துக்கும், வடமேற்கில் சன்னிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிரகங்கள் இருக்கின்றன. அந்த ரோகங்களெல்லாம் யமனுடைய உத்தரவை எதிர்பார்த்துக்கொண்டு அம் மனைகளில் வசிக்கின்றன.

ஏ கருடா! அவ் வெமனுடைய அரண்மனைக்குத் தென்பக்கத்தில் பாபஞ்செய்த சேதனர்களைத் தூதர்கள் பலவிதமாய் இம்சிக்கின்றார்கள். சில சீவரை உலக்கை யால்புடைக்கின்றனர். சிலரை ஆயுதங்களினால் சிதைக் கின்றனர் சிலரைச் சுரிகையால் சீவுகின்றனர். சில ரைச்செக்கில்போட்டு அறைக்கின்றனர், சிலரை இரும் புச்சலாகையிற் கோத்துப் பெருந்தழலில் வாட்டுகின்ற னர் வைனதேயா! ஒரு ஆண்பாவையும், ஒரு பெண் பாவையும் செம்பினால்செய்யப்பட்ட அக்கினியால் எப் போதும் தப்தமாயிருக்கின்றனர், தூதர்கள், பரஸ்திரீ கமனஞ்செய்த சீவர்களைநோக்கிப் பாபிகள்! தருமமும் மானமும் பாராமல் பிறர் மனைவியரைப் புணர்ந்ததற்கு வந்தபயன் இஃதென்று அதட்டச்சொல்லி அப்பெண் பாவையோடு ஒன்றுசேர்ப்பார் பரபுருஷனோடு சேர ஸ்திரீகளையும் அவ்வாண்பாவையோடு அங்ஙனமே சேர்ப்பர், விந்தைபுத்திரா! புருஷன் தனது ஸ்திரீயை யன்றிப் பரஸ்திரீயைப்புணர்ந்ததற்கும், ஸ்திரீ தனது புருஷனையன்றிப் பரபுருடனைக் கூடுவதற்கும் யமலோ கத்தில் உளதாகிய தண்டனையைப் பாராய் இங்ஙனம் கொடிய தண்டனையுளதாயிருக்கவும், ஸ்திரீ புருஷர் களில் நல்லொழுக்கத்தில் நிற்போரைக்கண்டால் அரி தாயிருக்கின்றதே, சிலரைக் கரும்பைப்போல ஆலையில் கொடுக்கிறார்கள், சிலரை நரகங்களில் தள்ளிப் பாதா லங்காறும் அழுத்துகின்றார்கள். கடன்வாங்கி மீண்டும் கொடாத சீவரைக் கொடுத்தவனுக்குக் கடனைக்கொடா மல் வன்கண்மை பேசினீரே என்று முனிந்து புடைக் கின்றனர். பாவிகள் படுந்துயரை விரித்துச் சொல்லு தலால் பயன் என்னை? இன்னான் தருமிஷ்டன், இன் னான் அதருமிஷ்டன் இன்னான் சுவர்க்கம் புகுகின்ற வன். இன்னான் நிரயம் புகுகின்றவன் என்று அவரவர் ஒழுக்கத்தாலே உணரலாகுமே, தருமம் செய்தவனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்க்கம் புகுவானென்பது திண்ணமாதலால் யாவரும் தருமமே செய்தல்வேண்டும் என்று கூறிப் பின்னும் அருளுகின்றனர்.

இருபத்தொன்ரும் அத்தியாயம் முற்றிற்று.

---

# இருபத்திரண்டாம் அத்தியாயம்

சூதர், மகாமுனிவர்களே கேண்மின்! அகாரவாச்சியன் வேதவுருவனைப் பார்த்துக் கருடா! சில தர்மங்களைச் சொல்லுகின்ரும் கேண்மோ? மானிடர் கிருதயுகத்தில் மகாதவம் செய்தல் உத்தமமாயது. திரேதாயுகத்தில் தியானஞ் செய்தல் உத்தமமாயது. துவாபரயுகத்தில் யாகாதிகள் செய்தல் உத்தமமாயது. கலியுகத்தில் தானம்செய்தலே உத்தமமாயது. இல்லறத்திலிருக்கின்றவனுக்கு எந்தயுகங்களினும் யாகாதி கருமங்கள் செய்தலும் கோயில், குளங்கள், சத்திரம், தோட்டமுதலியவற்றை உண்டாக்கித்தருமம்செய்தலும், அதிதியாராதனம் செய்தலுமே உரியவாகும். இல்லறத்திலிருக்கின்றவன் தனது தாயாதிகளில் யாரேனும் மரித்தால் அவரைக் குறித்துத் தருப்பணஞ் செய்தல்வேண்டும். மாய்ந்தவன் அப்புனலைப்பெற்று மகிழ்கின்றனன் மூன்று சிறு கற்களைக் கயிற்றினுல்கட்டி நாற்சந்தியில் இறந்ததினமுதல் மூன்றுநாள் இரவில் எறிதல்வேண்டும். சஞ்சயனம் செய்தபின்பு தாயத்தார் எல்லாரும் மாண்டவனுக்குத் தருப்பணம் செய்தல் வேண்டும். முதல்மூன்று வருணத்தாராகிய பிரமக்ஷத்திரியவைசியருக்குச் சூத்திரன் தருப்பணம் செய்யலாம் பிரம க்ஷத்திரியருக்கு வைசியன்செய்யலாம். க்ஷத்திரியன் பிராமணனுக்குச் செய்யலாம். பிராமணன் தன்மரபோர்க்கன்றி மற்ற குலத்தாருக்கு ஒன்றும் செய்யலாகாது. சூத்திரசவத்தோடு பிராமணன் சுடுகாட்டுக்குப் போனுல், அப்பார்ப்பானுக்கு மூன்று நாளைக்கு ஆசௌசமுண்டு. மூன்றுநாள் கழிந்தபின்னர் அவ்விப்பிரமன் காவேரிஸ்நானம்செய்து சுத்தனுதல்வேண்டும், மாய்ந்தவனுக்

குக் கருமம் செய்கின்றவன் பஞ்சணையில் சயனிக்க லாகாது. இறந்தவனுடைய நற்குணங்களை எப்போதும் பிரசுத்துரைத்தல்வேண்டும். எமனைக்குறித்தும் ஸ்தோத்திரம் செய்தல் வேண்டும். பத்துநாட்களில் போடப் படும் பிண்டங்களாலே துஞ்சினவனுக்குச்சரீரமுண்டாகின்றமையால், பத்துநாட்கிரியையும் தவிராதுசெய்தல் வேண்டும். பத்துநாட்கிரியை செய்யாவிடின் மாய்ந்தவன் சரீரம் பெருமல் வருந்துவன். தனுர்வேதமுணர்ந்த ஒருவில்லாலன் குறிவைத்து வாளுந பெய்வனேல், அவ்வாளி அக்குறியில்பிழையாது தைக்குமாறுபோலக் கலைகளுணர்ந்த சற்புத்திரன் மரித்த தாய் தந்தையரைக் குறித்துச்செய்யும்கருமபலன் அவரைத்தவிராமல் அடையும், மரித்தசீவன் மூன்றுநாள் நீரிலும், மூன்று நாள் அக்கினியிலும், மூன்றுநாள் ஆகாயத்திலும், ஒரு நாள் கிருகத்திலும் வசிப்பன். முதல்நாளிலும், மூன்று நாளிலும், ஐந்தாநாளிலும ஏழாநாளிலும், ஒன்பதா நாளிலும், பதினொன்றுநாளிலும் நவசிரார்த்தம் செய்தல்வேண்டும். முதல்நாளில் எந்தஇடத்தில் தருப்பண முதலியவை செய்யப்பட்டனவோ அந்த விடத்தில் தானே பத்துநாளும் செய்தல்வேண்டும். பிரமக்ஷத்திரிய வைசிய சூத்திரரில் எக்குலத்தாருக்கு எத்தனைநாள் ஆசௌசம் விதிர்ப்பட்டதோ அத்தனைநாளும் பிண்ட தருப்பணம் அவசியம் செய்தல்வேண்டும். எந்தத்திதியில் மரிக்கின்றனோ அந்தத்திதியில் மாசிகம் செய்தல் வேண்டும். பதினொன்றுநாள் பலகாரத்தோடு சோறமைத்து நாற்சந்தியில் கொட்டி ஸ்நானம் செய்தல் வேண்டும். அதிக வருத்தப்பட்டு ஒருவன் மரிப்பனேல் அவனைக் குறித்து ஏகோதிஷ்டசிரார்த்தம் விசேஷமாய்ச் செய்யப்படுமாயின் அவன் வருத்தம்நீங்கிஇன்புறுவன். அந்த ஏகோதிஷ்டசிரார்த்தம் க்ஷத்திரியன் பன்னிரண்டாநாளிலும், வைசியன் பதினைந்தாநாளிலும் செய்தல் வேண்டும். தாய்தந்தையர்மரிப்பினும் மகவுபிறப்பினும் சூத்திரகுலத்தாருக்கு ஒரு மாதம் வரையிலும் ஆசௌசம் உண்டு. அரைமாதம் உளதென்பதும் ஒரு பட்சமுண்டு, சூத்திரன் பதினைந்தாநாளுக்குப்பின்னர் ஏகோதிஷ்டம் செய்தல்வேண்டும். ஒருவன் மரித்தால் பத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் தீட்டுடைய அவனுடைய தாயத்தான் கருமம் முடிந்தபின்பு மூன்று மாதத்திற்குள்ளாக எப்போதும் கேட்பினும் அத்தாயத்தானுக்கு மூன்றுதினம் சூதகம் உண்டு. மூன்று மாதத்திற்குமேல் ஆறுமாதத்திற்குள்ளாகக் கேட்பனேல் தொண்ணூறு நாழிகையுண்டு. ஆறுமாதத்திற்குமேல் ஒரு வருஷத்திற்குள் கேட்பனேல் ஒருதினமாத்திரம் உண்டு வருடம் முடிந்தபின்பு கேட்பனேல் கேட்டவுடனே ஸ்நானம்மாத்திரம் செய்தல்வேண்டும். இவ்விதி எல்லா வருணங்களுக்கும் பொதுவாகும்.

விநாயக! சய்யாதானம்செய்யவேண்டுமென்று முன்னமே ஓதினோமே! எந்தப்புருஷனும் அத்தானத்தைத் தனதுகையாலேயே செய்தல்வேண்டும். நல்ல மரத்தில் கட்டில்செய்து சொர்னத்தாலும், வெள்ளியாலும்பூண்கள் கட்டி, முத்துமாலைகளாலும், நறுமலர்த்தொடையல்களாலும், அக்கட்டிலே அலங்கரித்துப் பாயல்விரித்துத் தீபமும், சந்தனமும், புஷ்பமும், தாம்பூலமும், பின்னும் நறுநாற்றமுடைய மற்றையவும் நீருடன் செம்புத்தாலியும் அலங்காரத்தமாயும், லீலாத்தமாயும் ஸ்திரீ புருஷர்களுக்கு வேண்டியவும் அக்கடலில் வைத்து நவக்கிரகங்களைப் பூசித்துச் சிவன் முதலாகிய தேவர்களும், பார்வதி முதலாகிய தேவ ஸ்திரீகளும், லட்சுமிநாராயணனும்இந்தச்சய்யாதானத்தால் திருப்தியடைதல் வேண்டுமென்று சொல்லி, யோக்கியனுகவும், குடும்பியாயுமுள்ள உபாத்தியாயனுக்குத் தானஞ் செய்து அவனை வலம்வந்து தண்டஞ் சமர்ப்பித்தல் வேண்டும் என்றருளினர்.

இருபத்திரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

———

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்துமூன்றாம் அத்தியாயம்

சூதபுராணிகர், மாதவர்களைநோக்கி, முனிசிரேஷ்டர்களே! கேண்மின்? பின்னர்ப் பெரியதிருவடி புராரிவணங்கும் முராரியைதொழுது, ஸ்ரீசர்வேசா! தாயைப்பெற்றவளும், அவளைப்பெற்றவளும், அவளைப்பெற்றவளும், தந்தையைப் பெற்றவனும், அவனைப்பெற்றவனும், அவனைப் பெற்றவனும் உயிரோடிருக்குங்கால் தாயேனுந் தந்தையேனுமிறப்பின், புத்திரன் எங்ஙனம் பிண்டஞ் சேர்த்தல்வேண்டுப்? நவின்றருளுகவெனலும், ஸ்ரீ தாமூர்த்தி,வைனதேயா! தாய்தலைமுறையிலுந் தந்தைதலைமுறையிலும் உயிரோடிருப்பவர்களுக்கு மேலேமூன்று தலைமுறை பிதிர்கள் பிண்டத்தோடு இறந்தவர் பிண்டத்தைச் சேர்த்தல் வேண்டும், பிண்டமூண்ணும் புத்திரர்மூன்றுபேர், தியாசகர் மூன்றுபேர்,லேபகர்மூன்றுபேர் பிண்டம் போடும்பந்தியில் வருவோன் ஒருவன் இங்ஙனம் தந்தைமரபில் பத்துபேர்களும்; உளர். ஒருவன் மரித்துப் பிதிரரோடுசேர்தலும் நான்காம்பாட்டன்முதல் தியாசகனாகின்றான், மூன்றாம் தியாசகன் முதல் லேபகனாகின்றான், மூன்றாம் லேபகன்பந்தியில்வருவோனாகின்றான, பந்தியில்வருவோன் வராமல் ஒழிகின்றான், புத்திரன் சிரார்த்தஞ்செய்யின் தந்தைசந்தோஷித்து அப்புத்திரனுக்குப் புத்திரன்கொடுக்கின்றான்,பாட்டன்கோமுதலிய பொருள்கள் கொடுக்கின்றான், சிரார்த்தஞ்செய்தலில்பிதிரர்க்குத்திருப்தியுண்டாதலன்றிச் செய்கின்றவனுக்கும் மிக்கபலனுளது அவிட்டம் முதல் ரேவதிவரையிலுள்ள ஐந்துநாட்கள் சிரேஷ்டமானவையல்ல. அவ்வைந்து நக்ஷத்திரங்களில் மரிக்கின்றவனுக்கு உடனேசமஸ்காரமுதலியகிருத்தியங்கள் செய்யலாகா அந்த நக்ஷத்திரங்கள் கழிந்தபின்பே செய்தல்வேண்டும், இவ்விதியை ஒருபக்ஷமாய்கொள்க, உயிர் நீங்கியபின்பு தேகத்தைவைத்திருக்கசிறிதும் அமையாதாகலால், உடனே சமஸ்காரம் செய்தலே வேண்டும், தனிஷ்டாபஞ்சகத்தில் இறந்த தோஷ நிவர்த்தியின் பொருட்டுச் சாஸ்திரத்தில் சொல்லியபடி சில கருமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதினையாய்ச் செய்தல்வேண்டும், மேற்சொன்ன ஐந்து நக்ஷத்திரங்களிலும், இறந்தவர் நற்கதியடைவார் ஆதலால் எள்ளும், கோவும், இரண்யமும், நெய்யும் தானங் கொடுத்தல் வேண்டும், கனிஷ்டாபஞ்சகத்தில் மாய்ந்தவருக்குச் சாஸ்திரம் சொல்லியபடி செய்யாவிடின் கருமஞ்செய்யுங் கருத்தா துன்பமடைவன். பிரேதத்தையுத்தேசித்துச் செய்யப்படும் சிரார்த்தத்தில் பிராமணர் ஆசீர்வதித்தலும், அன்னவர்க்ஷேமங்கோருதலும்இரட்டைக்குசையும், பணவமும் ஓமமும் எச்சிலைநாய் நுகரலாகாதென்றவிதியும், சேஷத்தை யுண்ணலும், விகிரமும், ஸ்வதா என்கிற சப்தமும், பிதிர் சப்தமும் உடன் சொல்லுதலும், ஆவாகனமும், நமஸ்காரமும் எல்லைவரையில் பின்செல்லுதலும், வலம் வருதலும், சம்பிரதாயப்படி புண்டரம் தரித்தலும், அக்கினியில் பூரணாகுதி செய்தலும், ஏகோதிஷ்டமும் ஆகிய பதினெட்டும் வேண்டுவதில்லை அறியாமல் இவற்றை செய்தவன் நரகம் எய்துவன்.

ஓ கருடா! மரித்தவுடனே கால்கைகளைக் கட்டல் வேண்டும். உறவினரெல்லாரும் சவத்தண்டையிலேயிருத்தல்வேண்டும், ஒரு கிராமத்தில் சவம் கிடந்தால் அதுதகனம் செய்யப்படும் வரையினும் அக்கிராமத்தினுள்ளயாவரும் சோறும் நீரும் உண்ணலாகாது சோறும் நீரும் உண்டால் மாமிசமுண்ட தோஷமும். இரத்தம் பருகினதோஷமும், அடைவர் தாம்பூலதாரணம் செய்யக்கூடாது தந்த சுத்தியும் செய்யலாகாது. இரவில் பிணங்கிடந்தால் ஸ்திரீ புருஷர் புணரலாகாது என்றருளினர்.

இருபத்துமூன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்துநான்காம் அத்தியாயம்

ஸ்ரீவேதவியாசர் மாணுக்கர், நைமிசாரணிய வாசிகளே! கருடபகவான் மறைமுதலியவைத்தொழுது, எந்தையே பிரயோபவேசம் செய்தல் யாது காரணத்தால் சிரேஷ்டமாயது? பிறந்து வளர்ந்து வாழ்ந்தமனையை நீக்கிப் புண்ணியக்ஷேத்திரத்துக்குப்போய், அவ்விடத்தில்மரித்தால் அதற்குப் பயன் யாது? தீர்த்தயாத்திரை செய்யப் புறப்பட்டு மார்க்கத்தில் மாய்வனேல், அவனுக்குப்பலன் என்னை? நாளெல்லாம் தீர்த்தயாத்திரை செய்கிறவனுக்குப் பலன் என்னை? சந்நியாசாச்சிரமம் பெற்ருேன் அவ்வாசிரமத்துக்குரிய ஒழுக்கத்தினின்று தவறுவனேல் எக்கதியடைவன் இவற்றை எல்லாம் சவிஸ்தாரமாய்ச் சாற்றியருள வேண்டுமென்று பிரார்த்தித்தலும், பரமபதி வைனதேயா! யாவனெருவன் ஆகார வியவகாரம் ஒன்றும் செய்யாமல் நியமத்தோடு தருப்பசயனம் செய்து எம்மைத் தியானித்தவாறே மரிக்கின்ருனே அவன் நம்மூலகுசார்வன். அதனுலே அப்பிராயோபவேசம் ஏற்றமுடையதாயிற்று. ஒருவன் பிராயோபவேசம் செய்தநாள் எத்தனையோ அத்தனை நாள்களுக்கும் நாள்ஒன்றுக்கு ஒருயாகபலன் அவனுக்கு உண்டாகும் மகா ரோகங்களால் வருத்தப்பட்டு இனி உயிர் வாழ்க்கை வேண்டுவதில்லை யென்று பிரயோபவேசம் செய்து நல்லுலகமேயடைவன். மரிப்பதற்குப் பிராயோபவேசஞ் செய்து நடுவிலெழுந்து இல்வாழ்க்கையை விரும்புவனேல் அவன் பிராமணர் மூலமாய்ப் பிராயச்சித்தங்கள் செய்துகொண்டு பின்பு தருமமார்க்கத்திலே ஒழுகுதல் வேண்டும். சந்நியாசம் செய்துகொண்டு நியமத்தோடிருந்து மரித்தவனுக்கு அவன் அவ்வாசிரமம் பெற்றநாள் முதல் மரித்ததினம் வரையிலுமுள்ள நாள்களுக்குநாளொன்றுக்கு இரண்டு யாகபலன் உண்டாகும், பிணியால் துன்பப்பட்டு மரணகாலம் அடுத்ததென்று எண்ணிச் சந்நியாச்சிரமம்பெற்றுப் பின்பு பிணிநீங்கிப் பிழைத்து இல்வாழ்க்கையில் உடன்படுவானேல் அவன்மகாரோகம் அடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரபுருஷனைச் சேர்ந்த மனைவி. கணவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன். அவனினும் பாபி ஒருவனும் இலன். அவனை ஒருவர் பார்க்கவுமாகாது. மனை, மனைவி, மக்கள் முதலியோரை நெடுங்காலம் பிரிந்து, நெடுந்தூரஞ் சென்று தீர்த்தயாத்திரை செய்கிறவனுக்குப் பிரமாதிதேவரெல்லாரும் வேண்டியவற்றைக் கொடுக்கின்றனர். திவ்யதேசயாத்திரையை உத்தேசித்து சென்று விதியால் வழியில் மரிப்பனேல், அவன் சுவர்க்கம்புகுவன். சந்நியாசிகளையும் யாத்திரை செய்வோர்களையும் தேவரெல்லாருங் காப்பாற்றுகின்றனர். விசேஷமாய் விஷ்ணு கணங்களே அவர்களை ரட்சிக்கின்றார்கள். மரிக்கவேண்டுமென்றே புண்ணியக்ஷேத்திரத்தில் நெடுங்காலம் வசித்துச் சிறிது தீவினையால் வேறிடத்தில் மரிப்பனேல், அவன் மறுசன்மத்தில் காவேரி தீரத்தில் வைதிகபிராமணகுலத்தில் சர்வசாஸ்திர சம்பன்னனாய் நல்லொழுக்கம் உடையவனாய் பகவத் பாகவத ஆசாரிய பக்தியுடையவனாய்ப் பிறந்து, இறுதியில் நல்லுலகடைவன், இன்ன க்ஷேத்திரம்போய் அங்கேமரிப்பேன் என்றும் அங்குமரிக்காமல் மீளேனென்றும், அறங்கரை நாவின் நான்மறைமுற்றிய அந்தணர் சந்நிதியில் சங்கற்பம் செய்துகொண்டு சென்றவன் மீண்டும் மனைக்கண்வருவனேல், அவன்மகாபாவி ஆவன். அவனும் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டும். மரணகாலம் அணித்தாயது என்பதை யறிந்து விஷ்ணு க்ஷேத்திரங்களில் மரிக்கவேண்டுமென்று யாவன் நடக்கின்றானோ அவன் நடக்கும் அடிகளுக்கெல்லாம் அடியொன்றுக்கு ஒரு கோதானபலன் அடைவன், எக்காரணத்திலேனும், அங்ஙனம் சென்றவன் திரும்பி வருவனேல் அவன் நடந்த அடிகளுக்கு அடியொன்றுக்கு ஒரு கோவைக் கொன்றதோஷம் அடைவன், கிருகத்தில் ஒருவன் செய்கின்ற பாபங்கள் திவ்வியதேசங்களில் பகவத் பாகவதசேவையாலும், தீர்த்தப் பிரசாதங்களாலும் நிவர்த்தியாகும், க்ஷேத்திரங்களில் செய்யும் பாபம் எவற்றாலும் எந்நாளும் நிவர்த்தியாகா.

கருடா, அந்நியனுக்கு உதவிபுரிதலும் தனது தாய்தந்தையருக்கும், உடன் பிறந்தாளுக்கும், உடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்தானுக்கும் வேண்டியவற்றைக்கொடுத்தலே விசேடமாம். புத்திரன் தந்தைக்குப் பொருள் முதலியவை கொடுத்தால் உத்தம பிராமணனுக்குக்கொடுத்தால் உளதாகும் புண்ணியத்திலும் நூறுபங்கு அதிகபுண்ணியம் பெறுவன். தாய்க்குக்கொடுத்தால் ஆயிரம்பங்கு அதிகம் பெறுவன். சகோதரிக்குக் கொடுத்தால் லட்சம்பங்கு அதிகம் எய்துவன். சகோதரனுக்குக்கொடுத்தால் புண்ணியத்துக்குக் கணக்கேயில்லை, வருந்தித் தான் பெற்ற பொருளை நல்லவிநியோகம் செய்தல்வேண்டும். யாவன் இறத்தலைமறந்து, நிலையல்லாத சரீரத்தைப் போஷித்து, ஆடையாபரணங்களால் அதனை யலங்கரித்துச் சமுசார சாகரத்திலேயே முழுகுகின்றானோ அவனைப் பார்த்து இச்சீவன் திறன் இங்ஙனமே மானிடசன்மம் பெற்றும் கருமத்தால் இவன் தமது கைப்படுவோனேயானென்று யமன் சிரிக்கிறான்.

ஒருத்தி பரபுருஷனைச் சேர்ந்து பெற்ற மகவை அவள் ஆமுடையான்எடுத்துமடியில் வைத்துக்கொஞ்சிக் குலாவும்போது அக்குழந்தையை இவனோ பெற்றான். நம்மைப் புணர்ந்து பெற்றவன் வேறொருவனாயிருக்க, அதையுணராமல் இவன்தான் பெற்றால்போலவும், தனக்குரியது போலவும் கொண்டாடுகிறானேயென்று நினைத்து கணவன் குழந்தையோடு குலாவுதலைக் கண்டும் மகிழ்வாளென எண்ணுமாறு இதழ் பிதுக்கி நகைபுரியும் கள்ளமாதுபோல, பூதேவியானவள் அளவற்ற நிலனையும் கொள்ளக்குறையா நிதியையும் அடைந்தும், தான்உடாதும், உண்ணாதும், பிறர்க்கொடாது, பொருளீட்டிவைக்கும் மூழுமகனைப்பார்த்து இவனுக்கேயாமுரியேமோ? அதை உணராது, எனது எனது என்கின்றானே என்று வாயாரச் சிரிப்பாள். பூமியும் மற்றபொருளும் ஒருவனுக்கே உரியவோ? தமது நமது என்று பிதற்றித் திரிந்தோரெல்லாரும் இறுதியில் நீத்தேகினரே என்று நல்லாற்றில் ஒழுகி உயிர்களுக்கு உதவிசெய்து பூதானம் செய்கின்றவனைப் புவிமகள் நட்மாளுடையான் நல்லன். அவனால் நாம் சத்பிராமணன் கையில் கொடுக்கப்பட்டோமேயென்று

உவக்கின்றாள் பூதானம் செய்தவனும், புனலில் மூழ்கியேனும் பஞ்சாக்கினி மத்தியிலிருந்தேனும் தவம் செய்தவனும், மகங்கள் புரிந்தவனும், யுத்தத்தில் பின் வாங்காமல் முன்னின்றவனும் இகத்திலும் பரத்திலும் உறுதிப்பெறுவரென் றருளினர்.

இருபத்துநான்காம் அத்தியாயம் முற்றிற்று.

# இருபத்தைந்தாம் அத்தியாயம்

சூதமகாமுனிவர், நைமிசாரணியவாசிகளே! கருடபகவான் ஆதிமத்தியாந்தரகிதனாகிய ஸ்ரீமந்நாராயணனைத்தொழுது. சகதீசா! நித்திய சிராத்தம் எங்ஙனம் புரியத்தக்கது? நவின்றருளுகவெனலும், அறவாழியந்தணன், புள்ளரசனைநோக்கி, தாகக்ஷியா! நாள்தோறும் ஒருசத்பிராமணனுக்குப் போசனஞ்செய்வித்து அன்னமும் புனலும் ஒரு கடத்தில் நிறைத்து அதனை அவ்வேதியனுக்கு கொடுத்தல்வேண்டும், இந்த நித்யசிராத்தத்தால்மாய்ந்தசீவன் இன்பமடைகின்றனன், அச்சீவனை ஒருவருஷம் வரையிலும் வழியில் நடத்திக்கொண்டு யமலோகம்சாரும். தூதரும் அச்சிரார்த்தத்தால் திருப்தியடைந்து அச்சீவனுக்கு அதம்செய்கின்றனன், இறந்த பன்னிரண்டா நாள் சங்கற்பப் பூர்வசமாய்ப் பன்னிரண்டுகடங்கள் தானஞ்செய்தல்வேண்டும், தரித்திரனாயினும் ஸ்ரீ விஷ்ணு பகவானைக்குறித்துப்பெரியதாகிய ஒருகடமும், சித்திரகுப்தனைக் குறித்து ஒரு கடமும் கொடுத்தல் வேண்டுமென்று அருளினர். கருடபகவான், பரமாத்துமனை வணங்கிப் பரமபதநாதா! மோக்ஷமும் சுவர்க்கமும் எந்தக்ஷேத்திரங்களில் மரித்தால் கிடைக்கும்? அவ்விரண்டு எக்கருமங்களைச் செய்தால் கிடைக்கும்? புகன்றருளுக வெனலும் ஸ்ரீ வைகுண்டநாதன் வைனதேயா! அயோத்தியா, மதுரா,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயா, * காசி, காஞ்சி, அவந்திகா, துவாரகா என்ற சப்தபுரிகளில் எதிலேனும் ஒன்றில் துஞ்சுவோன் நிரதிசய இன்பவீடாகிய நம்முலகு எய்துகின்றனன், சந்நியாசியாச்சிரமம்பெற்று மரிக்கின்றவனும் ஸ்ரீ விஷ்ணுபக்திசெய்து மரிக்கின்றவனும், ஸ்ரீ ராமகிருஷ்ணாதி நாமங்களைப்புகழ்துஞ்சுகின்றவனும், இன்பவீடடைகின்றனர் திருத்துழாய்வைத்து விருத்தி செய்கின்றவனும், அதற்குப்புனல் பாய்ச்சுகின்றவனும், பாபம் நீங்கி நல்லுலகடைகின்றனர். கோவுக்கும், பிராமணனுக்கும், குழந்தைக்கும் ஆபத்துவந்தகாலை தன்னுயிரை விட்டாயினும், அவற்றையாவன் ரட்சிக்கின்றானோ அவன் இறுதியில்தேவரெல்லாம்எதிர்கொள்ளச்சுவர்க்கம்சேர்கின்றான், ஸ்ரீரங்கத்திலேனும், காசியிலேனும் குருக்ஷேத்திரத்திலேனும், பிருகுக்ஷேத்திரத்திலேனும், பிரபாச தீர்த்தத்திலேனும், ஸ்ரீகாஞ்சியிலேனும், திரிபுஷ்பகரத்திலேனும் பூதேஸ்வரத்திலேனும் மாண்டவன்வீட்டுலகெய்துகின்றனன், ஏழு அல்லது எட்டுவயதுள்ள கன்னிகையை மணம்புரிந்தவனும், வேதசாஸ்திரங்களை யுணர்ந்தவனும், கன்னிகையேனும, பூமியேனும், கிரகமேனும், கோவேனும், திலபருவதமேனும் யானையேனும் தானங்கொடுத்தவனும் சுவர்க்கம்

---

* காசி இப்போது சிவக்ஷேத்திரம் ஆதியில் விஷ்ணுக்ஷேத்திரம், சிவன் பிரமஹத்தி தோஷங்களால் பீடிக்கப்பட்டு புவியெங்கும் திரிந்து காசிக்ஷேத்திரம்வர, உடனே அம்மகாபாதகம் நீங்க அச்சிவன் அப்போது, அந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருந்து ஸ்ரீ யப்பதியைத் திருவடி தொழுது, கைலைமலை சேர்வான் அகலமீண்டும் அப்பாதகம் வந்து பற்ற கபாலிதிரும்பிக் காசியினுட்புகுந்து உலகை உண்டுமிழ்ந்த ஒருவனை வணங்கி, உற்றவாறுரைத்துச் சுரிதமூர்த்தி நீ எழுந்தருளிராநின்ற இந்த க்ஷேத்திரத்தை அடியேனுக்குத் தந்தருள்வையேல், மகாபாதகத்தாலே பீடிக்கப்படாமல் இவனிருப்பேனென்று பிரார்த்திக்க, பரமகாருண்யனாகிய பகவான், காசியை அரனுக்குக் கொடுத்துப் பிரயாகையில் எழுந்தருளினரென்று 'நாரதீயபுராணம்' நவிலாநின்றது, பின்பு சிலர் சிவனைக் குறித்துத் தவம்புரிந்து முத்திவேண்ட, அச்சங்கரன் பிரமனைநோக்கி, எந்தையே! அடியேன் முத்திகொடுக்கும் தெய்வமென்று எண்ணி அடியேனைச்சிலர் முத்திகேட்கின்றனர் அவர்களுக்கு நான் முத்திகொடுக்க ஒருபாயம் அருளுதியென்று பிரார்த்திக்க, சதுமுகன், சம்புவைநோக்கி, இராமநாமத்தையோதிக் காசியில் இறப்போர்க்கு முத்திகொடுவென்று அருள அரன் அதுமுதல் அங்ஙனம் முத்தி கொடுக்கின்றனனென்று அகத்திய இராம அரசஸ்கீதை கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காசி க்ஷேத்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எய்துவர். கிணற்றையும், நடவாவியையும், குளத்தையும், தேவாலயத்தையும் புதுக்கினவன் முன்னமே அவற்றை யுண்டாக்கினவனினும், அதிக புண்ணிய மடைந்து விண்ணுலகுசார்வன், குசைப்புல்லாலே னும் வீடுகட்டித் தானஞ்செய்தவன். மூன்றரைக்கோடி வருடம் சுவர்க்கவாசம் செய்வன். பிராமணருக்கு வருஷாசனம் கொடுப்பவனும் சுவர்க்கம் எய்துவன் என்றருளினர்.

இருபத்தைந்தாம் அத்தியாயம் முற்றிற்று.

---

# இருபத்தாறும் அத்தியாயம்

சூதகர், ஸ்ரீ அரிதாசர்களே! பின்னர்வேதவுருவன் சகத்காரணனை நோக்கி ஸ்ரீசர்வேசா! ஆசௌசம் இன்ன வகையுளவென்று அடியேனுக்கு கூறியருளவேண்டுமெனலும், ஆதிநாயகன் விநாயகா! பிராமணனுக்குப் புத்திரன் பிறந்தாலும, விப்பிரன் மாய்ந்தாலும தாயத்தார்களுக்குப் பத்துநாள் வரையில் ஆசௌசம் உளது. ஆசௌசமுடையோர் தேவதாராதனம் ஓமம் முதலியவற்றைச் செய்யலாகாது ஆசௌசமுடையோர் வீட்டில் அது நீங்கும்வரையினும் எவரும் உண்ணலாகாது நெருப்பில் விழுந்து இறந்தவனுக்கும், சிங்கம் முதலிய மிருகங்களால்மாய்ந்தவனுக்குப், தேசாந்திரங்களில் துஞ்சினவனுக்கும் உடனே கருமம் செய்யலாகாது. ஆதலால், கிரியைசெய்யத் தொடங்குநாள்முதல் ஆசௌசம் உண்டாகும். இறந்தானென்று கேட்டவுடனே ஸ்நானமாத்திரம் செய்தல்வேண்டும். அரசனுக்கும், தவஞ்செய்யும் பூசுரனுக்கும், மகம்புரியும் விப்பிரனுக்கும் அவர்கள் தாயத்தார் இறந்தால் ஆசௌசமில்லை. ஒருவனுக்குப் பெண்பிறந்தால் அதன் தாயத்தாருக்கு ஆசௌசம இலது. பெற்றதாய்க்குமாத்திரம் பத்துநாள் ஆசௌசமுள தென்பதும், தந்தைக்கு ஸ்நானமாத்திரம் போதுமானதென்பதும் சிலர் அபிப்பிராயமாயிருக்கின்றனர். மணக்கோலங்கொண்டிருக்குங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்திலும், யாகஞ்செய்யுங் காலத்திலும், உற்சவத்துக்காகக் கங்கணப் பூண்டகாலத்திலும் ஆசௌசம் நேர்ந்தால் அவ்வாசௌசம் அத்தொழில் பூண்டாருக்கு அக்காலங்களில் இலது. ஒரு ஆசௌசம் நேர்ந்த காலத்தில் இடையில் வேறொரு ஆசௌசம் வந்தால் முன்னமேவந்த ஆசௌசத்தோடு பின்வந்ததும் தாயத்தார்களுக்கு நிவர்த்தியாகும். ஆசௌசம் வருமுன் பிராமணருக்குக் கொடுப்பனவாய் உத்தேசித்திருந்தவற்றை ஆசௌசம் வந்தபின்பு கொடுக்கலாம். பிராமணர்களும் வாங்கலாம். கோக்கைகளையும், பிராமணர்களையும். ஸ்திரீகளையும் இரட்சிக்கும் விஷயத்திலும், யுத்த பூமியிலும் ஒருவன் உயிர்விடுவனேல் அவனைச் சேர்ந்தவர்களுக்கு ஒருநாள் மாத்திரம் ஆசௌசம் உளது. ஆசௌசமே இலது. ஸ்நானஞ் செய்தலே போதுமானது.என்பாரும் உளர் என்று அருளினார்.

இருபத்தாறும் அத்தியாயம் முற்றிற்று.

---

# இருபத்தேழாம் அத்தியாயம்

சூதபுராணிகர், மாதவர்களே! கருடபகவான் மாதவனை நோக்கித் துன்மரணமடைந்தவன் எக்கதியடைவன்? அவனுக்கு எவ்வித கருமஞ் செய்யத்தக்கது? மொழிந்தருளுகவெனலும், இலக்குமிநாயகன் காலால் தாண்டியேனும், கழுத்தில் சுருட்டிக்கொண்டேனும், விஷமுண்டேனும், அக்கினியில் விழுந்தேனும்வைரப்பொடி யுண்டேனும் மரித்தவனும் பறவை மூக்கினாலேயும், எருது முட்டியேனும், சலத்தில் விழுந்தேனும், நாய்நரிகள் கடித்தேனும், குஷ்டரோகத்தினாலும்,தேகத்தில் புழுவுண்டாகிமரித்தவனும், பிராமண வைணவராலேனும்,மிலேச்சராலேனுஞ், சண்டாளராலேனும் அடிபட்டுத் துஞ்சினவனும், இடிவிழுந்தேனும், மரம் விழுந்தேனும் மாண்டவனும், சூத்திர ஸ்திரீயையேனும், வண்ணாத்தியையேனும், தீண்டி ஸ்நானஞ்செய்யாமல் மாய்ந்தவனும் நற்கதிபெறுதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நரகமெய்துவர். அங்ஙனம் மரித்தவரைச் சார்ந்தவர்கட்கு ஆசௌசமில்லை. அவர்கள் உடனே கிருத்தியம் செய்யவேண்டுவதுமில்லை. நாராயணபலி செய்தபின்பு கருமஞ் செய்யலாம், துன்மரண மடைந்தவன் பிராமணனாயின் ஆறுமாதத்திற்குப் பின்பும், க்ஷத்திரியனாயின் இரண்டுமாதத்திற்குப் பின்பும், வைசியனாயின் பதினைந்து நாளுக்குப்பின்பும், சூத்திரனாயின் இறந்தவுடனும் கருமஞ் செய்யத்தக்கது கங்காதீரத்திலேனும் யமுனாதீரத்திலேனும், நைமிவனத்திலேனும் புஷ்கர க்ஷேத்திரத்திலேனும், அரசமரத்து நிழலிலேனும், பசுமாட்டிக்கொட்டிலேனுப், இல்லத்திலேனும் நாராயணபலி செய்தல்வேண்டும். வேதமந்திரங்களாலே ஸ்ரீ விஷ்ணுபகவானை ஆராதித்து ஸ்தோத்திரஞ் செய்து தெற்குமுகமாயிருந்துகொண்டு சங்குசக்கர பீதாம்பரதாரியாயும், நித்தியனாயும், சர்வாந்தர்யாமியாயும் திவ்ய மங்கள விக்கிரக அநந்த கல்யாணகுண விஸ்வரூபனாகியும் இரானின்றஸ்வாமி! மரித்தவனுக்கு நற்கெதிகொடுத்தல்வேண்டும் என்று அப்பகவானைப் பிரார்த்தித்துத் தியானித்துப் பத்திரபூர்வமாய்ப் பிராமணருக்குப்போசனஞ்செய்வித்துத் தானியதானம் கொடுத்தும் பிண்ட தருப்பணம் முதலிய யாவும் புரிதல்வேண்டும், அங்ஙனம் புரிந்த தியானத்துக்கு மறுதினத்தில் சுவர்னத்தினால் ஸ்ரீவிஷ்ணு பிரதிமையொன்றும், தாமிரத்தினால் உருத்திரப்பிரதிமையொன்றும், வெள்ளியினால் பிரமப் பிரதிமையொன்றும, இரும்பினால் யமப்பிரதிமையொன்றுஞ்செய்துமேற்கில் விஷ்ணுவையும், கிழக்கில்பிரமனையும். தெற்கில் யமனையும் வடக்கில் உருத்திரனையும், மத்தியில் மரித்தவனையும் வைத்துப் பூசித்து ஐந்து குடும்பங்கள் வைத்து அவற்றில் நவரத்தினங்கள் பெய்து, பூணூல் சாத்தி, அலங்கரித்து மேற்கூறிய ஐந்து தேவர்களைக்குறித்துச் சிரார்த்தஞ்செய்து பிண்டம்வைத்து எட்டுத் தானங்களுஞ்செய்து செப்புப்பாத்திரத்தில் திலதமும், இரணியமும் வைத்துத் தானங் கொடுத்து இருக்கு வேதமுணர்ந்தவருக்குப் பயிருடன் பூதானமும், எசுர்வேதமோதியவருக்கு கன்றுடன் ஆவும். சாமவேதம் வல்லவருக்குச் சம்பாநெல்லும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்தல்வேண்டும். முந்நூற்றருபதுபலாச இலைக் காம்பினால் மரித்தவனது சரீரம்போல் ஒன்றும் செய்தல் வேண்டும்.

கருடா முந்நூற்றருபது காம்புகளுக்கும் விவரம் சொல்லுகின்றோம். சிரசுக்கு நாற்பதும், கழுத்துக்குப் பத்தும், மார்புக்கு இருபதும், வயிற்றுக்கு இருபதும், இருகரங்கட்கு நூறும் இடைக்கு இருபதும், தொடைகளுக்கு நூறும், முழந்தாள்களுக்கு முப்பதும், ஆண்குறிக்குநாலும், விருக்ஷணங்களுக்கு ஆறும் கால்களுக்குப் பத்தும் வைத்து மீண்டும் சிரசுக்கு தேங்காயும், முகத்திற்குப் பஞ்சரத்னமும், நாவுக்கு வாழைப்பழமும், மூக்கிற்கு, எட்பூவும், காதுக்கு எள்ளும், நரம்புக்குத் தாமரைத்தண்டும், தசைக்கு அன்னமும், இரத்தத்துக்குத் தேனும், மயிர்களுக்குச் சவுரியும், தோலுக்குக் கிருஷ்ணாசினமும், ஸ்தன பிரதேசத்துக்குக் குன்றியும் நாபிகுத் தாமரைப்பூவும், விருஷணத்திற்குப் பனங்காயும் வைத்துச் சந்தன புஷ்பங்களால் அலங்கரித்துச் சாஸ்திரப்படி கிருத்தியம் செய்தல்வேண்டும். இங்ஙனம் செய்யின் துன்மரணமடைந்தவன் நற்கதியடைவன். இவ்விதம் கருமம் செய்யும் புத்திரனுக்குப் பத்து தினமும். மற்ற தாயத்தார்களுக்கு மூன்று தினமும் ஆசௌசம் உளதென்றருளிப்பினும் அருளுகின்றனர்.

இருபத்தேழாம் அத்தியாயம் முற்றிற்று.

---

# இருபத்தெட்டாம் அத்தியாயம்

சூதமாமுனிவர், மறந்தும் புறந்தொழாத திருமாலடியார்களாகிய நைமிசாரணிய வாசிகளே! பின்னர்ச் சர்வஜ்ஞன், எம்மையாளுடையபிரானைநோக்கி, வைனதேயா! விருஷோற்சர்க்கத்தைக் குறித்து வேறொரு பிரகாரம் சொல்லுகின்றோம் கேண்மோ? முன்னமேசொன்ன தினங்களில் ஒன்றில் ஸ்தலசுத்தி செய்த பின்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினி பிரதிஷ்டை செய்து ஒரே வருணமுடைய காலைக்கன்றுஒன்றும் அதற்குச்சிறிதாய்க்கடாரிக்கன்று ஒன்றும் கொணர்ந்து அவ்விரண்டனையும் மஞ்சன மாட்டி வஸ்திராபரணங்களால் அலங்கரித்து, வாலில் தருப்பணம் செய்து விடுத்து நாத்தி சிரார்த்தம் செய்து ஒருபக்ஷம் வரையிலும் பிராமணர்களுக்குப் போசனம் செய்வித்து வெள்ளி, திலம், உதக்கும்பம், வஸ்திரம் ஆகிய இவற்றைத் தானம் செய்யின் நாற்ருெருதலை முறையிலுள்ளோர்களும் சுவர்க்கம் புகுவர் இதனைக் காமிய விருஷோற்சர்க்கம் என்பர் என்று பகர்ந் தருளிப் பின்னும் பகருகின்றனர்.

இருபத்தெட்டாம் அத்தியாயம் முற்றிற்று.

---

# இருபத்தொன்பதாம் அத்தியாயம்

வியாசர் மாணக்கர், ஸ்ரீஹரி கதாசங்கீர்த்தனசீலர் களே! புருஷோத்தமன், வைனதேயா! சீவன் இன்பம் துன்பம் அடைவதற்கு அவன் செய்த நல்வினை தீவினைகளே காரணமாகும். சீவர் பலராயிருக்கஒருசன மத்தில் ஒருசீவனுல் செய்யப்பட்டகருமம் தன்னைசெய்த வன் இன்னனென்று எங்ஙனம் அறிந்து மறுசன்மத் தில் அவனை எப்படியடையும்? என்று ஐயப்படவேண் டாம் ஓரிடத்தில் ஆண்கள் பலவாயிருக்ககன்றுதன்னை யீன்ற பசுவையே அடைதல்போலச் கருமம் தன்னைச் செய்தவன் யாவனே அவனையே தவிராது அடையும் வைனதேயா! பூதானம் செய்தலினும் உத்தமதானம் வேறில்லை. மெய்பேசுதலினும் புண்ணியம் வேறில்லை பொய் சொல்வதினும், பொய்பத்திரம் எழுதலினும் பாபம் வேறில்லை, பூமி முதற்கடவுளாகிய ஸ்ரீவிஷ்ணு சம்பந்தியாகலாலும், சுரபிகள் சூரியனுடைய திருக்கு மாரத்திகளாலும், சுவர்னம், அக்கினியின் மகவாகலா லும், அம்மூன்றனையும், தானம் செய்வோம் மூன்று லோகங்களையும் உடையவனுய் தானம்செய்த பலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவன், ஒருகோவினுடைய தோலின் அளவு ஒருவன் தானம்செய்யினும் அவன் மகாபாபத்தினின்றும் நீங்குவன் பூதானம்கொடுத்து அவாவினால் அப்பூமியை அபகரிக்க எத்தனித்தவனும், தானும் கொடுத்தபூமியின் பலனைத்தானம் வாங்கினோன் அடையாமல் கெடுத்தவனும், தானம்கொடுத்த நிலத்தின் பேரில் ஒருவன்வழக்கிட்டால் தானம்வாங்கினவனுக்கு உதவி செய்தவனும் பிரளயகாலம் வரையிலும் நரகவாசம் செய்தவர், ஒருவன் ஒருவிருத்தியால் வாழ்ந்து கொண்டிருக்க, அவ்விருத்தியைக் கெடுத்தவன் ஆயிரம் கோவைக்கொன்ற தோஷமடைவன் ஒருவனுக்கு ஒரு சீவனம் செய்வித்தவன் லக்ஷம் கோதானம் செய்த பலன் அடைவன் நூறுகோதானம் செய்தலினும் ஒரு கோவைக் கோல்கொண்டு ஒச்சாமலும், களவாடாமலுமிருத்தல் நலமாம் ஒருவன் ஒரு கோவைக்கொன்று நூறுகோதானம் செய்யினும் கொன்றபாபமே மேலாகும், நல்லசீலனாய் நான்மறைபயின்ற நாவினனாய்உள்ள ஒரு உத்தம பிராமணனை வழிபட்டுக் கிருஃகிருத்தியங்களில் அவனுக்குச் சிந்தையில்லாமற்செய்தல் அசுவமேதம்செய்தலினும் மிக்கவிசேடமாம் யாகம்செய்யின் அப்பிரத்தியட்சராகிய சுரர் உளமுவக்கின்றனர். இதனால் பிரத்தியட்சனாகிய பூசுரன்உவக்கினரூன். அரசன் பிராமணனுடைய பொருளை யபகரித்துச் சதுரங்கசேனை சேர்த்துயுத்தம்செய்யின் அச்சேனையுத்தபூமியில் ஒருங்குமடியும், தன்னாலேனும், தனது முன்னோர்களாலேனும் விப்பிரனுக்குக் கொடுத்தபொருளை அபகரிக்கலாகாது, அதனை அபகரித்தவன் அறுபதினாயிர வருடம் மலத்தில்கிருமியாய்ப்பிறப்பன், பொருள்மேலாசையால் கபடத்தோடு நண்பாடிப்பிராமணருக்குரியதை அபகரித்தவன் நெடுங்காலம் நிரயத்தில்உறைவன், இரும்புப் பொடியேனும், கருங்கற் பொடியேனும், விஷமேனும் உண்டு ஒரு வினையாலே சீரணம் செய்து கொள்ளினும் கொள்ளலாம், பிராமணருடைய பொருளைஉண்டு சீரணம்செய்தலுக்குத் திரிலோகத்திலும் ஒருவினையும் இலது, தெய்வத்தின்பொருளை அபகரித்தாலும், வேதியர்பொருளை அபகரித்தாலும், அவ்விப்பிராரை அவமதித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாலும், குலம் நாசமடையும், சாஸ்திரப் பயிற்சியும் ஒழுக்கமுமுடைய உத்தமபிராமணனை யாராதித்து அவ ற்றைச்சிறிதும் அறியாத பிராமணனை அவமதித்தால் தோஷமிலது, சத்பிராமணனுக்குக் கொடுத்தல் அக்கி னியில் ஆகுதிசெய்தலை ஒக்கும், அசத்பிராமணனுக்குக் கொடுத்தால் சாம்பலில் ஆகுதிசெய்தலை ஒக்கும், சங்க ராந்தி புண்ணியகாலத்தில் தானதருமங்கள் செய்யின் அவற்றை ஆதித்தன் அளவில்லாமல் விருத்தி செய் கின்றான், இருபிறப்பாளருக்குரிய அறுதொழில்களுள் ஓதுவித்தலும் யாகம் செய்வித்தலும், தானம் ஏற்ற லும் ஆகிய மூத்தொழில்களில் தானம் வாங்கலாலே அதிக தோஷமிலது வாங்குதலா லுளதாகும் பாபம் ஸ்நானஜபங்களால் நிவர்த்தியாகும், மற்ற இரண்டால் வரும்பாவம் நிவர்த்தியடைதல் அரிதாகும், ஒழுக்கத்தி னின்று நீங்காமலும், பரான்னம் புசியாமலும் உள்ள பிராமணன் கடல்புடைசுற்றிப் புவிமுழுதும் தானம் வாங்கினும் அவன் தோஷத்திற் குட்படாமல் தானம் கொடுத்தவனுக்கு விசேடபலனை உண்டாக்குவன் என் றருளிப் பின்னும் கூறுகின்றனர்,

இருபத்தொன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

## முப்பதாம் அத்தியாயம்

சூதபுராணிகர், துவாதசோர்த்துவ புண்டரந்தரி த்த திருமேனியையுடைய பரமவைதிகர்களே! வாசு தேவன் விந்தை புத்திரனைநோக்கி விநாயகா! நான்கு வயதுக்குமேல் பன்னிரண்டு வயதுவரையில் குழந்தை கள் செய்யும் பாபம் தாய் தந்தையரைச் சாரும், தாய் தந்தைய ரிலராயின் அக்குழந்தைகளை ரட்சிக்கின்றவர் களைச்சாரும், அப்பாபத்துக்காக அவர்கள் பிராயச்சித் தம்செய்துகொள்ளவேண்டும். குழந்தைகளுக்குப் பாப மில்லை, குழந்தைகளை அரசன் தண்டிக்கலாகாது, அது நிற்க, பிணியால் பீடிக்கப்பட்டு ஸ்நானம் செய்யக் கூடாம விருக்கின்றவனுக்கு ஆசௌசம் நேர்ந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசௌச மில்லாவொருவன் பத்தாவர்த்தி ஸ்நானம் செய்து ஓராவர்த்தி அவனைத்தீண்டி, மீண்டும், அவ் விதம் பத்துஸ்நானம் பத்தாவர்த்திசெய்து, பத்தாவர் த்தி தீண்டுவானாேல்அவன்சுத்தனாகின்றான். பகவான் இலனென்று குழறுகின்றவன் யாவனோ அவன் மகா பாபியாவன். அவனுக்கும் துன்மரண மடைந்தவனுக் கும் உத்தரகிரியை செய்யவேண்டுவதில்லை. அங்ஙனம் இறந்தவன் யாகம் செய்தவனாயின் அக்கினியை நீரி லும், ஔபாசனத்தை நாற்சந்தியிலும், பாத்திரங்களை நெருப்பிலும் எரிதல்வேண்டும். பின்பு, வருடம் முடி கின்றகாலத்தில் தனையுடைய புத்திரன் சுக்கிலபட்சம் ஏகாதசியில் ஸ்ரீவிஷ்ணுவையும், யமனையும்ஆராதித்து மரித்தவனைக் குறித்துப் பத்துபிண்டங்கள் போட்டு அவற்றை எடுத்துக்கொண்டு சென்று புனலில்போட்டு தெற்குமுகமாய் நின்று மரித்தவன் பெயரை மூன்றுவர் த்தி இரைந்து சொல்லா நின்று நீராடி, இல்லமணுகி உபவாசமிருந்து, மறுதினம்வேதசாஸ்திரமோதிய ஏழு அல்லது ஐந்துபிராமணர்களை வரித்து மத்தியான்னத் தில் வடக்குமுகமாய் அவர்களை ஆசனத்தில் இருத்தி ஆராதித்துப்பீதகவாடைப்பிராணைப்பூசித்து, அப்பிரா மணர்களுக்குப் போஜனம்செய்வித்து, ஸ்ரீவிஷ்ணுவுக் கும்,பிரமனுக்கும்,உருத்திரனுக்கும், தூதர்களுடன் யம னுக்கும்மரித்தவனுக்குங்கிரமமாய் ஐந்துபிண்டம்வைத் துத் துஞ்சினவனுடையபெயரையும் கோத்திரத்தையும் சொல்லி, ஸ்ரீவிஷ்ணுநாமங்களையுச்சரித்துமாய்ந்தவன் பிதிரரோடுசேராமையால், அவனது ஐந்தாம்பிண்டத் தைஎடுத்தகற்றிப் பின்பு தண்டம் சமர்ப்பித்துத்தானங் கள் கொடுத்து மேற்சொன்ன பிராமணர்களில் மரித்த வனது ஸ்தானத்திலிருக்கின்றவனுக்கு அதிகம்தக்ஷிணை கொடுத்துப் பகவான் திருப்தியடைந்து கடாட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்து, அந்தணர்களைப் பிர தட்சண நமஸ்காரம் செய்து, பின்பு தெற்குமுகமாய் இருந்து தருப்பணம்செய்தல்வேண்டும் இன்னும் விசே டமாய்ச் செய்யவேண்டுமென்று புத்திரனுக்கு மன மிருந்தால் சுவர்ணத்தில் சர்ப்பஞ்செய்து சாஸ்திரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் சொல்லியபடி யாவும்செய்யலாம் என்றருளி வருட சிரார்த்தம் செய்யவேண்டியவிதி கூறியருளுவார்.

முப்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

---

# முப்பத்தொன்றும் அத்தியாயம்

சூதர் திருமலரடியார்களே! சாட்குண்ணியபரமன் பட்சிராசனைப் பார்த்துக் காசிபதனயா! புத்திரன் முதலியோர் தாய் தந்தையர் முதலியோரைக் குறித்து வருடந்தோறும் சிரார்த்தம் செய்தல்வேண்டும். தந்தை தனபுத்திரனுக்கும், தமயன் தனது தம்பிக்கும் சிரார்த்தம் செய்யும்படி நேரிட்டால் தலைமுறையி லுள்ளோரைக் குறிக்காமல் இறந்தவனைக் குறித்துமாத்திரம் செய்தல்வேண்டும். புத்திரன் தாய் தக்கையருக்கு செய்வானுயின் மூன்று தலைமுறையைக் குறித்தே செய்தல் வேண்டும். ஆசௌசம், விருத்தி முதலியவை நேரிட்டால் அவை நீங்கியதினத்தில் சிரார்த்தம் செய்தல் வேண்டும் மரித்தவனுக்குக் கிருத்தியம்செய்யும்போதே சபிண்டீகரணம் செய்யாமல் மாசிகமாத்திரம் செய்து வரும்போது ஆசௌசம் நேர்ந்து மாசிகம் நிறுத்தப்பட்டால் அம்மாசிகத்தை மறு மாசிகத்தோடு சேர்த்து செய்தல்வேண்டும். சபிண்டீகரணம் செய்து மாசிகம் செய்யப்பட்டுவந்தால் ஆசௌசத்தால் நின்ற மாசிகத்தை அவ் ஆசௌசம் நீங்கியதினத்தில் செய்யலாம் பூணூல்பூணாதபுத்திரன் சிரார்த்தம் செய்யும்படிநேரிட்டால் சங்கற்பவிதானமாய்ச் செய்தல்வேண்டும் ஒரே காலத்தில் தேசாந்திரத்தில்பலர் இறந்தனரென்றுகேள்வியுற்றால் யாவன் இறந்தானென்று முன்பு கேட்டானே அவனுக்கு முன்பும்மற்றவருக்குப்பின்பும் கிரியை செய்தல் வேண்டும். மரித்ததினந் தெரியாமல் செத்தானென்று மாத்திரம் கேள்வியுற்றால் அமாவாசையில் கருமஞ்செய்தல் வேண்டும். தினந்தெரிந்து மாதந் தெரியாவிட்டால் ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி இந்த மாதங்களில் கிருஷ்ணபட்சத்தில் அஷ்டமியிலேனும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசையிலேனும் செய்யலாம், தேசாந்திரத்தில் ஒருவன் இறந்த தினமாவது மாசமாவது தெரியாவிடின் யாத்திரைக்கு அவன்புறப்பட்டதிதியில்செய்தல் வேண்டும், ஒரு குடும்பத்துக்கு தலைவன் அவனைச்சேர்ந்த சிலரோடு தேசாந்திரஞ் சென்றகாலை அவரில் ஒருவன்மரித்து அத்தலைவன் ஆங்கு ஆசௌசம் அநுஷ்டித்துப் பின்பு மனைக்கு வருவனேல் அந்த காலத்தில் வீட்டிலிருந்த அவன் புத்திரன் வேறொருவருக்குச் சிரார்த்தம் செய்துகொண்டிருந்தால், வந்த தலைவன் சிரார்த்தம்செய்துமுடியும் வரையிலும் தூரத்திலிருந்து பின்புவருதல்வேண்டும், சிரார்த்தத்துக்குவரிக்கப்பட்ட பிராமணன் மேற்சொன்ன சமாசாரத்தை முன்னமே யுணர்ந்து சிரார்த்தம்செய்கின்ற புத்திரனுக்கு அதனை சொல்லாமல் சிரார்த்தத்தில்சாப்பிட்டால்தோஷம் அப்பிராமணன் கையதாகும், தாய்தந்தையர் இறந்த திதியை மறந்து விட்டால் அஷ்டமியிலேனும், ஏகாதசியிலேனும், அமாவாசையிலேனுஞ் செய்தல் வேண்டும். செய்யாமல்விடலாகாது சிரார்த்தஞ்செய்யாமல்விடுகின்றவன் யாவனோ அவனே சண்டாளன் ஒருவன் மரிக்குங்காலம்வரையிலும் நாள்தோறும் நித்தியசிரார்த்தஞ் செய்வனேல் அவனுக்கு மிக்க நலமுண்டாகும், இறந்தவனைக் குறித்ததல்லாமல் உயிரோடுள்ளவன் தன் க்ஷேமார்த்தமாய்ச் செய்யத்தக்கதாகிய இந்த நித்திய சிரார்த்தத்துக்கு விதியொன்றுமிலது, ஆவாகனமுமிலது சாப்பிடுகின்ற பிராமணனுக்கும் யாதொரு நிர்ப்பந்த விதியுமிலது, தினந்தோறும் ஒரு பிராமணனுக்குப் போசனம் செய்வித்தல் மாத்திரமே என்றருளி, ஓ! கருடா! நீ வினவியவற்றிற்கெல்லாம் விடைதந்தோம். இனி ஏதேனும் வினவுவாயேல் செப்புகின்றோம் என்று பகர்ந்தருளினர்.

முப்பத்தொன்றும் அத்தியாயம் முற்றிற்று.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பத்திரண்டாம் அத்தியாயம்

ஸ்ரீ வியாசர் மாணாக்கர் பகவத்திருவாராதன பரர்களே! கருடபகவான் வாசுதேவனைத்தொழுது,சுவாமி! உலகில் தோன்றுகின்றசீவரில் இந்தச்சீவன் பூர்வஜன்மத்தில் இன்னபாபம் செய்தவன் இந்தச்சீவன் இன்ன புண்ணியம்செய்தவனென்று பகுத்தறியலாகுமா பாபம் செய்தவனைத் தண்டிப்பார் யமனன்றி வேறொருவரும் இலரோ பகர்ந்தருள்க வெனலும், பக்தவத்ஸலன், காசிபதனயா! இந்தச் சீவன் இன்னபாபம் செய்தவனென்று நன்கு அறியலாகும், சிஷ்டன் தவறிப் பாபம் செய்தவனேல் அவனை அவனுடைய ஆசாரியன் சிட்சிக்கின்றனன். துஷ்டன் ஆசாரியன் ஆணையிலும் அடங்காமைகலால் அவனை அரசன் தண்டிக்கின்றனன். சிஷ்டனாயினும் துஷ்டனாயினும் யாரும் உணராவண்ணம், பாபம்செய்யின் யமன் நன்குதண்டிக்கின்றனன், பாபம்செய்தவன் அப்பாப நிவர்த்தியின் பொருட்டுப் பிராயச்சித்தம் செய்யாமல் மரிப்பனேல் அவன் யமலோகத்தில் நெடுங்காலம் நரகவாசஞ்செய்து. நாய்நரி முதலாகிய இழிந்த சன்மமடைந்து, பின்பு மானிடச் சன்மம்பெற்று முன்மாண்ட சன்மத்தில் செய்த பாபத்தையாவரும் அறியத்தக்க குறியுடையோனாவன். வார்த்தை சொல்லவொண்ணாமல் நெஞ்சடைப்புடையானை பூர்வசன்மத்தில் பொய்சொல்லி நரகவாசம் செய்தவனென்று மூங்கையானைச் சுரபிவிஷயத்தில் இழுதை நிகழ்த்தினவனென்றும், பிறன் இல்லத்தைக்கொளுத்தினவனென்றும், குஷ்டரோகியைப் பிரமஹத்தி செய்தவனென்றும், புகழுக்குற்ற பல்லுடையானை மத்தியபானம் செய்தவனென்றும், புழுக்குற்றநரகம் அடைந்தவனைச் சுவர்ணம் திருடினவனென்றும், விகாரமுள்ள மேனியுடையானைக் குருஸ்திரீகமனம் செய்தவனென்றும்; சண்டாள சன்ம மடைந்தவனைத் தன் சாதிப் பரஸ்திரீயைச் சேர்ந்தவனென்றும், வறிஞனை ஒருவனுக்கு ஒன்றும் கொடாதவனென்றும் உணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருடா! பதிதனுக்கும் அசச் சூத்திரனுக்கும் புரோகிதனுயிருந்தவன் பன்றிச்சன்மமடைகின்றனன். ஒருகிராமத்துக்குப் புரோகிதர்பலருளரேல் பாபம் முழுதும் ஒருவனையே சாராமல் புரோகித ரெல்லாரையும் சாரும், அங்ஙனமின்றி ஒருகிராமத்துக்குப் புரோகிதனொருவனே யிருப்பனேல் பாபமுழுதும் அவனையே சார்ந்து அப்புரோகிதன் கழுதைச்சன்ம மடைகின்றனன். ஸ்நானமும் சந்தியும், தேவதாராதனமும் செய்யாமல் புசித்தவன் காக்கைசன்ம மடைகின்றனன் இல்லம் அல்லது பந்தல் முதலிய இடங்களிலன்றி வெளியிலிருந்து உண்டவன் மனித சஞ்சாரமில்லாத ஆரணியத்தில் குரங்கு சன்மமடைகின்றனன். யாரும் அஞ்ச அதட்டிப்பேசினவன் பூனைச்சன்ம மடைகின்றனன். செடிகளைக் கொளுத்தினவன் மின்மினிச்சன்மம் அடைகின்றனன். பிராமணருக்கு தீயபதார்த்தம்கொடுத்தவனும் சூத்திரஸ்திரீயைப் புணர்ந்த பிராமணனும், வண்டி இழுக்கும் எருதுசன்மம் அடைகின்றனர். விப்பிரனுக்குப் பழையசோறு கொடுத்தவன் கருங்குரங்கு சன்மமடைகின்றனன். காரணமின்றியாரையும் விரோதித்தவன் குருடனாய்ப்பிறக்கின்றனன். புஸ்தகம் திருடினவன் பிறந்துசிறிதுகாலத்துக்கப்புறம் குருடனாகின்றனன். பிராமணகுடும்பத்தை நசிக்கச்செய்தவன் பெருகின்றமகவை எல்லாம் இழக்கின்றனன், பசித்துச்சோறு தம்மினென்றவனுக்கும் அன்னங் கொடாதவன் மக்களைப்பெருத பாவியாகின்ருன், ஆடை திருடினவன் உடும்புச்சன்மமடைகின்ருன். பிறருண்டுமரிக்க விஷம் கொடுத்தவன் சர்ப்பமாய்பிறக்கின்ருன். சன்யாசாச்சிரமம்பெற்றவனுடைய மனைவியைப் புணர்ந்தவன் பிசாசு சன்மமடைகின்ருன். மற்ற அன்னிய ஸ்திரீகளைக்கூடினவன் சிறுவயதிலிறக்கின்ருன். குருஸ்திரீயை அணைய இச்சித்தவன் ஒந்திச் சன்மமடைகின்ருன், தனக்குக் கீழ்ஜாதிப் பெண்ணை கூடினவன் செந்நாய்ச் சன்மமடைகினருன். குளம் வெட்டிக் கிணறு எடுத்துப் பின்பு அவற்றைத் தூர்த்தவன் மீன்சன்மமடைகின்ருன். நீதி விரோதம் செய்தவன் கோட்டான் சன்மமடைகின்ருன். எகோதிஷ்டம் சாப்பிட்டவன் நாய்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்மமடைகின்றான், தத்தாபகாரம் செய்தவன் நரிச் சன்மம் அடைகின்றான். இராஜஸ்திரீயைப் புணர்ந்த வன் இழிசன்மமடைகின்றான். வேதியருக்குத்தோஷம் கற்பித்தவன் ஆமைச்சன்ம மடைகின்றான். மூன்று வருஷம் வரையிலும் தட்சணைபெற்று ஆராதனம்செய் தவனும், வேதமோதுவித்தவனும் சண்டாளச் சன்ம மடைகின்றனர். கனி, காய், பூவிருக்கின்ற விருக்ஷங் களை வெட்டினவன் ஒரு கதியுமில்லாதவனாகின்றான். வாசனை பொருளைத் திருடினவன் தீநாற்றமுடைய சரீர மடைகின்றான்.பிறனுடைய எப்பொருளையேனும் கவர் ந்தவன் புழுமுதலிய இழிசன்ம மடைகின்றான். யம புரிக்குச் செல்லும் மார்க்கத்தில் சீயாலும், இரத்தத்தா லும், பலவகைமிருகங்களாலும், முதலைகளாலும் கீடங் களாலும் நிறைந்த வைதரணியென்ற ஒரு நதி உள தென்றோமே! அந்நதியில் உருக்கியநெய்போல ஊனீர் பெருகா நின்றது,மகாபாபங்களைச் செய்தவர்களுக்கெல் லாம் அந்நதி ஸ்நானமா யிராநின்றது. எவற்றாலும் நம்மையொப்பவனும் ஒருவனுளனோவென்று செருக் குற்றவனும், தாய்தந்தையரையும், குருவையும் புரோகி தனையும், அவமதித்தவனும் தன்னை நேசித்தவனுக்கும் தனக்குச்சீவனம்செய்வித்தவனுக்கும், ஸ்திரீகளுக்கும், குழந்தைகளுக்கும்,கண்முதலிய இந்திரியக்குறைவுள்ள வருக்கும் தீங்குசெய்தவனும், விவாக விஷயத்திலும் பிராமணவிஷயத்திலும் தான விஷயத்திலும், தரும விஷயத்திலும் மாறு புரிந்தவனும். பிராமணருக்கு ஏதேனும் ஒன்று தருகிறேனென்று சொல்லி, இன்று நாளையென்று அலைவித்தவனும், புரோகிதன் மனைவி யைப் புணர்ந்தவனும், ஸ்ரீமத் ராமாயண பாரத பாக வதங்கள் படிக்குமிடத்தில் வீண் வார்த்தை பேசின வனும், மணம் புரியுங்காலை கன்னிகைகளுக்குத் தோஷம்கற்பித்தவனும், பசு முதலிய மிருகங்களுக்குச் சமமாய்த் தீர்த்தம் கொடாமல் தனக்குரியவற்றிற்கு மிகுதியாயும், பிறனுக்குரியவற்றிற்குக் குறைவாயும் கொடுத்தவனும் ஒருபொருளை ஒருவனுக்குக்கொடுத்து கொடுத்தோமே யென்று பின்பு துக்கித்தவனும் பிரா மணனுக்குரிய கருமானுஷ்டானங்களை விட்டுப் புலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லுண்ட பிராமணனும், பகவானிலன் என்றவனும் எப்போதும் பிறரை முனிந்தவனும், பிறன்பழிகூறின வனும் அந்நதியிலேயே முழுகி மிருகங்களாலும், முதலைகளாலும், கீடங்களாலும் துன்பப்படுபவர்.

தார்க்ஷியா! தீவினைசெய்யாமல் நல்வினை செய்த சீவன் இறுதியுற்ற பின்பு சுவர்க்கவாசம் செய்து நல்ல க்ஷேத்திரத்தில் உத்தமகுலத்தில் சர்வசாஸ்திர சம்பன்னனுய் தன்முடையவனுய்ப் பிறந்து வாழ்வன். தந்தை மரித்த காலை ஆசௌசம் நீங்குவதற்குள்புத்திரன் இப் புராணத்தை கேட்பனேல் அத்தந்தை நிரதிசய இன்ப வீடாகிய நம்முலகுஎய்துவன். தாய்மரித்தகாலை கேட்பனேல் அத்தாய் புருடசன்மமடைந்து சுவர்க்கம் சார்வள். பிதிரர்களும் நற்கதியடைவர், சங்கராந்தியிலும், விஷுவென்னும் புண்ணிய தினத்திலும், கிரகணத்திலும், சிரார்த்த தினத்திலு மிப்புராணத்தைப் படிப்போரும், கேட்போரும், படிப்பிப்போரும் இறுதியில் நல்லுலகு சேர்வர். அவர்களுடைய பிதிரர்களும் உத்தமலோக மடைவர்கள். கோடி கன்னிகாதானஞ் செய்தலாலும், நூறு ஆவர்த்தி சோடமகாதானம்செய்தலாலும், கயாசிரார்த்தம் செய்தலாலும் வரும் புண்ணிய மிப்புராணத்தை கேட்டலால் உளதாகும் சீவருக்கு யமலோக பயத்தை நிவர்த்திப்பதுவும், மோட்ச மார்க்கத்தைத் தெரிவிப்பதுவும் ஆகிய இப்புராணம் உலக நன்மையின் பொருட்டு நினக்கு நம்மால் சொல்லப்பட்டதென்று பத்தராவி திருவாய்மலர்ந்தருளினர். பின்னர் கருடபகவான் பரமகாருணியனுகிய பகவானை வலம்வந்து திருவடியைத்தொழுது, வேதாவுக்கு வேத மோதியருளிய திருநாவல் சர்வேசன் புராணம்சொல்லியருளப்பெற்றேனே! எத்தவம் புரிந்தேனே! என மகிழ்வுற்றனன். சூதர், நைமிசாரணியவாசிகளே! புராண சிரவணம் செய்ய விரும்பிய நுங்கட்கு அந்தவாறு சொன்னேனென்று கீளர்த்தி ஸ்ரீ ஹரிநாமங்களைப் புகன்றிருந்தனர். அக்காலை புராண சிரவணஞ்செய்த சௌனகாதி மகருஷிகளெல்லாரும் ஆநந்தவேலையில் ஆழ்ந்து புராணிகரை நோக்கி, சூதமாமுனிவரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியோங்களிடத்தில் கருணைசெய்து இப்புராணம் பகர்ந்தருளினீர். அனேக புராணங்கள் தேவர்முக மாய்க் கேட்டிருக்கின்ரேம். சீவனுக்கு உறுதி கற்பிக் கும் புராணம் இதனினும் மற்ருென்றிலது-தேவருக்கு விசேஷமாய்ச் சமர்ப்பித்தல் வேண்டுமென்ற எண்ணம் எங்கட்குத் திண்ணமாயுளது. எங்கள் நிலைமை தேவ ருக்குத் தெரியாததன்று. யாங்கள் எல்லாம் எளியே மாகவே யிருக்கின்ரேம் என்று புகன்று கைந்நீர், அடி நீர், உண்ணீர் கொடுத்துப்போற்றினர். அவருள் ஒருவர் வெறுமனே புராணம் கேட்கலாகாதென்று புராணிகருக்கு ஒரு கடம்கொடுத்தனர். ஒருவர் மரவுரி கொடுத்தனர். ஒருவர் புலித்தோல் கொடுத்தனர். ஒரு வர் பூணூல் கொடுத்தனர். ஒருவர் யாதைக் கொடுக்க லாமென்று சற்றேயாலோசித்துக் குசைப்புல் கொடுத் தனர். ஒருவர் சூதரைப்போலப் புராணம் சொல்லு வோர் திரிலோகத்திலும் உளரோவென வாயாரப் புகழ்ந்தனர். ஒருவர் பன்முறை தண்டம் சமர்ப்பித்த னர். பின்னர் யாவரும் புராணிகரை வலம் வந்து தண்டம் சமர்ப்பித்து தத்தம் ஆசிரமமேகினர்.

ஸ்ரீ கருடபுராண வசனம்

முற்றிற்று.

———

# கணபதி துதி

மூஷிகவாகன மோதக ஹஸ்த ஓம் கண நாதா ஓம்
ஸ்யாமள கர்ண விளம்பித சூத்ர ஓம் கணநாதா ஓம்
வாமன ரூப மகேஸ்வர புத்ர ஓம் கணநாதா ஓம்
விக்ன விநாயக பாத நமஸ்தே ஓம் கணநாதா ஓம்

# பஞ்ச புராணம்

## தேவாரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றன்னை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்தவா ரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிட
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற்குருவாகிப்
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரிய சித்தி மாலை

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும்
செஞ்சொல்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்-
உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை
முகத்தானைக்
காதலால் கூப்புவர் தம் கை.

சகல காரியங்களிலும் சித்தி பெற யானை முகனைத் துதித்து இந்தப் பாடலைப் பாடினால் ஒருவர் தான் எடுத்த காரியம் எளிதில் நிறைவேறும்.

1. பந்தம் அகற்றும் அநந்த குணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ
சந்த மறை ஆகமங்கலைகள்
அனைத்தும் எவன்பால்தக வருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றோம்.

2. உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றாய் நிற்கும் பொருளெவனவ்
வுலகிற் பிறக்கும் விகாரங்கள்
உறாத மேலாம் ஒளியாவன்?
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன் அந்த
உலக முதலாங் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றோம்.

3. இடர்கள் முழுவதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் செனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனால் முடிவுறும் அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்தமாகி அறிந்தறியாத்
திறத்தினாலும் உயிர்க்கு நலம்
ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றிஅறிவிப் பான் எவன் அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

5. செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன் விளைவில்
ஊட்டி விடுப்பான்எவன் அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றோம்.

6. வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விறங்குவர
நாத முடிவில் வீற்றிக்கும்
நாதன் எவன்எண் குணன் எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

7. மண்ணின் ஒர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான்எவன் தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான்எவன்வான் இடைஒன்றாம்
அண்ணல் எவன் அக்கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்?
பாச அறிவில் பசு அறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்?
பாச அறிவும் பசு அறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன் அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

இந்தக் காரியசித்தி மாலையைக் காலை, மதியம், மாலை மூன்று வேளைகளிலும் விநாயகரை எண்ணி எட்டுநாட்கள் பாடுபவர்கள் நினைத்த காரியம் சித்திக்கும். சதுர்த்தி விரத தினத்தன்று எட்டு முறை பாடினால் எட்டுச் சித்திகளும் கைகூடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## *திருப்பொற்சுண்ணம்

திருச்சிற்றம்பலம்

முத்துநற் றாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபநற் றீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியுங்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. ௨௯௨௩

பூவியல் வார்சடை யெம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. ௨௯௨௪

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோனயன் றன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
கேய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே. ௨௯௨௫

---

*குறிப்பு: இத் திருப்பதிகம் திருக்கோவில்களில் தீர்த்த வாரியின்போது சிறப்புடன் ஓதப்பெற்றுத் திருப்பொற்சுண்ணம் அமைத்து இறைவன் இறைவியர்க்காட்டப்படுகின்றது.

மேலும் செந்நெறிச் செல்வர்களின் திருவடிப் பேறெய்திய ஆருயிர்களின் திருமேனித் திருமுழுக்கின்பின் இவை பாடப்பெற் றிடிக்கப்பட்ட மஞ்சட்பொடி அம்மேனிக்கண் தூவப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசணி மின்களு லக்கையெல்லாங்
காம்பணி மின்கள் கறையுரலே
நேச முடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. உருஉசு

அறுகெடுப் பார்அய னும்அரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்ல தெடுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணப்பற்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. உருஉஎ

உலக்கை பலவோச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை யாண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே. உருஉஅ

சூடகந் தோள்வளை ஆர்ப்பவார்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்பவார்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்பவார்ப்ப
நாமு மவர்தம்மை ஆர்ப்பவார்ப்ப
பாடக மெல்லடி யார்க்கும்மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்
காடக மாமலை அன்னகோவுக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. உருஉகூ

வாள்தடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை யார்ப்பவண் கொங்கைபொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. உசு0

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையகம் எல்லாம் உரலதாக
 மாமேரு வென்னும் உலக்கைநாட்டி
மெய்யென்னும் மஞ்சள் நிறைய அட்டி
 மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
 செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
 ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. ௨௱௫௰௧

முத்தணி கொங்கைகள் ஆடஆட
 மொய்குழல் வண்டினம் ஆடஆட
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
 செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
 பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
 ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. ௨௱௫௰௨

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
 வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
 பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
 சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
 காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. ௨௱௫௰௩

மையமர் கண்டனை வானநாடர்
 மருந்தினை மாணிக்கக் கூத்தன்றன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
 அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
 போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோட்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
 பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே. ௨௱௫௰௪

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
 வெண்நகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை யாரமு தெங்களப்பன்
 எம்பெரு மானிம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
 தமையன்எம் மையன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
 பொற்திருச் சுண்ணம் இடித்துநாமே. ௨௱௫௰௫

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயித ழுந்துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அரா இரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. ௨௫௬

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற்கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்து நாமே. ௨௫௭

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோ
டாட்செயும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்து நாமே. ௨௫௮

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்து நாமே. ௨௫௯

அயன்தலை கொண்டுசெண் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல்பாடி
ஏழை அடியோமை யாண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்து நாமே. ௨௬௰

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்ட மலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும் பாடி மதியும்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே. ௨௫௪௧

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாயிரு ளாயினார்க்குத்
துன்பமு மாயின்ப மாயினார்க்குப்
பாதியு மாய்முற்று மாயினார்க்குப்
பந்தமு மாய்வீடு மாயினாருக்
காதியு மந்தமு மாயினாருக்
காடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. ௨௫௪௨

திருச்சிற்றம்பலம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org